# தேவன்மேல் நம்பிக்கையாயிரு

எசேக்கியல் 37:1–14

# 40 நாள்

## உபவாசம் & ஜெபம்

7 ஆகஸ்ட் - 15 செப்டம்பர்
2017

NECF MALAYSIA

2017

# தேவன்மேல் நம்பிக்கையாயிரு

எசேக்கியல் 37:1–14

## 40 நாள்

## உபவாசம் & ஜெபம்

7 ஆகஸ்ட் -15 செப்டம்பர்
2017

NECF
MALAYSIA

2017



# உள்ளடக்கம்

## பக்கம்


05 – 06 – எசேக்கியேல் 37:14
07 – 08 – நம்பிக்கையற்றோருக்கான நம்பிக்கை
09 – 10 – வேதாகமத்தை ஒரு வருடத்திற்குள் வாசித்து முடிப்பது
11 – 12 – உபவாசித்து ஜெபிக்க வேண்டிய அவசியம் என்ன? தேவனிடம் கவனித்துக்கேட்பது
12 – 13 – பொறுப்புடைமைப் பகுதி – அறிமுகம் எப்படி இந்த 40 நாள்கள் உபவாச ஜெபத்தை மகிழ்ச்சியோடு நடைமுறைப்படுத்துவது?
14 – 18 – நாள் 1 – 5
19 – பொறுப்புடமைப் பகுதி 1 – நாள் 1 – 5
20 – 24 – நாள் 6 – 10
25 – பொறுப்புடமைப் பகுதி 2 – நாள் 6 – 10
26 – 30 – நாள் 11 – 15
31 – பொறுப்புடமைப் பகுதி 3 – நாள் 11 – 15
32 – 36 – நாள் 16 – 20
37 – பொறுப்புடமைப் பகுதி 4 – நாள் 16 – 20
38 – 42 – நாள் 21 – 25
43 – பொறுப்புடமைப் பகுதி 5 – நாள் 21 – 25
44 – 48 – நாள் 26 – 30
49 – 50 – பொறுப்புடமைப் பகுதி 6 – நாள் 26 – 30
51 – 55 – நாள் 31 – 35
56 – 57 – பொறுப்புடமைப் பகுதி 7 – நாள் 31 – 35
58 – 62 – நாள் 36 – 40
63 – 64 – பொறுப்புடமைப் பகுதி 8 – நாள் 36 – 40

# எசேக்கியேல் 37:1–14

1. கர்த்தருடைய கை என்மேல் அமர்ந்து, கர்த்தர் என்னை ஆவிக்குள்ளாக்கி வெளியே கொண்டுபோய் எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கின் நடுவில் நிறுத்தி.

2. என்னை அவைகளின் அருகே சுற்றி நடக்கப்பண்ணினார் இதோ, பள்ளத்தாக்கின் வெட்டவெளியிலே அந்த எலும்புகள் மகா திரளாய்க்கிடந்தது அவைகள் மிகவும் உலர்ந்ததுமாயிருந்தது.

3. அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இந்த எலும்புகள் உயிரடையுமா என்று கேட்டார் அதற்கு நான்: கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் அதை அறிவீர் என்றேன்.

4. அப்பொழுது அவர்: நீ இந்த எலும்புகளைக் குறித்துத் தீர்க்கதரிசனம் உரைத்து, அவைகளைப் பார்த்துச் சொல்லவேண்டியது என்னவென்றால்: உலர்ந்த எலும்புகளே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.

5. கர்த்தராகிய ஆண்டவர் இந்த எலும்புகளை நோக்கி: இதோ, நான் உங்களுக்குள் ஆவியைப் பிரவேசிக்கப்பண்ணுவேன் அப்பொழுது உயிரடைவீர்கள்.

6. நான் உங்கள்மேல் நரம்புகளைச் சேர்த்து, உங்கள்மேல் மாம்சத்தை உண்டாக்கி, உங்களைத் தோலினால் மூடி, உங்களில் ஆவியைக் கட்டளையிடுவேன் அப்பொழுது நீங்கள் உயிரடைந்து, நான்கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்களென்று உரைக்கிறார் என்று சொல் என்றார்.

7. எனக்குக் கட்டளையிட்டபடியே நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன் நான் தீர்க்கதரிசனம் உரைக்கையில் ஒரு இரைச்சல் உண்டாயிற்று இதோ, அசைவுண்டாகி, ஒவ்வொரு எலும்பும் தன்தன் எலும்போடே சேர்ந்துகொண்டது.

8. நான் பார்த்துக்கொண்டிருக்கையில் இதோ, அவைகள்மேல் நரம்புகளும் மாம்சமும் உண்டாயிற்று, மேற்புறமெங்கும் தோலினால் மூடப்பட்டது ஆனாலும் அவைகளில் ஆவி இல்லாதிருந்தது.

9. அப்பொழுது அவர் என்னைப்பார்த்து: நீ ஆவியை நோக்கித் தீர்க்கதரிசனம் உரை மனுபுத்திரனே, நீ தீர்க்கதரிசனம் உரைத்து, ஆவியை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், ஆவியே, நீ காற்றுத்திசை நான்கிலுமிருந்து வந்து, கொலையுண்ட இவர்கள் உயிரடையும்படிக்கு இவர்கள்மேல் ஊது என்கிறார் என்று சொல் என்றார்.

10. எனக்குக் கற்பிக்கப்பட்டபடி நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன் அப்பொழுது ஆவி அவர்களுக்குள் பிரவேசிக்க, அவர்கள் உயிரடைந்து, காலூன்றி, மகா பெரிய சேனையாய் நின்றார்கள்.

11. அப்பொழுது அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இந்த எலும்புகள்
இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருமே இதோ, அவர்கள் எங்கள்
எலும்புகள் உலர்ந்துபோயிற்று எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று
நாங்கள் அறுப்புண்டுபோகிறோம் என்கிறார்கள்.

12. ஆகையால் நீ தீர்க்கதரிசனம் உரைத்து, அவர்களோடே
சொல்லவேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவர்
உரைக்கிறார், இதோ, என் ஜனங்களே, நான் உங்கள்
பிரேதக்குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக்குழிகளிலிருந்து
வெளிப்படவும், உங்களை இஸ்ரவேல் தேசத்துக்குவரவும்பண்ணுவேன்.

13. என் ஜனங்களே, நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறந்து,
உங்களை உங்கள் பிரேதக்குழிகளிலிருந்து வெளிப்படப்பண்ணும்போது,
நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்.

14. என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன் நீங்கள் உயிரடைவீர்கள்
நான் உங்களை உங்கள் தேசத்தில் வைப்பேன் அப்பொழுது நான்
கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள் இதைச் சொன்னேன், இதைச்
செய்வேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

# நம்பிக்கையற்றவருக்கு நம்பிக்கை

என்.இ.சி.எஃப். தலைவர் அருட்திரு இயூ ஹங் செங்

நெருக்கடியான சூழலின் மத்தியில்தான் எழுப்புதல் எப்பொழுதும் முற்படுகிறது. எசே 37:1-14ல் தேவன். எசேக்கியேலுக்கு பாதாளத்தில் குவிந்து கிடந்த ஒரு எலும்புக்குவியலை தரிசனமாக காண்பிக்கிறார்.

தேசமே மரித்த நிலையில், உலர்ந்த எலும்புகளோடு, மீதமாயிருப்பவையெல்லாம் பல காலமாய் சிதைந்து கொண்டும் அழுகிக்கொண்டுமிருக்கிற இஸ்ரவேலின் வீட்டாரைக்குறிக்கிறது. உயிர்ச்சாரமெல்லாம் வெளியேறி ஜீவனற்றுப்போயிற்று. இந்த சூழ்நிலை முற்றிலும் நம்பிக்கையற்றதும் தனித்துவிடப்பட்டதையும்குறிக்கிறது. இந்த எலும்புகள் உயிரடையுமா எனும் கேள்விக்கு நிதானமான பதிலுடன் தன்னுடைய நிலையே உதவியற்ற இக்கட்டு நிறைந்ததாகக் காணப்பட்டது என்று உணருகிறான்.

நமது நிலத்திற்கும் சபைக்கும் சம அளவில் கோடு வரையப்பட்டுள்ளது. அந்த காரணத்தினால்தான் நமது தேசத்தில் எழுப்புதலுக்காக அநேகர் இன்னும் அழுதுகொண்டிருக்கின்றனர்.

எசேக்கியேல் 37ல் மனித பார்வையில் எல்லாமே நம்பிக்கையற்ற நிலை காணப்பட்டாலும் தேவ பிள்ளைகள் அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவார்களேயானால் எழுப்புதல் சாத்தியமே.வெளிப்படையாக அபத்தம் காணப்பட்டாலும், எசேக்கியேலை நோக்கி உலர்ந்த எலும்புகளைப்பார்த்து தீர்க்கதரிசனம் உரை என்று பணித்தார். எசேக்கியேலின் கீழ்ப்படிதல் உடனடியாக பலனளித்தது. அதின் விளைவாக எலும்புகள் ஒன்று சேர்ந்து, நரம்புகளும் சதையும் மூடி சரீரமாக உருவெடுத்தது ஆனால் அதற்கு உயிர் இல்லை.

வல்லமையில்லாத சரீரம் - இவை நமக்கு பழக்கப்பட்ட ஒன்றுதான்.

மலேசியாவின் சபைகள் ஒப்புக்கொடுத்தலோடு, வார்த்தைகளை அறிந்து, கீழ்ப்படிகிற தருணம் வந்துவிட்டது. துணிவாக தீர்க்கதரிசனம் உரைக்கும் எசேக்கியேல்கள் எங்கே? சபைகள் இந்த தேசத்தில் உயிரோடு இருக்கிறதாக காணப்பட்டாலும் அவை செத்ததுதான். எசேக்கியேல் 37ல் செத்த பிணங்களுக்கு செய்ததுபோல பரிசுத்த ஆவி செத்த சரீரத்திற்கு தமது சுவாசத்தை ஊதி உயரடையச்செய்யமுடியும்.

பிணங்களை நிரப்பும்படியாக ரூவா (சுவாசம், காற்று அல்லது ஆவி) பிரசங்கிக்கும் ஒரு காலம் நம்மீது வந்திருக்கிறது.(வ 9)

சபையை உயிரடையச்செய்வது மாத்திரமல்ல அதனை ஒரு மகத்தான சேனையாகவும் ஆக்க வல்லவராயிருக்கிறார். (வ 10)

அடுத்த 40 நாள்களுக்கு நாம் உபவாச ஜெபத்திற்குள் கடந்து போகும்போது, நமது தளர்ந்துபோன ஆவிக்குரிய நிலைகளைக்காணவும், தேவனுடைய இடைபடுதல் இல்லாத தேசத்தின் நம்பிக்கையற்ற சூழலும், நமக்கு பரிசுத்த ஆவியின் சுவாசம் தேவை என்பதையும் நாம் காணமுடியும.

பெரிய சேனையாக நம்மை ஆக்குவதற்கு தேவனுடைய இரக்கத்திற்கு அழுது கெஞ்சிடுவோமாக. சிதறிக்கிடந்த உலர்ந்த எலும்புகள் மீண்டும் மகத்தான சேனையாக உயிரடையும். மீண்டுமொரு முறை பரிசுத்த ஆவி அசைவாடும் நேரம் வந்துவிட்டது.

## வேதாகமம் முழுவதும் வாசிக்க வேண்டிய காரணங்கள்.

தேவனைக்குறித்து இன்னும் அதிகம் அறிந்துகொள்ள

தேவனைக்குறித்த ஒரு முழுமையான புரிந்துகொள்ளல் அதனை வெளிப்படுத்திய அவருடைய வார்த்தையை படிப்பதின் மூலம் அறிந்துகொள்ளலாம்.குறிப்பிட்ட பகுதிகளை மாத்திரம் வாசிப்பதானது குறுகிய மற்றும் சமனில்லாத புரிந்துகொள்ளுதலைத்தரும்.

அது நம் விசுவாசத்தை பலப்படுத்தும்

வேதத்தை முழுமையாக வாசிப்பது என்பது அவரில் நம்முடைய விசுவாசத்தை அதிகரிக்கும். தானியேல் 11:32 சொல்லுகிறது: தங்கள் தேவனை அறிந்திருக்கிற ஜனங்கள் திடங்கொண்டு, அதற்கேற்றபடி செய்வார்கள். எனவே தேவனுடைய ஆலோசனையை நாம் முழுமையாக அறிந்துகொண்டால் நமது விசுவாசம் மேம்படும்.

இன்னும் சிறப்பாக ஜெபிக்க ஏதுவாக்கும்

வேதாகமம் முழுவதும் வாசிப்பது என்பது தேவனுடைய சித்தத்தை புரிந்துகொள்ளவும் அதன்வழி மேலும் சிறப்பாக ஜெபிக்கவும் முடியும். வேதாகமம் முழுவதும் வாசிப்பது என்பது வேதாகம சாரத்தின் உதவியோடு ஜெபம்செய்ய உதவும். மேலும் வேதாகமம் முழுவதும் வாசிப்பது நீண்ட நேரமும், ஆழத்துடனும் பிரார்த்திக்க உதவும்.

அது நம் ஆவியின் மனிதனை கட்டும்

தேவ வசனமானது நமது ஆவிக்குரிய மனிதனுக்கு உணவாகும். மத்தேயு 4:4 - மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார். ஜெபத்திற்கு (ஆவிக்குரிய பயிற்சி) முன்பாக வசனத்தை உட்கொள்ளுவது என்பது (ஆவிக்குரிய உணவு), வாழ்க்கையின் சவால்களையும் புயலையும் எதிர்கொள்ள ஏதுவான ஆவிக்குரிய பலத்தை அருளும்.

வாசிக்கும் திட்டம்

வேதத்தின் ஆகமங்கள் வரிசைக்கிரமமுறைமையின் அடிப்படையில்தான் வாசிக்கும் திட்டம் அமைந்திருக்கிறது. குறிப்பிட்ட பகுதி, எழுதப்பட்ட நோக்கம் விளங்கும் வகையில், வசனமே அதனை விளங்கச்செய்யும் மொழியாக்கத்தில் அறியப்படும். எடுத்துக்காட்டாக 150 சங்கீதங்களில், 76 சங்கீதங்கள் தாவீது ராஜாவின் வாழ்க்கையின் பல்வேறு அனுபவ சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. மற்றுமொரு உதாரணம், அப்போஸ்தல நடபடிகையில் பவுல் ஸ்தாபித்த சபைகளின் விவரங்கள் சபைகளுக்கு அவர் எழுதின நிருபங்கள் மூலமாக விளக்கப்படுகிறது. வேதத்தை வருடத்திற்கு 3 முறை வாசித்து முடிக்க விரும்புகிறவர்கள் ஒரே நாளில் 3 நாள்கள் வாசிக்கும் முறையை கடைபிடிக்கலாம்.

எப்படி எப்பொழுதும் உற்சாகம் கொள்ளலாம்
ஒரு சிறு குழுக்கள் ஸ்தாபியுங்கள். ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்தும் வண்ணம் "வாட்ஸப் பயன்படுத்தலாம". இறுதியான ஆக்கியோனாயிருக்கிற பரிசுத்த ஆவியானவரிடம் ஜெபித்து நீங்கள் வாசிப்பதை விளங்கிக்கொள்ளச்செய்யும்படி உங்கள் கண்களை திறக்க்ச்செய்யும்படி கேட்கலாம்.

உபவாசித்து ஜெபிக்க வேண்டிய அவசியம் என்ன?
வருகிற 7 ஆகஸ்ட் 2017 தொடங்கி 40 நாள்களுக்கு இந்த ஆண்டிலும் நாடு முழுவதிலும் உபவாச ஜெபம் ஏறெடுக்கப்படும். ஏன் 40 நாள்கள் ஒதுக்கி தேசத்திற்கு மன்றாட வேண்டும்? நமது தேசத்திற்கு அவருடைய திட்டத்தை ஏற்கனவே வரைந்திருப்பதினால் தேவனுக்கு ஜெபத்தில் அறிவிக்க வேண்டிய அவசியம் நமக்கு இராது. எனினும் நாம் அவருக்கு முன்பாக நம்மைத்தாழ்த்தி, அவர் முகம் தேடி, அவர் மனதில் கொண்டிருக்கிறார் என்பதையும், நம்மை செழிப்படையச்செய்ய, ஒரு நம்பிக்கையையும் எதிர்காலத்தையும் தரும் திட்டத்தையும் கண்டுபிடிக்க வேண்டும் (எரேமியா 29:11-13)

வருகிற 7 ஆகஸ்ட் 2017 தொடங்கி 40 நாள்களுக்கு இந்த ஆண்டிலும் நாடு முழுவதிலும் உபவாச ஜெபம் ஏறெடுக்கப்படும். ஏன் 40 நாள்கள் ஒதுக்கி தேசத்திற்கு மன்றாட வேண்டும்? நமது தேசத்திற்கு அவருடைய திட்டத்தை ஏற்கனவே வரைந்திருப்பதினால் தேவனுக்கு ஜெபத்தில் அறிவிக்க வேண்டிய அவசியம் நமக்கு இராது. எனினும் நாம் அவருக்கு முன்பாக நம்மைத்தாழ்த்தி, அவர் முகம் தேடி, அவர் மனதில் கொண்டிருக்கிறார் என்பதையும், நம்மை செழிப்படையச்செய்ய, ஒரு நம்பிக்கையையும் எதிர்காலத்தையும் தரும் திட்டத்தையும் கண்டுபிடிக்க வேண்டும் (எரேமியா 29:11-13).

தேவனுடைய பணிகளைச்செய்வதற்கு முன் ஜெபத்திலும் உபவாசத்திலும் தரித்திருந்த அநேக மனிதர்களுடைய உதாரணங்கள் வேதத்தில் நிறைந்து காணப்படுகின்றன.தேவனுடைய அழைப்பிற்கு மறுமொழி கொடுத்து சீனாய் மலைக்கு ஏறிச்சென்ற மோசே 40 நாள்களுக்கு உபவாசித்திருந்தான் எனப்பார்க்கிறோம். உபவாசம் முடிகிற வரைக்கும் பத்து கற்பனைகளை தேவன் அவனுக்கு அருளவில்லை (உபாகமம் 9:9-12) ஜீவனை ஆக்கியோன், தன் கற்பனைகளை முன்னமே ஆயத்தப்படுத்தியிருந்தும் தேசத்திற்கான திட்டத்தில் தம் மகிமை வெளிப்படும்படி அதனை கொண்டு செல்லுகிறவருக்காக பொறுமையாக காத்திருந்தார்.

தம் மகிமையான ஊழியத்தை துவங்குமுன்னர், இயேசு 40 நாள்கள் வனாந்திரத்தில் உபவாசத்தில் தரித்திருந்து, தேவ ஆவியினால் வல்லமை பெற்றார். (மத் 4:2 லூக் 4:2). தேவ ஆவியானவர்தான் அவரை வனாந்திரத்திற்கு அழைத்துச்சென்றார். (மத் 4:1 லூக் 4:1). தனித்த இடத்தில் சொகுசும் வசதிகளும் அற்ற இடத்தில் தேவனைத்தவிர வேறு ஒருவரையும் சார்ந்திருக்கமுடியாத சூழல்., தேவனை முழுமையாக நம்பி, சோதனைகளை மேற்கொள்ள, தன் சரீர பசியிலும் தேவ வசனத்தை மேற்கோள்காட்டினார். மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் (மத் 4:4).

அந்தியோகியாவின் சபை, கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக்கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார். (அப் 13:1-3). அதன்பின் பவுல் மிஷனரி ஊழியத்தில் உயர எழும்பினான். தேவ ஆவியானவர்தான் அருட்பணி அனலை மூட்டினார் ஆனாலும் பவுல் அவரின் பிரசன்னத்தை எடுத்துச்செல்கிற பாத்திரமாக தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டான்.

தேவ சித்தத்தை செய்கிறவனாக தன்னை தாழ்த்தின மோசே உபவாசத்திற்குப்பிறகு எழும்பினான்., இயேசு வனாந்தரத்தில் சோதனைகளை மேற்கொண்டு இருளின் இராஜ்ஜியத்தை நொறுக்க ஆயத்தப்படுத்தினார். இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்கொண்டு ரோம சாம்ராஜ்ஜியத்தின் பட்டணங்களையே தலைகீழாக மாற்றியமைக்க பயணம் புறப்பட்டான். எப்பொழுதெல்லாம் அவருடைய சித்தத்தை நம்மில் வைக்கும்பொழுது நாம் நம்மை வெறுமைப்படுத்தி, அவருடைய பிரசன்னத்தைக்கொண்டு நம்மை நிறப்பி, அவருடைய இதயத்துடிப்பை நாம் அறிந்து அவருக்கு ஆம் என்று சொல்லுவதற்கு, உபவாசமும், ஜெபமும் அனுகூலமாக்குகின்றன.

சில சமயங்களில் அவருடைய இரக்கத்தினால் அவர் கரத்தை அசையப்பண்ணினாலும், நமது ஊக்கமான ஜெபமானது நம் ஜென்ம சுபாவத்துடனும், சிந்தையுடனும் ஜெபிப்பதின் மூலமாக எழுப்புதலின் உருமாற்றம் நடைபெறாது. தேவன் இந்த தேசத்தில் நம்மூலமாக தாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமானால் நம்மை முதலாவது மாற்ற வேண்டி உள்ளது.

தேசமாக உபவாசித்து ஜெபிப்பதற்கு நாம் ஆயத்தமாகி அவருடைய முகத்தைத் தேடும் தருணம் வந்துவிட்டது. அப்படி ஆயத்தப்படுகையில், அவருடைய சாயலை இந்த பூமியில் பிரதிபலிப்பதற்கு தேவன் அவருடைய மகிமையை தாங்கிச்செல்லும் பாத்திரமாக நம்மை ஆக்குவார்.

## கர்த்தருக்கு இரவல் கொடுப்பது.

ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான் அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார் (நீதி 19:17).

நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கருணைத்தொண்டு ஊழியத்தை வேதம் புலப்படுத்தியுள்ளது.

ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான் அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார். நீதி 19:17
வேதத்தில் பல இடங்களில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கருணைத்தொண்டு குறித்து சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

கொடுப்பது என்பது பெருமளவில் தேவனுடைய தன்மையாயிருக்கிறது. தேவனுடைய போஷிப்பிற்கென்று சிருஷ்டிகள் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றன என சங்கீதக்காரன் தேவனைச்சித்தரிக்கும்பொழுது இவ்விதமாகக் கூறுகிறார். எல்லா ஜீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக்கொண்டிருக்கிறது ஏற்ற வேளையிலே நீர் அவைகளுக்கு ஆகாரங்கொடுக்கிறீர். நீர் உமது கையைத் திறந்து, சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறீர். (சங் 145:15-16)

தாராளமாகவும் நிபந்தனையின்றியும் எல்லாருக்கும் கொடுக்கிற தேவன் நாமும் அப்படிச்செய்ய வேண்டுமென ஆலோசனை சொல்லுகிறார். மத்தியில் வாழும் ஏழை எளியோர், தேவையுள்ளோர், சிலாக்கியம் குறைந்தவர்கள் மற்றும் அந்நியர்களை முன்னிட்டு, இஸ்ரவேலருக்குக் தேவன் அருளிய பூமிக்கும் நியாயப்பிரமாணத்திற்கும் சில நெருங்கிய தொடர்புகள் உண்டு. தேவனை கனப்படுத்தும்படியாக தங்கள் தேசத்தில் வாழும் ஏழை எளியவர்களுக்கு உதவும்படி அவர்களுக்கு நியாயப்பிரமாணத்தில் கட்டளையிடப்பட்டுள்ளது. எ.கா. யாத் 23:11 லேவி 19:10 உபாக 14:28-29 - தேவன் இதனைக்கூறுகிற நோக்கமாவது உன் ஜனத்திலுள்ள எளியவர்கள் புசிக்கவும்/அவைகளை எளியவனுக்கும் பரதேசிக்கும் விட்டுவிடுவாயாக/பரதேசியும், திக்கற்றவனும். விதவையும் வந்து புசித்துத் திருப்தியடைவார்களாக/அப்பொழுது உன் கை செய்யும் வேலையிலெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார் எளியவன் உனக்குள் இல்லாதிருக்கும்படியாக இப்படிச் செய்யவேண்டும் (உபாக 15:4).

பணம் அல்லது பொருளாதார சம்பத்து - இவற்றைத்தான் நாம் ஏழ்மையோடு ஒப்பிடுகிறோம். ஆனால் தேவன் சிருஷ்டித்தவர்களில் சில சூழ்நிலைகளினிமித்தம் ஆவிக்குரிய உரிமைகள் மறுக்கப்பட்டிருப்பதும் அதில் அடங்கும். எனவே இதினிமித்தம் கிராமப்புறத்தில் ஏழ்மை நிலையில் உள்ளவர்கள் உட்பட தேசமனைத்திலும் கிறிஸ்துவுக்குள் காணப்படும் விசுவாசிகளுடைய ஆவிக்குரிய தரத்தை மேம்படுத்துவது அவசியமாகிறது. தேவ வார்த்தையில் தேறினவர்களாக்கும்படி சிறந்த மற்றும் முழுமை வளர்ச்சி அவர்கள் பெற வேண்டும். நமது தேசத்தில் அநேகரை சீஷர்களாக்கும்பொருட்டு சில திட்டங்களை வடிவமைத்துள்ளோம். எ.கா. வேத புத்தகத்தை வாசித்து முடிப்பது, குடும்ப சீஷத்துவ திட்டங்கள் போன்றவை. எனவே நாங்கள் எடுத்துள்ள முயற்சிகளுக்கு நீங்களும் பங்கு பெற கைகொடுக்க வேண்டுமென அழைக்கிறோம். ஆண்டவருக்கு தியாகத்துடன் கொடுங்கள். அவர்தாமே தாம் வாக்களித்தபடி உங்கள் நேர்த்தியான கிரியைகளுக்குத் தக்க அருளுவார்.

தர்ம காணிக்கை சேகரிப்பு: தேச அளவில் நடைபெறும் உபவாச ஜெபத்தில் நீங்கள் ஒரு வேளை உணவு நேரத்தை தவிர்க்கவோ அல்லது அதற்கு மேலாகவும் தெரிவு செய்யலாம். நீங்கள் உபவாசத்தின் மூலம் மிச்சப்படுத்துகிற தொகை எதுவாயினும் தனி நபராகவோ, சபையாகவோ தர்ம காணிக்கை சேகரிப்பிற்கு. என்.இ.சி.எப். பப்ளிக் வங்கி எண் 03-78972807க்கு அனுப்பலாம். கீழ்க்காணும் நோக்கத்திற்காக இது செலவிடப்படும்.

1. முழு வேதாகமத்தை வாசித்து முடிக்க ஊக்கம்.
2. சீஷத்துவத்தை நோக்கமாக கொண்ட ஊக்கம்
3. கிராமப்புற சபை ஊழியங்கள்

உங்கள் வங்கி ரசீதை 03-77291139க்கு பேக்ஸ் அல்லது (prayer@necf.org.my) எனும் மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம். "40 நாள் உபவாச ஜெபத்தின் மூலம் தர்ம காணிக்கை சேகரிப்பிற்கு மிச்சப்படுத்திய நோக்கம்" என குறிப்பிடவும்.

# பொறுப்புடமைப்பகுதி—அறிமுகம்

## எப்படி இந்த 40 நாள்கள் உபவாச ஜெப வேளையை மகிழ்ச்சியுடன் அப்பியாசப்படுத்துவது?

கீழ்க்காணும் நோக்கங்களை நிறைவேற்றும்பொருட்டு இந்த பொறுபுடமைப்பகுதி வடிவமைக்கப்பட்டுள்ளது:-

1. தெய்வீக செறிவூட்டல்: ஒவ்வொரு 5 நாள்கள் தியானம் முடிந்தவுடன் நீங்கள் தேவனுடன் கொண்ட இடைபடுதல் குறித்த ஒரு சிறு தொகுப்பு செய்யலாம்.

2. வளர்ச்சி பேணுதல்: 40 நாள்கள் உபவாசித்து ஜெபிப்பது ஒரு சவாலாகும். எனவே இந்த பொறுப்புடமைப்பகுதியில் மற்றவர்களுடைய பகிர்ந்து கொள்ளுதல் உங்களுடைய உணர்வுகளோடு ஒத்து, இருக்கும்பொழுது இப்பயணத்தைத் தொடரவும் முடிக்கவும் அது உற்சாகப்படுத்தும்.

3. அப்போஸ்தல உந்துதல்:ஜெபம் காரியங்களை மாற்றும். இந்த பொறுப்புடமைப்பகுதியில் எளிதான ஒரு செயல்நடவடிக்கை திட்டம் உண்டு. உங்களது உபவாசம் அர்த்தமுள்ளதாகவும் மனம்கிழ்ச்சியாகவும் குறிப்பாக உங்களது அப்பியாச வேளையில் ஒருங்கிணைக்கும் நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஒப்புக்கொடுத்தலுக்கான நிபந்தனைகள்: நாள் 1லிருந்து 40 வரை.

தேவனுடன் செலவு செய்ய தனிப்பட்ட நேரத்தை ஸ்தாபிப்பதற்கு தினமும் ஒரு மணி நேரம் ஒதுக்கும் ஒரு சிறிய அமைப்பை கொடுத்து உதவும் நோக்கத்தில் அது சிறிய குழுக்கள் மற்றும் குடும்பத்திற்கும் ஏற்புடையதாக இருக்கும் என எதிர்பார்க்கிறோம். அந்த அமைப்பு கீழ்க்காணும் வலிமையை பெற்றிருக்கிறது.(தேவனுடன் ஒரு மணி நேரம்)

- ☐ ஆராதனை - தேவ பிரசன்னத்தை வரவேற்பது (15 நிமிடங்கள் அல்லது சற்று கூடுதலாக)

- ☐ வார்த்தை - 5 அதிகாரங்கள் உரக்க வாசித்தல் (15 நிமிடங்கள்)

- ☐ காத்திருத்தல் - தேவன் நம்முடன் இடைபட அமைதியுடன் காத்திருத்தல் (15 நிமிடங்கள்)

- ☐ போராடு - மன்றாட்டு - தேசத்திற்கு வேண்டுதல் செய்ய பரிசுத்த ஆவி நம்மை ஏவுதல் (15 நிமிடங்கள் அல்லது கூடுதலாக).

# வேத வாசிப்பு அட்டவணை – கரு – தேவனில் நம்பிக்கை

அங்கே நம்பிக்கை உண்டு (எசேக்கியேல் 37)
நாள் 1 ☐ எசேக்கி 1-4 நாள் 2 ☐ எசேக்கி 28-30 நாள் 3 ☐ 31-33
நாள் 4 ☐ எசேக்கி 34-36 நாள் 5 ☐ எசேக்கி 37-39

நம்பிக்கைக்குரிய தேவன்
நாள் 6 ☐ ரோமர் 1-3 நாள் 7 ☐ ரோமர் 4-7 நாள் 8 ☐ ரோமர் 8-10
நாள் 9 ☐ ரோமர் 11-13 நாள் 10 ☐ ரோமர் 14-16

ஒரு எதிர்காலமும் ஒரு நம்பிக்கையும் (எரேமியா 29)
நாள் 11 ☐ எரேமி 1-3 நாள் 12 ☐ எரேமி 4-6 நாள் 13 ☐ எரேமி 23-25
நாள் 14 ☐ எரேமி 26-29 நாள் 15 ☐ எரேமி 30-31

ஜீவனுள்ள நம்பிக்கை
நாள் 16 ☐ 1 பேதுரு 1-5 நாள் 17 ☐ 2 பேதுரு 1-3
நாள் 18 ☐ ஏசாயா 57-59 நாள் 19 ☐ ஏசாயா 60-63 நாள் 20 ☐ 64-66

தேவனில் நம்பிக்கை (சங் 42)
நாள் 21 ☐ சங் 40-42 நாள் 22 ☐ சங் 43-46 நாள் 23 ☐ சங் 47-49
நாள் 24 ☐ சங் 50-53 நாள் 25 ☐ சங் 54-57

நம்பிக்கைக்கு எதிராக நம்பிக்கை (ரோமர் 4)
நாள் 26 ☐ எபி 1-3 நாள் 27 ☐ எபி 4-6 நாள் 28 ☐ எபி 7-9
நாள் 29 ☐ எபி 10-11 நாள் 30 ☐ எபி 12-13

நம்பிக்கையின் கனி (கொலோசெயர் 3)
நாள் 31 ☐ எபேசி 1-3 நாள் 32 ☐ எபேசி 4-6
நாள் 33 ☐ கொலோ 1-3 நாள் 34 ☐ கொலோ1-4 நாள் 35 ☐ பிலி 1-6

பாக்கியமுள்ள நம்பிக்கை (தீத்து)
நாள் 36 ☐ வெளி 1-3 நாள் 37 ☐ வெளி 4-7 நாள் 38 ☐ வெளி 8-10
நாள் 39 ☐ வெளி 11-13 நாள் 40 ☐ வெளி 14-17

பொறுப்புடமையுள்ள பங்காளர்: - (கணவன் மனைவி, குடும்ப உறுப்பினர்கள், சிறு குழுக்களிலிருந்து நபர்கள், பணியிடத்து கிறிஸ்தவ ஐக்கியங்கள் அல்லது கல்லூரி/பல்கலைக்கழகம்)

____________________ ஆகிய நான், நமது தேசத்திற்காக மன்றாட 40 நாள் உபவாச ஜெபத்தில் ஒப்புக்கொடுக்கிறேன். எனது ஆவிக்குரிய தேடலின் நன்மைகளைப்பெற்றுக்கொள்ள பொறுப்புடமை நிபந்தனைக்கு கட்டுப்படுகிறேன். எனவே தேவ கிருபையுடனும் ஜெபத்துடனும் ____________ இணைந்து (துணைவர், குடும்பம், பிள்ளைகள், சகாக்கள்) ____________,

---

## பொறுப்பு

ஒவ்வொரு பங்காளரும் சிறுகுழுக்களும் கீழ்க்காண்பவற்றை செய்ய கட்டுப்பட வேண்டும்.:-

1. ஒவ்வொருவரும் அனுதின வேத வாசிப்பை நிறைவேற்ற வேண்டும்
2. வாரத்திற்கொரு முறையாவது ஒவ்வொரு பங்காளரும் சிறுகுழுக்களும் ஒன்று கூடி ஜீவிய மாற்ற அனுபவங்களைப்பகிர்ந்து கொண்டு சேர்ந்து ஜெபிக்க வேண்டும்.
3. செயல் நடவடிக்கைத்திட்டத்தை நிறைவேற்ற ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்த வேண்டும்.

பொறுப்புடமையுள்ள பங்காளர்: - 40 நாள் உபவாச ஜெபத்தையும், என்னை நானே ஒழுங்கிற்குள் கொண்டுவந்து இந்த 40 நாளில் செய்ய வேண்டிய நடைமுறை செயல்திட்டத்தை நிறைவு செய்வேன் என ஒப்புக்கொடுக்கிறேன். ஏற்றதை கோடிடுக.

- ☐ நான்
- ☐ இருவராக / குடும்பம்
- ☐ ஜீவியக்குழு.˙.சிறுகுழு (3 பேருக்கு மேல் போகக்கூடாது
- ☐ நண்பர்கள்
- ☐ மற்றவர் ____________________

# நாள் 1

7 ஆகஸ்ட் 2017, திங்கள்

## அன்பும் இரக்கமுமுள்ள ஆண்டவர்
(எசேக்கியேல் 37)

இஸ்ரவேல் தேசத்தை நிலைநிறுத்தச் செய்யும் தீர்க்கதரிசன வார்த்தை கொண்டதுதான் எசேக்கியேல் 37. தேவனைக்கைவிட்டதினால் இஸ்ரவேலுக்கு ஓர் எழுப்புதல் மிகவும் அவசிமாய்ப்பட்டது. இதற்கு முன்பதாக அது தன் பொல்லாத வழியை விட்டு விட்டு தேவனிடம் திரும்ப வேண்டுமென பல தூதுவர்களை தேவன் அனுப்பியிருந்தார். அச்செய்தியைக்கொண்டு சென்ற தூதுவர்களும் தேவன் அன்பும் இரக்கமும் நீடிய சாந்தமும் பொறுமையும் கிருபையும் உண்மையுமுள்ளவர் என்பதை ஓயாமல் இஸ்ரவேலருக்கு நினைவுறுத்தியுள்ளனர் (யாத் 34:6, எண் 14:18, சங் 103:8-9, யோவேல் 2:13).

தேவன் அன்பும் இரக்கமும் கொண்டவரும் அதனுள் கிருபையும் தயவும் இருக்கிறது என்பதை வேதம் நம்மை எப்பொழுதும் நினைவு கூறச்சொல்லுகிறது. இஸ்ரவேலர்களை தேவன் சிட்சித்தும் அவர்களது தேசத்தை தேவன் அழிக்கிறாரென்றாலும் கூட அவர்களை மீண்டும் நிலைநிறுத்தும்படியாக தேவன் விரும்புகிறார். மேலும், தேவன் சாகிறவனுடைய சாவை விரும்புகிறதில்லை (எசேக் 18:23). தேவனுடைய இருதயம் இதுநாள் வரையிலும் மாறவில்லை. அவருடைய ஜனங்கள் மூலமாக அனைவரும் ஆசீர்வதிக்கப்படவேண்டுமென்பதே அவருடைய வாஞ்சையாக இருக்கிறது.தேசத்திற்கும், சபைக்கும், கிறிஸ்துவுக்குள் உள்ள விசுவாசிகளுக்கும் ஐக்கியத்தில் ஜெபிக்கும் தூதுவர்களாக நாம் காணப்படுகிறோம். கிறிஸ்துவுக்குள் தேவனுடைய ஜீவனுள்ள நம்பிக்கையை நாம் பறைசாற்றுகிறோம். கிறிஸ்துவின் சிலுவை இந்த உலகத்திற்கான அவருடைய அன்பின் சின்னமே தவிர வன்முறையின் சின்னம் அல்ல. நமது நம்பிக்கை தேவனில் இருக்கிரதேயன்றி அரசியல் ஆட்சியில் கிடையாது. நமது வல்லமை உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்குள் கானப்படுகிரதே தவிர மனித பராக்கிரமத்தில் தீர்மானிக்கப்படுவது அல்ல. நமது ஜெயம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில்த்தானே தவிர இந்த உலகத்திலிருந்து கிடையாது.

மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி - பெர்லிஸ்

☐ இந்த மாநிலத்தின் நிர்வாகம் நீதி நியாயத்துடன் நடத்தப்பட ஜெபி. கடந்த 2016ல், வயது குறைந்தோர், பெற்றோர் ஒருவரது சம்மதம் பேரில் இஸ்லாம் மத்தத்தைத் தழவலாம் என சட்டம் நிறைவேறியுள்ளது. இச்சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படக்கூடாது என ஜெபி.

☐ பெர்லிஸ்-தாய்லாந்து எல்லயோரத்தில் எளிதாக நடந்தேறும் கள்ள குடியேறிகள், சரக்குகள் கடத்தல், மனிதர்கள் கடத்தல் ஆகியவற்றை இம்மாநிலத்து அதிகாரிகள் மற்றும் இராணுவ வீரர்கள் வெற்றிகரமாக முறியடிக்க ஜெபி.

☐ பெர்லிஸில் உள்ள சபைகள், பலமாகவும் ஒற்றுமையாகவும் தங்கள் சுவிசேஷ பணிகளை அருகாமை பட்டணங்களில் செய்யவும், சமூக சீர்கேடுகள் மற்றும் பாதிப்புகள் எதிர்நோக்கும்போது வேதாகம அடிப்படையில் எழுந்து நிற்கவும் ஜெபி.

# நாள் 2
8 ஆகஸ்ட் 2017, செவ்வாய்

## சகல சாத்தியங்களுக்கும் தேவன்
(எசேக்கியேல் 37:1-6)

உலர்ந்த எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கிற்கு கர்த்தருடைய ஆவியானவர் எசேக்கியேலை அழைத்துச்செல்கிறார். பள்ளத்தாக்கு எங்கிலும் குவிந்து கிடக்கும் எலும்புக்குவியல்களின் காட்சி அது. ஒரு புழு கூட காணப்படாத ஜீவனற்றமனந்தளர்ந்த ஸ்தலமாக அது இருந்தது. தேவனுக்கும் எசேக்கியேலுக்கும் இடையில் காணப்பட்ட அந்த உரையாடல் உயிர்த்தெழுதலைப்பற்றியதாக இருந்தது. அந்த எலும்புகள் எழுப்புதல் அடைந்து உயிர் பெற்று வரத்தக்கதாக அதனிடம் பேசும்படி தேவன் எசேக்கியேலுக்கு கட்டளைக் கொடுத்தார்.

தேவனுக்குள் அனைத்தும் சாத்தியப்படும். உருவாக்கும் வல்லமை தேவனிடம் உண்டு. ஒன்றுமில்லாததிலிருந்து ஒன்றை ஏற்படுத்தக்கூடிய வல்லமையும் புதைகுழியிலிருந்து உயிரோடு எழுப்ப வல்லவருமாயிருந்தார். தேவனால் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டெடுக்கப்பட்ட இஸ்ரவேலருக்கு இது நன்றாகத்தெரியும். கானானியரின் ஒடுக்குதலிலிருந்து விடுவிக்க தேவன் நியாயாதிபதிகளை எழுப்பினார்.

அரமியர்களை கலங்கடித்து அவர்களை முற்றிலுமாக அழித்தார். தூதர்களை அனுப்பி அசீரியர்களின் சேனையை முறியடித்தார். இவையாவும் தேவன் ஆளுகையில் இருக்கிறார் என்றும் தேசங்களையும், இராஜாக்களையும், தனிப்பட்டோரையும் இயக்குகிறார் எனவும் விளங்குகிறது. இன்றைக்கும், மலேசியாவில், தேவன் அரசியல், பொருளாதாரம், சமூகங்கள், சபைகள் மற்றும் விசுவாசிகளை ஆளுகிறார். இன்றைக்கு நடந்தேறுகிற பல சம்பவங்களினால் நாம் ஏமாற்றமும் சோர்வும் கோபமும் அடையும்போது, உலர்ந்த எலும்புகளை உயிர்ப்பித்தவரும், தேசத்தின் அனைத்து காரியங்களுக்கும் காரணராகிய தேவனை நோக்கி மன்றாடி ஜெபிக்க மறவாதிருப்போம். வலுவான விசுவாசத்துடன் தேவனை நம்புவோம். கிறிஸ்துவின் ஜீவியம் நமக்குள் வாழும்படி தேவன் நம்மை வழிநடத்துவாராக.

மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி - கெடா

☐ கடந்த 2016லிருந்து நிலவுகிற நீர் தடை, திருட்டு, ஒழுகள் போன்றவற்றை அதின் அமலாக்க அதிகாரிகள் தீர்க்கவும் மறுபடியும் அப்பிரச்சினைகள் நிலவாதிருக்கவும் ஜெபி.

☐ பாலிங், குபாங் பாசு போன்ற ஏழ்மை மிக்க பகுதிகளில் உள்ள ஏழ்மையை அடையாளங்கண்டு அதனை மேற்கொள்ள மாநில அரசு தீவிர முயற்சி செய்ய ஜெபி.

☐ பாலிங், கம்போங் லெகோங்கில் காணப்படும் கெனிசு எனும் ஆதி பழைமைவாசிகள் தங்கள் மது மற்றும் பசை இழுக்கும் பழக்கத்திலிருந்து விடுதலைப்பெற்று இயேசு கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவியத்தையும் நோக்கத்தையும் பெற ஜெபி.

# நாள் 3
9 ஆகஸ்ட் 2017, புதன்

## தேவன் - ஆக்கியோனும் விசுவாசத்தைப் பூரணப்படுத்துபவரும்
(எசேக்கியேல் 37:1-6)

தேவனால் வார்த்தையைப்பெற்றுகொண்ட உடனேயே எசேக்கியேல் உலர்ந்த எலும்புகளுக்கு தீர்க்கதரிசனம் உரைத்தான். அதிசயமான சம்பவம் நடந்தது. தீர்க்கதரிசனம் உரைக்கும் போதே ஒரு அசைவாடுதலின் சப்தம், எலும்புகள் ஒன்று கூடியும், சதையினால் மூடியும் மனித உருவங்கள் உருவாகின. அதின் பிறகு தேவன் எசேக்கியேலை தீர்க்கதரிசனம் உரைத்து உயிரடையச் செய்யும் படி சொல்லியதால் நாலாபக்கமிருந்தும் காற்று வீசி விழுந்து கிடந்தவர்கள் உயிரோடு எழும்பினார்கள்.

எசேக்கியேல் இருமுறை தொடர்ந்தாற்போல தீர்க்கதரிசனம் உரைத்த போது சத்தம் கேட்கப்பட்டு விழுந்து கிடந்தவர்கள் உயிருடன் எழும்பினர். உலர்ந்த எலும்புகள் பழைய நிலைமைக்கு திரும்புவதற்கு சில செயல்முறை மாற்றங்கள் இடம்பெற்றன. அலாவுதீனின் அற்புத விளக்கின் கதை போல அல்லாமல் இங்கே உலர்ந்த எலும்புகள் உடனடியாக உயிர்பெற்றன.

நமது ஜெபங்களின் வழி மாற்றங்களைக்காண வேண்டுமெனும் எதிர்பார்ப்பு பல பத்து ஆண்டுகளாய் மலேசிய சபைகளில் இருந்து வருகிறது. எனினும் அதின் விளைவுஏமாற்றம் மிஞ்சினதும் ஜீரணிக்க கடினமாகவும் உள்ளது. ஆயினும் நாம் சோர்ந்துவிடக்கூடாது. தேவனுடைய நிறைவேறுதலுக்கு முன்பதாக சில செயல்முறைகள் வடிவுபெறும். தேவன் மலேசியாவையும், இரட்சிக்கப்படாதவர்களையும் நேசிக்கிறார். இல்லாதவற்றிலிருந்து தோன்றப்பண்ணவும் மரிதோரை எழுப்புகிறவராகவும் இருக்கிறார். சபையையும் கிறிஸ்துவுக்குள் உள்ள விசுவாசிகளையும் புதுப்பிக்கிறார். தேவன் ஆட்சி செய்கிறார் என்றும், அவருடைய வார்த்தை என்றென்றும் நிலைத்திருக்கும் என்பதையும் எவராலும் மறுக்க முடியாது. ஆண்டவருடைய அனுக்கிரகம் வருகிறதென்று அறிவித்தும், உயிர்த்தெழுதலைக்காணுமட்டும் இத்தேசத்தில் தேவனுடைய கிரியைகளை காணுவோமென்றும் எசேக்கியேலைப்போல இந்த தேசத்தின் மீது ஜாமக்காரனைப்போல இருப்போமாக.

மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி - பினாங்கு

☐ பினாங்கில் வன்முறை அமளி (1867) ஏற்பட்டதை முன்னிட்டு இனங்களுக்கிடையில் எழும்பின உறவு பாதிப்புகளிலிருந்து தேவ சுகம் பெற ஜெபி. 1914ல் பினாங்கு யுத்தம். 1941ல் ஜோர்ஜ்டவுனில்

# நாள் 3

## ஆகஸ்ட் 2017, புதன்

குண்டுவீச்சு, 1942ல் சூக் ச்ஹிங் படுகொலை 945ல் ஜோர்ஜ்டவுனில் குண்டுவீச்சு 1957ல் சிங்கே ஆர்ப்பாட்டம், 1988ல் சுல்தான் அப்துல் ஹலிம் /பெர்ரி பாலம் உடந்தது, 1988ல் கம்போங் ராவா கலவரம் போன்றவை.

□ மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கும்போது சரியானவிதத்திலும் விவேகத்துடனும் மாநில அரசாங்கம் நடந்துகொள்வதுடன் பூர்வ காலமாய் வசித்து வரும் கிராமப்புறங்களில் வசித்து வருகிறவர்களை பலவந்தமாய் வெளியேற்றாமல் இருப்பதை உறுதி செய்யவேண்டும்.

□ மாநிலத்தில் போதைப்பித்தர்களின் விகிதம் மிகப்பெரிய அளவில் இருப்பதுடன் போதைப்பொருள் கடத்தலுக்கு மையப் பிராந்தியமாகத் பினாங்கு திகழ்கிறது. அதுபோல 2016ல் வணிக குற்றவியல் பெருமளவில் பெருகிவிட்டிருக்கிறதை காண்பிக்கிறது. மாநில அமுலாக்க அதிகாரிகள் போதை கடத்தல் மற்றும் அனைத்துவித குற்றச்செயல்களை ஒழிக்க ஜெபி.

# நாள் 4

## 10 ஆகஸ்ட் 2017, வியாழன்

# தம்முடைய ஜனங்களுக்கு உயிர்த்தெழுந்த ஜீவனை அளிக்க வாக்களிக்கும்

(எசேக்கியேல் 37:11-14)

தேவனுடைய ஆளுகையையும் தலைமைத்துவத்தையும் புறக்கணித்த இஸ்ரவேலர்கள் அவருடைய சிட்சையிலிருந்து தப்பிக்க தங்கள் எல்லா வழிகளையும் அரசியல் ரீதியாகக்கூட தவிர்க்க முயற்சி செய்தனர். ஆனாலும் அவருடைய கோலின் ஒழுக்கத்தை அவர்கள் தவிர்க்க இயலவில்லை. (எ.கா.அசீரியர்கள், பாபிலோனியர்கள்). அவர்கள் சிறைக்கைதிகளாக தங்கள் அனைத்து நம்பிக்கைகளையும் இழந்தவர்களாய் விரக்திக்குள் கடந்து சென்றனர். எனினும் அவர்களைத் தம் மக்களாகவே தேவன் கருதினார். தங்கள் நம்பிக்கையற்ற கல்லறை நிலையிலிருந்து வழிநடத்த வாக்களித்து, உயிர்த்தெழுந்த ஜீவனை அளிக்க அருள் செய்தார்.

நாம் தேவனை நம்புவதைப்பார்க்கிலும் இரதங்களையும் குதிரைகளையும் நம்புவதை தெரிந்துகொண்டாலும் நமக்கான அவருடைய அன்பு ஒருக்காலும் மாறவில்லை என்பதை நினைவுபடுத்துகிறார். நமது பலவீனமான மறுமொழியின் மத்தியிலும் அவருடைய அன்பு குறையவில்லை. கிறிஸ்து தம் சபையை நேசித்து அதற்காக தன் ஜீவனையும் தந்தார். அவருடைய உயிர்த்தெழுதலின் மூலமாக சிலுவையின் பாதையில் நடக்க அழைக்கிறார். சில வேளைகளில் நாம் மீறி தேவனை விட்டு வழிவிலகுகிறதினால் நாம் பாடுகளை அனுபவிக்கவில்லை மாறாக நாம் தேவனையும் மக்களையும் நேர்மையாய் நேசிக்கவில்லை. நீதியற்ற சூழ்நிலைகளின் மத்தியில், நாம் நியாயத்தை செய்து, மற்றவருக்கு இரக்கம் பாராட்ட அழைக்கப்படுகிறோம் ஏனெனில் உயிர்த்தெழுந்த வல்லமை நமக்காக வைக்கப்ட்டிருக்கிறது. நாம் எவ்வித சூழலில் கடந்து போனாலும், கிறிஸ்துவையே நம் முன்மாதிரியாகக் கொள்வோம். வெறுப்புக்கு பதிலாக மன்னித்தலும், சினத்திற்கு பதிலாக மனதுருக்கமும், விரக்திக்கு பதிலாக விசுவாசமும், தூக்கியெறிந்து பேசப்படும் நிந்தைக்கு பதிலாக செயல்நடவடிக்கையுமே நமது ஜெபமாக இருக்கட்டும்.

மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி - பேராக்

☐ பாதுகாப்புச் சட்டத்தின் காரணமாக கமுண்டிங் தடுப்புக்காவலில் இருக்கும் கைதிகளை அதிகாரிகள்முறையாக நடத்தவும், கைதிகள் தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும் அக்காலங்களில் பெறவும் ஜெபி.

☐ நமது தேசத்தில் மிகக்குறைந்த அளவிலேயே சுவிசேஷம் பற்றி கேள்விப்பட்டிருக்கிற பேராக்கில் அமைந்துள்ள 134 சீன கிராமங்களில் வாழும் சீனர்கள் அவர்களின் கலாச்சார பாணியிலேயே இயேசு கிறிஸ்துவின் செய்தி போய்ச்சேர ஜெபி.

☐ பேராக்கில் உள்ள ஓராங் அஸ்லி பூர்வீகக்குடியினர் - செமாய், தெமியார், ஜாஹாய், கிந்தாக், மற்றும் லானோ. இவர்களது வாழ்க்கைத்தர மேம்பாட்டிற்காக அரசாங்கம் சமூக திட்டங்களை நல்ல விதத்தில் செய்து தரும்படி ஜெபி.

# நாள் 5

## 11 ஆகஸ்ட் 2017, வெள்ளி

## பரிசுத்த ஆவியை நல்கும் தேவன்

(எசேக்கியேல் 37:14)

உலர்ந்த எலும்புகளுக்கு தீர்க்கதரிசனம் உரைத்து பழைய நிலைக்குத் திரும்பும்போது பரிசுத்த ஆவியை வாக்களித்திருந்தார். ஆவி (ருவா) என்பது எசேக்கியேல் 37:1-14ல் முக்கிய வார்த்தை. கர்த்தருடைய ஆவியானவர் எனும் பதம் தீர்க்கதரிசன புத்தகங்களில் கவனிக்க வேண்டிய முக்கிய தீர்க்கதரிசன வார்த்தையாகும்.

தேவனுடைய விடுதலையைக்குறித்து ஏசாயா குறிப்பிடும்போது, இஸ்ரவேலருடன் உடன்படிக்கையைப் பண்ணின தேவன் மனிதருக்கு பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்படுகிறார் எனும் வாக்குத்தத்தமும் அதில் அடங்கியிருக்கிறது. (ஏசா 59:21). தேவன் தம் ஜனங்களை ஆசீர்வதிக்கும்போது, அவர்கள் மீது பரிசுத்த ஆவியானவர் பொழியப்பண்ணுகிறார் (ஏசா 44:3-4 யோவேல் 2:28-29).

புதிய ஏற்பாட்டின் நோக்கமானது நியாயப்பிரமாணம் நமது இருதயப்பலகையில் எழுதப்பட வேண்டியது என கூறியுள்ளார் (எரேமியா 31:31-34, எபிரெயர் 10:15-16). மேலும் எசேக்கியேல் 36:27-28).

பரிசுத்த ஆவியினுடைய நிறைவுதல் அவரது திருச்சபைக்கு வந்த நாளிலிருந்து பரிசுத்த ஆவியின் சகாப்தத்தில் வாழ்ந்து வருகிறோம் (அப் 2). நீதியையும் இரக்கத்தையும் செய்வதே தேவன் விதித்த கட்டளையாயிருக்கிறது. தேவனுடைய சித்தத்தை செய்வதற்கு பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவிசெய்வார் என தேவன் வாக்களித்திருக்கிறார். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால்தான் இந்த வாக்குத்தத்தங்கள் நிறைவேறுகிறது (சகரியா 4:6). இராஜாக்கள், அதிகாரிகள், பொதுவான ஜனங்களில் இருதயத்தை பரிசுத்தர் ஆளுகை செய்கிறார். தேவன் முழுமையாக ஆளுகிறார் எனவும் நாம் தேசத்திற்கு, சமுதாயங்களுக்கு, ஜனங்களுக்கு சபைக்கு ஜெபிக்கும்பொழுது பரிசுத்த ஆவியானவர் அசைவாடுகிறார் என்றும் நம்புவோம். அப்பொழுது உலகம் தேவனை அறிந்து கொள்ளும்.

மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி - கிளந்தான்

☐ இம்மாநிலத்தின் பொதுவான ஏழ்மை நிலையில் உள்ளவர்களுடைய சமூக பொருளாதார மேம்பாட்டை வலுப்படுத்துவதற்கு மாநில அரசாங்க வலுவான திட்டங்களை வகுக்க ஜெபி. 2014ன் புள்ளியல் விவரப்படி, கிளந்தான் மாநிலம் மிகவும் வறிய நிலையில் இருப்பதாகவும், சராசரி மொத்த குடும்ப வருமானத்தைவிட 40% குறைவான வருமானம் பெறுகிறவர்களாக இருக்கிறார்கள் என கணக்கிடப்பட்டுள்ளது.

# நாள் 5

## 11 ஆகஸ்ட் 2017, வெள்ளி

☐ மலேசியாவின் விவாகரத்து விகிதத்தில் அதிகமானவர்கள் கிளந்தானைச்சேர்ந்தவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. குடும்ப ஸ்தாபனங்கள் பாதுகாக்கப்பட ஜெபி. திருமண முறிவினால் மனத்ளர்வால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் நலன்களை தேவன்தாமே தமது வல்லமையினால் நிலைநிறுத்த ஜெபி.

☐ போதைப்பொருளுக்கு அடிமையாகிப்போன மக்களின் மத்தியில் தேவனுடைய வல்லமை இடைபட்டு தங்கள் கட்டுகளிலிருந்து அவர்கள் விடுதலைப்பெற ஜெபி. கடத்தல் மற்றும் விநியோகத்திற்கு அடையாளங்காணப்பட்டுள்ள கோத்தா பாரு, பாசீர் மாஸ் மற்றும் தும்பாட் போன்ற இடங்களில் அதிகாரிகள் தீவிரமாக பணிசெய்து அவற்றைத் துடைத்தொழிக்க ஜெபி.

# பொறுப்புடமைப் பகுதி 1 – நாள் 1–5

## அங்கே நம்பிக்கையுண்டு (எசேக்கியேல் 37:1-14)

மனந்திரும்புதல் - மறுபடி திரும்புதல் - மனமகிழ்வு




**உன்னிலிருந்து துவங்குகிறது**

▸ மனந்திரும்ப வேண்டிய பகுதிகள்.

- ☐ என் வாழ்க்கையில் சொகுசாக இருக்கிறேன்.
- ☐ எனது தேசத்திற்காக குறைவாக/ஜெபிப்பது இல்லை
- ☐ நான் குறைவாக/வேதத்தை வாசிப்பது இல்லை.
- ☐ தேவனை சேவிப்பதில் திருப்தி அடைகிறேன்.

நீ குறிப்பிட்ட பகுதிகளில் மனந்திரும்ப வா.

## பொறுப்புள்ள கணக்கொப்புவிப்பு

சோதனைப் பட்டியல் ☑

வேத வாசிப்பு நாள் 1-5 ☐ நாள்____வாசிக்கவில்லை ☐ ____ முடிக்கவேண்டியது

ஆவிக்குரிய குறிப்பேடு ☐ ஐந்து நாள்கள் உபவாச ஜெபத்தில், நீ தேவனுடன் கற்றுக்கொண்ட இடைபடுதலின் அனுபவத்தை எழுதுக.

________________________________________

________________________________________

________________________________________

செயல் திட்டம் ☐ மனந்திரும்புதல் ☐ மறுபடி திரும்புதல் ☐ மகிழ்வு

1. மனந்திரும்புதல்:

அ. தேசத்தைக்குறிந்து மறைமுக குறைகூறல்களை பேசினாயா?

ஆ. கிறிஸ்தவனாக உன் வாழ்க்கையில் மற்றவர்களிடம் என்ன மனப்போக்கு கொண்டிருக்கிறாய்?

இ. தேவன் வெளிப்படுத்துகிற - நீ மனந்திரும்புதலும் மன்னிப்பும் பெறவேண்டிய பகுதிகள்/ஏமாற்றங்கள் எவை?

**2. என் செயல் திட்டங்கள்** – 1-5 நாள் உன் இலக்கை விவரி கொண்டாட்டம்.

| பகுதிகள் | 1-5 நாள் உன் இலக்கை விவரி | கொண்டாட்டம் |
|---|---|---|
| தனிப்பட்ட நீ | | |
| குடும்பம் | | |
| செல்வாக்கின் வட்டம் | | |
| சமுதாயம் | | |

# நாள் 6

12 ஆகஸ்ட் 2017, சனி

## தேவன், நம் நம்பிக்கையின் சாதனம்

தேவனிடம் மாத்திரம் நம் நம்பிக்கை என்பதை எளிதில் மறந்துவிடும் சோதனை நமக்கு உண்டு. நம்மைச்சுற்றிலும் நடைபெறும் சம்பவங்களைக் கண்டு நமக்கு மனச்சோர்வும் ஏமாற்றமும் ஏற்படுகிறது. அரசியல் கொந்தளிப்பு பெருகும்பொழுது, நமது மனத்தளர்ச்சியும் அதிகரிக்கிறது. நமது நாணய மதிப்பு ஏறி இறங்கும்போது நமது நல்லறிவும் ஏறி இறங்குகிறது. காரியங்கள் இருளாகும்போது, நாமும் இருளாகிறோம்.

நமது ரட்சிப்பிற்கும் நித்திய ஜீவனுக்கும் தேவனே நமது சாதனமாக-இருக்கும்போதும், அதுவே ஒவ்வொருவரின் சாட்சியாக விளங்கும்போதும், பின்னர் ஏன் நமது ஆரோக்கியமும் செல்வமும் சரியும் வேளை நாம் தாழ்ந்து போகிறோம்? நமது ஆவிக்குரிய மற்றும் உணர்ச்சிகளின் சீரழிவைக்கொண்டு வரும் கடுஞ்சொற்கள் நம்மைத் தாக்கும்போது, ஏன் எளிதில் பாதிக்கப்படுகிறோம்?

இவையாவும் நாம் மறுபடியும் நம்பிக்கையின் சாதனமாகிய தேவனிடம் மாத்திரம் திரும்ப வேண்டும் என பறைசாற்றுகிறது. பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக (ரோமர் 15:13). ரோமிலுள்ள விசுவாசிகளுக்கு பவுலுடைய ஜெபமாக இது இருந்தது. ஜீவ வார்த்தையினுடைய விசுவாசிகளுக்கு ஏற்புடையதாகவை விளங்குகிறபடியினால். இதுவே நமக்கு இன்றைய பவுலின் ஜெபமாகவும் காணப்படுகிறது.

நாம் நேசிக்கும் நமது தேசத்திற்கும் மலேசிய திருச்சபைகளுக்கும் நாம் ஜெபிக்கும்போது, நம்பிக்கையின் தேவனை நாம் நேராக நோக்குவோம். நமது ஜெபம் மங்கிப்போகாத மற்றும் அசைக்கப்படாத மன்றாட்டாக நமக்காகத் தன் குமாரனையே தந்த நம்மை நேசிக்கிற தேவனிடம் செல்லட்டும். உலகம் மாறலாம் ஆனால் தேவனுடைய அன்பு மாறாது. நமது தேவன் நம்பிக்கையின் தேவனாக இருப்பதினால் உண்மையாகவே நாம் தேவனை நம்புவோம்.

# நாள் 6

## 12 ஆகஸ்ட் 2017, சனி

மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி - திரங்காணு

☐ இம்மாநிலத்தில் நிலவும் பல்வேறு தீமைகளுக்கு எதிராக ஜெபிப்போம். எ.கா. பதின்ம வயது கர்ப்பம், பொருள்கள் தவறாக பயன்படுத்துவது, பாலியல் நெறிகேடுகள் போன்றவை. குறிப்பாக மாராங், கோல பெசுட் மற்றும் கெமாமான் மீனவர் சமூகத்தினர் மத்தியில் புழங்குகிறது.

☐ இந்த மாநிலத்தில் உள்ள செமோக் பேரி, பாத்தெக் எனும் பூர்வீகக்குடியினருடைய சமூக பொருளாதார அவல நிலை நீங்கவும் சில துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உதவிகள் அவர்களுக்கு கிடைக்கப்பெறவும் ஜெபி.

☐ அதிகமான ஊழியர்கள் இந்த அறுவடை ஸ்தலங்களுக்குச் செல்ல ஜெபி. பல சபைகள் இம்மாநிலத்தில் இருந்தாலும் இங்குள்ள விசுவாசிகளை மேய்க்க, வளரச்செய்ய நிரந்தர போதகர்கள் மற்றும் தலைவர்கள் இங்கு தங்கி ஊழியம் செய்யவில்லை. இம்மாநிலத்தை விட்டு படிக்க, வேலைச் செய்ய வெளியிடங்களுக்குச்செல்லும் வாலிபர்கள் தங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொள்ள ஜெபி.

# நாள் 7

13 ஆகஸ்ட் 2017, ஞாயிறு

## நமது நம்பிக்கையின் அடிப்படையை நம்பு

நம்புவது என்பது நம்பிக்கை வைப்பது.

அது அவ்வளவு எளிதானது. அதிகமாக யோசிக்காமல், கேள்வி எழுப்பாமல் எப்போதுமே நாம் நம்பிக்கை வைக்கிறோம். எடுத்துக்காட்டாக, சாப்பிடுவதற்கு நீங்கள் ஒரு மெக்டானல் உணவை அது கங்காரு இறைச்சியா அல்லது மாட்டு இறைச்சியா என 2வது முறையாக யோசிக்காமல் நீங்கள் ஆர்டர் பண்ணின உணவுதான் என நம்புகிறீர்கள்.

விமானத்தில் பயணம் செய்வதற்கு முன் விமானமோட்டியை தகுதிப்படுத்த நீங்கள் எந்த பேட்டியும் அவரிடம் எடுக்காமல் பயணத்தின்போது உங்கள் ஜீவனையே அவரிடமும் அவரின் உதவி விமானமோட்டியுடனும் கொடுத்து விடுகிறீர்கள்.

கேள்வி இதுதான்: அனுதினமும் இவ்வித நம்பிக்கையில் வாழுகிற நாம் ஏன் தேவனையும் அவருடைய வார்த்தைகளையும் நம்புவதற்கு கஷ்டப்படுகிறோம்? நமது வாழ்க்கையில் நாம் நம்மை உணராமலேயே சில தீவிர முரண்பாட்டிற்குள் கடந்து செல்கிறோம்.

எனவே தேவனை நம்புவதற்கு அச்சப்படுகிற அனைத்து பயங்களையும் நீக்கிவிட இதுவே சரியான தருணம். எபிரெயர் புத்தகத்தை எழுதியவர் விசுவாசத்தின் அவசியத்தை விளக்கியுள்ளார். நாம் தேவனைப்பிரியப்படுத்த வேண்டுமானால் அவரை நம்ப வேண்டும் (எபி 11:6).

ராஜாவின் இருதயம் தேவனுடைய கரத்தில் இருக்கிறது. மோசேயின் காலத்தில் பார்வோனுக்கு இது நடந்தது. தானியேலின் காலத்தில் நேபுகாத்நேசாருக்கும் நடந்தது. நமது காலத்திலும் அது நடக்கும். தேவன் மலேசியாவை ஆசீர்வதிப்பார். ஆம், நாம் தேவனை நம்புவோம், ஜெபி.

மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி - பஹாங்

☐ தீபகற்ப மலேசியாவில், பஹாங்கில்தான் அதிகமான பூர்வீகக்குடியினர் வசிக்கின்றனர். பஹாங்கின் மக்கள் மீது பூர்வீகம் தொடங்கி, கிராமங்கள் மற்றும் பட்டணங்கள் தோறும் தேவனுடைய ஆசீர்வாதத்தை பறைசாற்றுவோம். இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த சாதனமாகவும், நம்பிக்கையாகவும் பலமாகவும் அவர்கள் அறிந்துகொள்ள ஜெபி.

# நாள் 7

## 13 ஆகஸ்ட் 2017, ஞாயிறு

□ பெருமளவு பாதிப்பையும் சுற்றுப்புற சூழலுக்கு கேடு கொண்டுவந்த இரசாயன லம்பங்களை முடக்குவதற்கு கடுமையான கட்டுப்பாடுகள் கொண்டுவர அதின் அதிகாரிகள் சட்டங்களை விதிக்க ஜெபி.

□ சம்பந்தப்பட்ட துறைகள் - செமாய், ஜக்கூன், செமோக் பேரி, செமெலாய், ஜாஹுட், பாத்தெக், தெமுவான், ச்செவோங் மற்றும் தெமோக் பூர்வீகக்குடியினரின் நலன்களைப்பேணி, அவர்களின் அத்தியாவசங்களைச் சந்தித்து உதவவும், மேம்பாட்டுதிட்டங்களை சீர் செய்து வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் ஜெபி.

# நாள் 8
14 ஆகஸ்ட் 2017, திங்கள்

## சந்தோஷம் - தேவனில் நம் நம்பிக்கையின் ஒரு கனி

நம்புவது என்பது நம்பிக்கை வைப்பது.

ஒரு கிறிஸ்தவன் நம்பிக்கையின் விவகாரத்தை ஒரு முடிவுக்குக்கொண்டு வரும்பொழுது, அவன் தன் நம்பிக்கையை தேவனில் மாத்திரம் வைக்கிறான். அந்த விசுவாசிக்கு தன் முகம் முழுவதிலும் நடத்தையிலும் மகிழ்ச்சி ததும்பும். சந்தோஷம் நிறைந்தவனுக்கும் சந்தோஷமற்ற கிறிஸ்தவனுக்கும் வேறுபாடு காணமுடியும்.

நாம் தேவனை நம்பும்பொழுது, தேவன் நம்மை சந்தோஷத்தில் நிறப்புவார் என வேதம் நமக்குக் கூறுகிறது. கொஞ்சம் மகிழ்ச்சி அல்ல ஆனால் எல்லாமே மகிழ்ச்சி. ரோமில் உள்ள விசுவாசிகளுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் சொன்னது, இன்றைக்கும் மலேசிய சபைகளுக்குப் பொருந்தும். சமூக, அரசியல் மற்றும் பொருளாதார மாற்றங்களில் கடந்து செல்கிற நமது தேசத்தில், சந்தோஷம் நிறம்பிய சபை நிச்சயமாகவே சாட்சி உள்ளதாகக் காணப்படும்.

இருள் நிறைந்த காலங்களில் மகிழ்ச்சியோடு பாடும் திருச்சபை, நிச்சயம் அவிசுவாசிகளின் கவனத்தை ஈர்க்கும். இருளின் உச்சத்தில் இருக்கும் இடத்தில், ஒளி மிகுந்த வெளிச்சமாகவே பிரகாசிக்கும்.

நமது வாழ்க்கையில் தேவன் ஒருவரையே நோக்கிப்பார்க்கும் இலக்கை நாம் கொண்டிருப்போமா? அவரில் நாம் சந்தோஷத்தைப்பெற்று, அவருக்குள் நாம் மகிழ்ச்சியின் நிறைவையும் பெறுவோம். மலேசியாவின் சபை சந்தோஷத்துடன் ஜெயத்தையும் பெற்றிருக்கிற சபையாக இருக்க என்னோடு ஜெபி. நமது மகிழ்ச்சி வெளிப்புற சூழ்நிலையில் காணப்படுவதாக இருக்கிறது, ஆனால் சந்தோஷம் உள்ளே இடம்பெறுவதாக காணப்படுகிறது. நமது இருதயத்திற்குள் அது ஏற்படும். எனவே வாருங்கள், சந்தோஷத்துடன் நாம் ஜெபிப்போம். மலேசியாவில் நமது சபைகள் மகிழ்ச்சி நிறைந்ததாக ஆகட்டும். ஆமென்.

மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி - சிலாங்கூர்

- [ ] பட்டணங்களில் ஏழ்மையிலுள்ள தேவைப்படும் மக்களுக்கு ஏற்றபடியான அரசு வீடுகளைக்கட்டித்தர மாநில அரசாங்கம் பொருத்தமான திட்டங்களை எடுக்க ஜெபி.

# நாள் 8

## 14 ஆகஸ்ட் 2017, திங்கள்

☐ சிலாங்கூரில் உள்ள ஆயிரக்கணக்கான குடியேறிகளும் அந்நிய தொழிலாளர்களும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் அனுபவத்தைப்பெற ஜெபி. அதிகமானோர் நேர்மையற்ற ஏஜண்டுகளிடமும் இரக்கமற்ற முதலாளிகளிடத்திலும் சிக்கி பாடுபடுகின்றனர். தேவன் அவர்களது கதறுதலைக்கேட்டு தங்கள் கோரிக்கை உரிமைகள் மதிக்கப்படும் நிலையில் தேவன் கிரியை செய்ய ஜெபி.

☐ இங்குள்ள உள்ளூர் மற்றும் அந்நிய தேசத்தின் ஆயிரக்கணக்கான மாணவர்களின் இருதயத்தில் தேவ ஞானமும் வெளிப்படுதலும் பிரகாசிக்க ஜெபி. அவர்கள் மூலம் தேசத்தின் சமூகங்களுக்கு நன்மையைகொண்டு வரும் நோக்கமுள்ளவர்களும், நேர்மையுள்ளவர்களுமாயிருக்க ஜெபி.

# நாள் 9
## 15 ஆகஸ்ட் 2017, செவ்வாய்

## சமாதானம் - தேவனில் நம் நம்பிக்கையின் ஒரு கனி

சந்தோஷத்திற்கு அடுத்து, தேவனை நம்புகிறதற்கேதுவான மற்றொரு தன்மையானது சமாதானம் ஆகும்.

எருசலேம் சமாதானப் பட்டணம் என்றும் இயேசு சமாதானப்பிரபு என்றும் அழைக்கப்படுவது மிகவும் தனித்தன்மையானது. அதாவது சிலுவையில் கிறிஸ்து இயேசுவின் இரத்தஞ்சிந்துதலினால்தான் நமக்கு தேவனுடன் சமாதானம் ஏற்பட்டது! தேவனுடன் சமாதானமானது இந்த உலகம் தர முடியாதது. அது எல்லா புத்திக்கும் கடந்த ஒரு சமாதானமாகும். பிலிப்பு சபைக்கு பவுல் இந்த சமாதானத்தைப்பற்றிதான் எழுதுகிறார். “நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும்மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்” (பிலி 4:6-7).

மலேசியாவிற்கும் அதில் உள்ள சபைகளுக்கும் நாம் வேண்டுதல் செய்யும்போது ஒன்றுக்கும் நாம் கவலைப்படாமல் அதற்கு பதிலாக விண்ணப்பங்களினாலும் வேண்டுதல்களினாலும் தேவனிடம் தெரியப்படுத்துவோம். இதுதான் கிறிஸ்துவுக்குள் உள்ள விசுவாசிகளின் ஆவிக்குரிய நடைமுறையும் பழக்கமுமாக இருக்கிறது. நாம் முழுவதும் புரிந்து கொள்ள முடியாது எனினும் தேவன் அறிவார். நாம் எல்லாம் புரிந்துகொள்ள வேண்டும் எனும் அவசியமில்லை. ஆனால் நாம் அவரிடம் நம்பிக்கை வைத்து அவருடைய பரிபூரண சித்தத்தின்படி ஜெபிக்கும்பொழுது தம் விருப்பத்தின்படி நம்மை அவர் சமாதானத்தால் நிறப்புவார்.

தேசிய அளவிலான பதட்டமான இடர்பாடுகளின் மத்தியிலும் ஜெபிக்கும் சபையானது தேவனுடைய சமாதானத்தை கண்டடைவது நிஜமான ஒன்று. தேவனுடைய சமாதானம்தானே இந்நாளிலே நாம் ஜெபிக்கையில் நம்முடையதாகட்டும்! ஆமென்.

# நாள் 9

## 15 ஆகஸ்ட் 2017, செவ்வாய்

மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி - நெகிரி செம்பிலான்

☐ 1942ஆம் ஆண்டு 2ஆம் உலக போரின் போது ஜப்பானியர்களின் அட்டூழிய ஆட்சியில் ஜெலூலுங் எனும் இடத்தில் 1400 சீன கிராமவாசிகள் படுகொலை செய்யப்பட்டனர். அவ்விடத்தில் இன்னமும் வாழும் வயோதிகர்களுடைய மன உணர்வுகளின் காயங்கள் ஆற்றப்பட ஜெபி.

☐ உள்ளூர் சமூகங்கள் மத்தியில் நிலவி வரும் அழுத்தமான போதை குற்றவியல்கள் ஒடுக்கப் படவும், போதைப்பித்தர்களுக்கு மறுவாழ்வு சிகிட்சை சரியான விதத்தில் கிடைக்கவும் ஜெபி.

☐ போர்ட் டிக்சனில் உள்ள இராணுவ முகாம்களில் சேவையாற்றிவரும் ஆயிரக்கணக்கான வீரர்கள் தேவ நீதியின்படி வழிநடத்தப்பட்டு இந்த தேசத்திற்காக சேவை செய்ய ஜெபி.

# நாள் 10

16 ஆகஸ்ட் 2017, புதன்

## நிரம்பி வழியும் நம்பிக்கை

சந்தோஷத்திற்கு அடுத்து, தேவனை நம்புகிறதற்கேதுவான மற்றொரு தன்மையானது சமாதானம் ஆகும்.

நம்மில் கிரியை செய்யும் பரிசுத்த ஆவியின் வல்லமை மூலமாக தேவன் நம் நம்பிக்கையை நிறப்புகிறார் என்பது ஆச்சரியம். இவ்வித நம்பிக்கை சொந்தமாக உற்பத்தியாவதோ அல்லது சரீர/உணர்ச்சி வயப்பட்ட நிலையில் வெளிவருவதோ அல்ல. அது பரிசுத்த ஆவியானவரின் கிரியை. அவருடைய மகத்துவமும் சர்வ வல்லமையும் நம்மில் கிரியை செய்வதாகும்.

நமக்கு பரிசுத்த ஆவி அவசியம் ஏனெனில் அவருடைய வல்லமையில்தான் நாம் தேவன்பேரில் நம்பிக்கை/நிச்சயத்தில் நிரம்புகிறோம். எனது ஜெபம் என்னவெனில் நாம் ஜெபிக்கும் போது, ஆராதிக்கும்போது, அனுதின ஜீவியத்தில் வேதத்தை வாசிக்கும்போது பரிசுத்த ஆவியாவர் வல்லமையாக நம்மில் கிரியை செய்யவேண்டும் என்பதுதான். நாம் தேவனுக்கென்று எவ்வித பணி செய்திருப்பினும், பரிசுத்த ஆவியானவர் நம்மை வல்லமையினாலும் பலத்தினாலும் நிரப்பும்போது, இறுதி முடிவு யாதெனில், நாம் தேவனுக்குள் நம்பிக்கையின் நிச்சயத்தைபெற்றிருக்கிறோம் என்பதுதான் உண்மை.

இருண்டதும், நம்பிக்கையற்றதுமான இந்த உலகில், நம்பிக்கை என்பது அரிதானதும் விலையேறப்பட்டதாயுமிருக்கிறது.  மலேசியாவிலுள்ள இயேசு கிறிஸ்துவின் திருச்சபைகள் கிறிஸ்து இயேசுவின் நற்செய்தியை பிடித்துக்கொண்டு இயேசுவுக்காக உயர்ந்து பலமாக நிற்கவும், தேவனுக்குள் நிச்சயமான நம்பிக்கையில் நிறைந்திருக்கவும் வேண்டும். அப்பொழுதுதான் தேசத்தில் மாற்றம் கொள்ளும் சபையாகத் திகழ முடியும்.

தேவன் மலேசியாவை ஆசீர்வதிப்பாராக. தேவன் மலேசியாவின் சபைகளை ஆசீர்வதிப்பாராக. ஆமென்

மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி - மலாக்கா

☐ மலாக்கா மாநிலத்தில் பல்வேறு இனங்களை பிரதிநிதிக்கும் மக்கள் மீது தேவ ஆசீர்வாதத்தை பறைசாற்றுவீர்களாக. மலாய்க்காரர், சீனர், இந்தியர், பெரனாக்கான் சீனர், கிரிஸ்தாங், செட்டி போன்றவர்கள்.

# நாள் 10

## 16 ஆகஸ்ட் 2017, புதன்

☐ மேம்பாட்டிற்கென மலாக்கா கடலோர மாநகராட்சி நிலங்கள் கோருவதால் பெருமளவு நிலங்கள் எடுத்துக்கொள்ளப்படுகிரது. இத்திட்டங்கள் சுற்றுப்புற சூழல், கடல் பகுதி ஜீவனம், மீனவர் வாழ்க்கை ஆகியவை பாதிப்படையக்கூடும். இவ்வித நிலம் கோரப்படுகிற திட்டங்களில் சரியான சட்டங்கள் அமலாக்க அதிகாரிகளின்வழி கடைபிடிக்கப்பட ஜெபி.

☐ 1511ல் போர்த்துக்கீசியரால் ஏற்படுத்தின கொடூர ஊடுருவலில் கிறிஸ்தவ மார்க்கத்திற்கு எதிராக மக்கள் கொண்டுள்ள தவறான கண்ணோட்டத்தை தேவன் மாற்றிப்போடவும், தேவனுடைய ஏஜண்டுகளாக உள்ள திருச்சபைகள், தொலைந்துபோன ஆத்துமாக்களுக்கு ஊழியம் செய்கையில் கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்தவும் ஜெபி.

பொறுப்புடமைப் பகுதி 2 - நாள் 6-10
நம்பிக்கையின் தேவன் (ரோமர் 15:13)

நம்பிக்கையை தேவன் மேல் வைப்பதற்கு அவர் யார் என்பதின் விவரம்.

- சொந்த மன எண்ணம்: வாழ்க்கை கொந்தளிப்பிலும் பாடுகளிலும் இருக்கிறது.
- பிரகடனம்: தேவன்தான் ஒரே நம்பிக்கை.




**உன்னிலிருந்து துவங்குகிறது**

**தேவனோடு உன் இருதயத்தை ஆராய்ந்து பார்.**

▸ மறுபடியும் மீள்பார்வை செய்யவேண்டிய பகுதிகள்

☐ வேலைப்பளுவினால் அழுத்தப்பட்டிருக்கிறேன்

☐ வாழ்க்கை செலவினங்கள் அதிகரிப்பால் கவலை

☐ எனக்கு வேலை கிடைக்காமல் இருக்கிறது

☐ தேவனுக்கு ஊழியம் செய்வதில் ஆர்வம் இல்லை

பொறுப்புள்ள கணக்கொப்புவிப்பு (உன் துணையாளருக்கு சிறு குழுவிற்கு).

சோதனைப் பட்டியல் ☑

வேத வாசிப்பு நாள் 6-10 ☐ நாள்____ வாசிக்கவில்லை ☐____ முடிக்கவேண்டியது
ஆவிக்குரிய குறிப்பேடு ☐ ஐந்து நாள்கள் உபவாச ஜெபத்தில், நீ தேவனுடன் கற்றுக்கொண்ட இடைபடுதலின் அனுபவத்தை எழுதுக.

□ செயல் திட்டம்: நம்பிக்கையின் ஒரே மூல காரணர் தேவன்

1. உன் மனப்பாங்கு - இடது புறத்திலிருந்து வலது புறத்திற்கு செல்லுதல்.

| | |
|---|---|
| அமைதியின்மை | |
| கலங்கின இருதயம் | |
| மகிழ்ச்சியில்லை | |
| விட்டு விட மனமில்லை | |
| சகிக்கக்கூடாத சூழ்நிலை | |

□ மேல்காணும் எந்த சூழ்நிலையை நீ கடந்த வந்தாய் எப்படி தேவன் வலதுபுறத்திற்கு செல்ல உதவினார் என்பதையும் உனது துணையாளரிடம/சிறு குழுவிடம் சொல்லு.

இந்த வாரத்திற்கான இலக்கை நிர்ணயம் செய் - பாதிக்கப்பட்ட நபரிடம் பேசும்படி தேவன் உன்னை உணர்த்தியிருக்கலாம். அதைக்குறித்து நீ என்ன செய்யவிருக்கிறாய்?

# நாள் 11

17 ஆகஸ்ட் 2017, வியாழன்

## தேவன் நமக்கு அவர் வைத்திருக்கும் திட்டத்தை அறிந்திருக்கிறார் எனும் நம்பிக்கை

(எரேமியா 29:11)

எரேமியா 29:4-9ல், பாபிலோனிலே சிறைபிடிக்கப்பட்டுப்போன யூதர்களை எரேமியா தேற்றுகிறார். பாபிலோனை தங்கள் சொந்த இருப்பிடமாகக்கொண்டு, சந்ததிகளைப்பெருக்கி, வியாபாரங்களை வர்த்திக்கச்செய்து, அவர்கள் தங்கியிருக்கும் பட்டணத்திற்காக ஜெபிக்கும்படி புத்தி சொல்லுகிறார். ஆனால் பொய் தீர்க்கதரிசிகளுடையவார்த்தைகளை புறக்கணிக்கவும் சொல்கிறார். தேவன் அவர்களுடைய சிறையிருப்பு 70 வருடங்கள் என நியமித்துள்ளார். அந்த சிறையிருப்பின் காலம் நிறைவடையும்போது தேவன் தம் சகாயத்தைக் காண்பித்து தன் சொந்த மண்ணுக்கு மறுபடியும் கொண்டுவருவார்.

வந்த கடிதத்தை கண்ட யூதர்கள் குழப்பமடைந்தவர்களாய் அவர்களின் சிறையிருப்பின் காலம் முடிந்துவிட்டது என நினைத்தார்கள் ஆனால் எரேமியாவோ 70 வருடங்கள் காத்திருக்கச் சொன்னார். அதுவரைக்கும் உள்ளூர்வாசிகளைப்போல தங்கள் பிரயாசங்களினால் பாபிலோனின் அமைப்புத்திட்டத்தில் பங்கெடுக்கச்சொன்னார். தங்கள் எதிரியின் தேசத்தில் செழித்திருக்கும்படி கூறி பிறகு கொள்ளையாடப்பட்டதும் ஆதரவற்றதுமாயிருக்கிற தங்கள் சொந்த மண்ணுக்குத் திரும்ப கட்டளையிடப்பட்டிருந்தனர். யாருமே இந்த வார்த்தையில் நம்பிக்கை கொண்டிருக்க மாட்டார்கள்.

எனினும் தேவனுடைய யோசனைகளும் வழிகளும் நம்மைக்காட்டிலும் உயர்ந்ததென எரேமியா மூலமாக வசனம் 11ல் கூறியிருக்கிறார். "நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்கு கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே".

நமது நம்பிக்கை நாம் எவ்வளவு அறிவுடையவர்களாக இருக்கிறோம் என்பதில் அல்ல, ஆனால் "தேவன் அறிந்திருக்கிறார்" என்பதில்தான் அடங்கியிருக்கிறது. அவர் முன்குறித்தும் ஒரு திட்டத்தைக்கொண்டவராகவும் இருக்கிறார். நாம் நமது நம்பிக்கையை எல்லா இடத்திலும் காணப்படுகிற, எல்லா வல்லமையும் உடைய, எல்லா ஞானமும் உடைய தேவனிடம்தான் வைத்திருக்க வேண்டும். அவருடைய சமாதானத்தில் நாம் திளைத்திருந்து நமது வேலைகளை நலமாய் செய்து தேவனுடைய மகத்துவமான கிரியைகள் மீது நம்பிக்கைக் கொண்டிருக்க வேண்டும்.

# நாள் 11

## 17 ஆகஸ்ட் 2017, வியாழன்

மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி - ஜோகூர்

☐ 10 முதல் 19 வயது வரை உள்ள பதின்ம வயதினர்கள் சட்டத்திற்கு புறம்பான வகையில் கர்ப்பந்தரித்து பிள்ளைகளை பெற்றெடுக்கும் விகிதத்தில் 2ஆம் நிலையில் உள்ளது ஜோகூர். இது 2012-2015ன் புள்ளி விவரங்கள். நெறிதவறும் செயல்களுக்குப்பின்னால் கிரியை செய்யும் ஆவிகளுக்கு எதிராக நாம் ஜெபிக்கவும் பாதிக்கப்பட்ட பதின்ம வயதினர்களுக்கும் அவர்கள் ஈன்றெடுக்கிற பிள்ளைகளுக்கும் போதுமான உதவி நலன்கள் செய்யவேண்டியும் பிரார்த்திப்போம்

☐ தெப்ராவ் ஜலசந்தியில் ஓரங்களில் வசிக்கும் ஓராங் செலேத்தார் ஜனத்தை ஓரங்கட்டாதபடிக்கு அவர்கள் நலன்களை அரசாங்கம் காக்க ஜெபி. பலமுறை அவர்கள் மேம்பாட்டுத்திட்டங்களுக்கென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

☐ ஜோகூரின் கிழக்கு கடலோரப்பகுதியான கோத்தா திங்கி, பெங்கெராங், மெர்சிங் ஆகிய பகுதிகள் இந்தோனேசிய கள்ளக்குடியேறிகள் நுழைவாசலாகத் திகழ்கின்றனர். காவற்படையினர் கடுமையான சட்டங்களை அமல்படுத்தி, இவர்களுடைய நுழைவையும், நடவடிக்கைகளையும் முடக்க ஜெபி.

# நாள் 12
18 ஆகஸ்ட் 2017, வெள்ளி

## தேவன் நமக்கு நலமாக்கி வைத்திருக்கிறார் எனும் நம்பிக்கை
(எரேமியா 29:11)

ஒரு மனிதனுடைய திட்டம் (யோசனை) என்பது அவனுடைய செயல்நடவடிக்கையையும் அதின் விளைவையும் கொண்டுவரும் எனப்பொருள்படும். ஒருவன் தீய எண்ணங்களை கொண்டிருக்கிறான் என்றால் அவனிடத்தில் நன்மையை எதிர்பார்க்க முடியாது.அவன் மாறுவேஷந்தரித்து பல பாதிப்புகளை அவன் செயல்களினால் நடத்தியிருக்கிறான் என்றால், அதிலிருந்து அவன் திரும்புவது கடினமே.

தேவன் நல்ல எண்ணங்களை அவருடைய ஜனங்களுக்கு வைத்திருந்து அவை தீமைக்கல்ல அவர்களின் நலனுக்கென்றே கொண்டிருக்கிறார். எபிரெய மொழியில் திட்டம் என்பதற்கு “மக்கஷபா” என்று பொருள் அதாவது நோக்கம், எண்ணம், சாதனம்,வடிவமைப்பு என அர்த்தம். ஒரு மனுஷனுக்குள்ள நலன் அவனுக்கு பாதுகாப்பை நல்கி, பத்திரப்படுத்தி, சகாயம் அளித்து, செழிப்பும் ஆரோக்கியமும் அருளுகிறது. சிறையிருப்பு தங்களை சிறுமைப்படுத்தும் காரியம் என யூதர்கள் நினைத்த வேளையில் தேவன் அதனை அவர்களுக்கு நன்மையாகவும் தங்கள் வழிகளில் எல்லாம் பூரணப்படுத்தும் வழிவகை எனவும் அத்திட்டத்தில் அவர்களை வழிநடத்துகிறார்.

இஸ்ரவேலரின் சிறையிருப்பானது தேவனுடைய மறுசீரமைப்பையும் தாவீதினுடைய இராஜ்ஜியத்தின் எழுப்புதலின் துவக்கத்தையும் காண்பிக்கிறது. நிஜத்தில், நாமும்கூட இக்கட்டான நம்பிக்கையற்ற சூழலில் தள்ளப்படுவதின் காரணம், அங்குதான் அவர் மறு நிர்மாணிப்பையும், மறுசீரமைப்பையும் நம் வாழ்க்கையில் கொண்டுவருகிறார். தேவனுடைய வழிகள் நமக்கு விளங்கிக்கொள்ளமுடியவில்லையென்றாலும் அவருடைய இருதயத்தை நாம் நம்ப வேண்டும். அவருடைய சித்தத்தின் வழியாக நல்ல எண்ணங்களை நமக்காக கொண்டிருக்கிறார். நமது வாழ்விலும், தேசத்திலும், குடும்பத்திலும், தனிப்பட்டவிதத்திலும் அவர் நடப்பிக்கிற செயல்கள், நமக்கு நன்மையும் அவரில் தேர்ச்சி பெறவும் செய்கிறார்.

மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி - சபா

☐ 70களில் மலேசியாவின் பணக்கார மாநிலத்தில் 2ஆம் நிலையிலிருந்த சபா, இன்றைக்கு ஏழ்மை விகிதம் உயர்ந்து 19.7மூ ஆக காணப்படுகிறது. ஏழை மற்றும் பணக்காரன் வித்தியாசம் குறையும்படி மாநில அதிகாரிகள் நல்ல திட்டங்களை வித்திட ஜெபி

# நாள் 12

18 ஆகஸ்ட் 2017, வெள்ளி

☐ இந்தோனேசியா மற்றும் பிலிப்பீன்ஸ் தேசங்களிலிருந்து வந்து குவியும் சட்டவிரோத வேலையாட்களுக்கு எதிராக ஜெபி. அண்டை நாட்டு கடலோரப்பகுதிகளில் ரோந்தில் ஈடுபடும் அதிகாரிகள் ஒன்றிணைந்து பலப்படவும், இந்த சிக்கல்களுக்கு ஞானமாய் தீர்வு காணவும் ஜெபி.

☐ சொந்த மண்ணுக்குரிய பூர்வீக மக்கள் மாநிலமின்றி முறையான பத்திரங்கள் இன்றி தங்கள் நிலத்தையும் சொந்தங்கொண்டாட முடியாத சூழலில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய அடையாள ஆவணங்கள் கிடைக்கப்பெற பதிவு அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட பிரதிநிதிகள் பிரயாசங்கள் எடுக்கவும், தேவன் தாமே அவர்களை தற்காத்து தங்கள் நிலங்கள் அவர்களுக்கு மறுபடியும் கிடைக்கும்படி நியாயஞ்செய்ய வேண்டுமென ஜெபி.

# நாள் 13

19ஆகஸ்ட் 2017, சனி

## எதிர்காலம் உண்டு என்ற நம்பிக்கை

(எரெமியா 29:11)

தேவனின் திட்டங்கள் எதிர்காலத்திற்குரியது. அவை வருங்காலங்களில் நடக்கும் என்ற நிச்சயத்திற்குரியவை. “எதிர்காலம்” என்பது முடிவு என்பவற்றை தாண்டி வருகின்ற நாட்களை குறிப்பது. வருகின்ற சந்ததி, வம்சாவளி போன்றவையும் எதிர்காலத்தை குறிக்கும்.

காலந்தோரும் தேவன் தமது பிள்ளைகளுக்கு அடைக்கலமான தேவனாய் இருக்கிறார். அவர் நமது தலைமுறைக்கு தந்தையாய் மட்டுமில்லாமல் நித்தியமான இராஜாவாயிருக்கிறார். அவரது திட்டங்கள் ஆதிமுதல் அந்தம் வரை தடைபடாத ஒன்றாய் இருக்கிறது. நாம் வாழும் இந்த தலைமுறை அவரின் நித்திய காலவரிசையில் (eternal timeline) ஒரு சிறிய புள்ளி மட்டுமே. ஒரு தலைமுறையின் முடிவை பற்றியே ஒவ்வொரு மனிதனின் எண்ணங்கள் சார்ந்துள்ளன.ஆனால் தேவனின் இதயமோ ஆதி முதல் நித்திய காலமுமாயிருக்கிறது. அவர் எதிர்காலத்திற்காக முன்குறித்ததை நிச்சயமாகவே நிறைவேற்றுவார்.

ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை குறித்து திட்டமிட அறிந்துள்ளனர். பல கஷ்டங்களையும் வலிகளையும் தாண்டி தங்கள் பிள்ளைகளுக்கு சிறத்த எதிர்காலத்தை வழங்க முற்படுகின்றனர். மனிதர்களாகிய நாமே நமது சந்ததிக்கு தேவையானவைகளை வழங்க பிரயாசப்படும் பொழுது நித்திய தேவனாயிருக்கிறவர் தமது சந்ததிக்கு தேவையானவைகளை தமது நித்திய சித்தத்திற்கு ஏற்ப கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? பல நேரங்களில் வாழ்வில் ஒரு பிரகாசமான எதிர்காலத்தைக் குறித்த ஒரு நம்பிக்கை இல்லாமல் இஸ்ரவேலரைப்போல கஷ்டங்களையும், துன்பங்களையும், அவமானங்களையும் சந்திக்கும் பொழுது பிதாவாகிய தேவன் சதாகாலமும் நம்மோடு கூட வாசம் செய்து பெரிய காரியங்களைச் செய்வார் என நம்பிக்கை கொள்ள வேண்டும். நமது எதிர்பார்ப்புகளுக்கு எதிராக காரியங்கள் நடக்கும் பொழுது நமது நித்திய தேவன் நமக்காக ஒரு சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்தி வைத்துள்ளார் என்ற சந்தோஷமான ஒரு நம்பிக்கைக்குள் கடந்துச் செல்ல வேண்டும்.

மலேசியாவின் மாநிலங்களுக்காக ஜெபி - சரவாக்

☐ காபித், பெலாகா, மற்றும் பராம் போன்ற கிராமப்புறங்களின் சுகாதாரம், கல்வி, தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்து போன்றவற்றின் முன்னேற்றத்திற்காக ஜெபிக்கவும்.

# நாள் 13

19 ஆகஸ்ட் 2017, சனி

☐ சட்டவிரோத வன அழிப்பு நடவடிக்கைகள் மற்றும் அணை திட்டங்கள் இயற்கை வளங்களின் அழிவுக்கும், கிராமவாசிகளுக்கும் பலவகையான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

☐ இம்மாநிலத்தில் அதிக எண்ணிக்கையில் உள்ள கிறிஸ்தவர்களுக்காக ஜெபியுங்கள். அவர்கள் தேவனுக்காக வாஞ்சையுடன் முன்வந்து தேவ வார்த்தைகளை பகிர்வதிலும், சீஷத்துவத்திலும், ஒருமனதாக சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு பாடு பட வேண்டும். சமூக சீர்கேடுகளிலிருந்து விடுதலையை பெற்றுக் கொள்ளவும் ஜெபிக்கவும். (எ.கா: மது, பாலியல் ஒழுங்கின்மை, போதை பொருட்களுக்கு அடிமை).

# நாள் 14

**20 ஆகஸ்ட் 2017, ஞாயிறு**

## தேவனின் வாக்குத்தத்தத்தால் உறுதிப்படுத்தப்பட்ட நம்பிக்கை

(எரேமியா 29:11)

"நம்பிக்கை" என்பது நாம் வாஞ்சிக்கும் காரியங்கள் எதிர்காலத்தில் கண்டிப்பாக நடக்கும் என்ற ஒரு நிச்சயத்தைக் கொடுப்பதாகும். அக்காரியத்தின் தொடக்கத்தையும் முடிவையும் கணிக்கும் ஒரு தூண்டுகோலாகக் கூட இதை ஏற்றுக் கொள்ளலாம். இந்த நம்பிக்கையின் நிச்சயத்தை தானியேல் எரேமியா புத்தகத்தில் அடையாளம் கண்டுள்ளான் என்பதை தானியேல் 9:2 மூலமாகக் காணலாம். (தானியேலாகிய நான் எருசலேமின் பாழ்கடிப்புகள் நிறைவேறித்தீர 70 வருஷம் செல்லுமென்று கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியோடே சொல்லிய தொகையைப் புஸ்தகங்களால் அறிந்துக் கொண்டேன்)

நமது நம்பிக்கையின் உறுதி இயேசு கிறிஸ்துவும் அவரது ஜீவனுள்ள வார்த்தைகளுமே. இவை இரட்சிப்புக்கும், விடுதலைக்குமான நம்பிக்கையை நமக்கு அளிக்கும். பலநேரங்களில் நமது நம்பிக்கை ஒரு சிலர் மேலும், சில காரியங்கள் மேலும் சார்ந்துள்ளன. அப்படி இருக்கையில் எதிர்பார்க்காத சூழ்நிலைகள் நடக்கும் பொழுது சந்தேகங்களும் குழப்பங்களும் நம்மை ஆட்கொண்டுவிடுகின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் தேவனை நோக்கி ஜெபித்தாலும் நமது எண்ணங்கள் காற்றினால் அடிப்பட்டு அலைகின்ற கடல் அலைகளைப் போலாகின்றன.(யாக்கோபு 1:6-8) எனவே இஸ்ரவேல் தேசத்தில் மறுசீரையும் விடுதலையையும் கொண்டுவர தானியேல் மிகுந்த நம்பிக்கையோடு ஜெபித்து தேவனுடைய வாக்குத்தத்தைக் கோரியதுபோல நாம் மன்றாடுவது கடினமே.

நமது தேசத்தின் நம்பிக்கை அரசியல்வாதிகள் மேலும், அவர்களின் வாக்குறுதிகள் மற்றும் அவர்கள் அறிமுகப்படுத்துகிற கொள்கைகள் மேலும் அல்ல. நமது நம்பிக்கை எல்லாவற்றையும் நன்மைக்கு ஏதுவாக முடித்துக் கொடுக்கிறவரும் தமது தீர்மானத்தின்படி செய்கிற தேவனின் மேல் சார்ந்திருக்க வேண்டும். இதனை அப்போஸ்தலர் 27:25-ல் பவுல் கூறிய கூற்றில் தெளிவாகக் காணலாம்: "...எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்".

# நாள் 14

## 20 ஆகஸ்ட் 2017, ஞாயிறு

மலேசியாவின் கூட்டரசு பிரதேசங்களுக்காக ஜெபி - கோலாலம்பூர்

☐ சபைகள் ஊடாக தேவனுடைய மகிமை வெளிப்படவும், தேவனுடைய இராஜ்யமும் நீதியும் வெளிப்படவும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்பும் எல்லா மேட்டிமையும் நிர்மூலமாவும் ஜெபி. (11 கொரிந்தியர் 10:5)

☐ சீரான சட்டங்கள் அமல்படுத்தப்படவும், அவை சூது, போதை பொருள் விநியோகம் மற்றும் பல சமூக சீர்கேடுகளை கட்டுப்படுத்த உதவ ஜெபி. ஏழைகளுக்கும், கஷ்டப்படும் குடும்பங்களுக்கு உதவ பலர் முன்வர ஜெபி.

☐ நெரிசல் மற்றும் தூய்மைக்கேடுகளுக்கு மத்தியில் இயற்கை சீராக பராமரிக்கப்பட்டு தேவனுடைய படைப்பின் அழகை அனைவரும் அனுபவிக்க ஜெபி.

# நாள் 15

## 21 ஆகஸ்ட் 2017, திங்கள்

## எதிர்காலத்தில் நடக்கும் என்ற நிச்சயமுடைய ஒரு நம்பிக்கை

(எரெமியா 29:11)

தானியேல் 9:4-19-ல் குறிக்கப்பட்டுள்ள தானியேலின் மனந்திரும்புதல் மற்றும் விண்ணப்ப ஜெபமானது எரேமியா தீர்க்கதரிசியின் தீர்க்கதரிசன வார்த்தைகளுக்கு மறுமொழி கொடுப்பதாக அமைந்துள்ளது. தேவனின் வார்த்தை என்றும் அற்பமாக திரும்பாது. அவரின் செயல்கள் எக்காலமும் தோற்றுப் போவதே இல்லை. அவர் எதிர்ப்பார்ப்பதெல்லாம் அவரின் வார்த்தைகளை அவரது பிள்ளைகள் தீவிரமாக ஏற்றுக் கொண்டு அவரது திட்டங்களுக்கேற்ப சரியான வேளையில் அவரோடுக் கூட இணைந்து செயல்பட வேண்டும் என்பதே.

தேவனுடைய வார்த்தையானது ஏற்ற காலத்தில் ஏற்ற நேரத்தில் நிச்சயமாக நிறைவேறும். எரேமியாவின் மூலம் தேவன் தன் பிள்ளைகளோடுக் கூட இடைப்பட்டதாவது: “உங்கள் முழு இருதயத்தோடும் என்னை தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுப்பிடிப்பீர்கள். நான் உங்களுக்கு காணப்படுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் நான் உங்கள் சிறையிருப்பைத் திருப்பி, நான் உங்களைத் துரத்திவிட்ட எல்லா ஜாதிகளிலும் எல்லா இடங்களிலுமிருந்து உங்களைச் சேர்த்து, நான் உங்களை விலக்கியிருந்த ஸ்தலத்துக்கே உங்களைத் திரும்பிவரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார்” (எரேமியா 29:13-14).

தேவன் இஸ்ரவேலருக்கு மூன்று எளிய கட்டளைகளை முன்வைத்தார்:

பொறுப்புடன் வாழ்க்கையை வாழ வேண்டும் முழு இருதயத்தோடு தேவனை நோக்கி கூப்பிடவும் ஜெபிக்கவும் வேண்டும். விடுதலைக்காக தேவன் குறித்துவைத்துள்ள காலத்திற்காக பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் காத்திருக்க வேண்டும். இஸ்ரவேலரைப்போல நாமும் இந்த அழைப்பை/கட்டளைகளை ஏற்றுக் கொண்டு நமது தேசத்தின் மாற்றத்திற்க்காக தேவனிடத்தில் காத்திருப்போமா? அன்போடும் விடாமுயற்சியோடும் இந்த தேசம் கட்டப்படவும் தேவனை முழு இருதயத்தோடு தேடவும் நாம் எதிர்பார்த்த காரியங்கள் அவரின் திட்டங்களுக்கேற்ப அவர் குறித்த காலத்தில் நிறைவேறும் வரை பொறுமையோடு காத்திருக்கவும்.

# நாள் 15

21 ஆகஸ்ட் 2017, திங்கள்

மலேசியாவின் கூட்டரசு பிரதேசங்களுக்காக ஜெபி - புத்ராஜயா

 புத்ராஜயா நமது நாட்டின் மத்திய நிர்வாக மையமாகும். தேவனின் கரம் இம்மையத்தின் அனைத்து நிர்வாக காரியங்களோடே கூட இடைப்பட வேண்டுமென ஜெபி. தேவனின் இராஜ்யமும் அவரின் நீதியும் இப்பிரதேசத்தில் வெளிப்படவும் இருளின் அதிகாரங்கள் முற்றிலுமாக தகர்த்து போடப்பட வேண்டும் என்பதற்காகவும் ஜெபி.

 "புத்ரா" என்றால் குமாரன்.∴அரசன் என்று பொருள் படும். நீதியின் குமாரன் இப்பிரதேசத்தில் ஆட்சிக்குள் வரவும், அவரின் தூதர்கள் தங்களின் பாதுகாப்பு கோட்டுக்குள்ளாக இந்த தேசத்தை தீமையான மற்றும் அநீதியற்ற காரியங்களிலிருந்து காத்துக் கொள்ளவும் ஜெபிக்கவும்.

 பிரதமருக்காகவும் அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களுக்காகவும் ஜெபிக்கவும். அவர்கள் உண்மையும், உத்தமமும், நீதியுமாய் தீமையை வெறுத்து செயல்பட ஜெபிக்கவும். தேவனுடைய பிள்ளைகள் அவர்தம் வேலைகளில் வேதத்தில் சொல்லப்பட்டது போல உப்பாயும், வெளிச்சமாயும் இருந்து செயல்பட ஜெபிக்கவும்.

பொறுப்புடைமைப் பகுதி 3 - நாள் 11-15
எதிர்காலமும் நம்பிக்கையும் (எரேமியா 29:11)

**தேவன் உனக்காக ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார்: எதிர்காலத்திற்குரிய நம்பிக்கை.**

சொந்த மன எண்ணம்: எதிர்பாராத காரியங்களை எதிர்ப்பார்ப்பது.

பிரகடனம்: நிச்சயமாக நடக்கும் என்ற நம்பிக்கை.




**உன்னிலிருந்து துவங்குகிறது**

**நீ எங்கே இருக்கிறாய்? - மனசாட்சியின் பிரதிபலிப்பு - உன் உள்ளான சுயம்.**

- **கீழ்காண்பவற்றுள் எந்த காரியம் உனக்கு மிக முக்கியமானது?**

மதிப்பு நிலை: ☐ பதவிகள், கல்வி தகுதிகள், திறன்கள்.

மதிப்பு நிலை: ☐ நம்பகத்தன்மையும் நம்பிக்கையும் மற்றவர்களின் உன்னைப் பற்றி என்ன கருதுகிறார்கள்?

மதிப்பு நிலை: ☐ தேவனை முழுமையாக நம்பியிருக்கிற ஒரு நிலை. சமாதானம், மகிழ்ச்சி, பாதுகாப்பு, மற்றும் திடநிலையான எண்ணங்களைக் கொண்டு வரும்.

ஏன் ☑-ஐ தேர்ந்திடுத்தீர்கள்?

---

---

பொறுப்புள்ள கணக்கொப்புவிப்பு (உன் துணையாளருக்கு/சிறு குழுவிற்கு).

சோதனைப் பட்டியல் ☑

வேத வாசிப்பு நாள் ☐ நாள் ____ வாசிக்கவில்லை ☐ ____ முடிக்கவேண்டியது

ஆவிக்குரிய குறிப்பேடு - ஐந்து நாள்கள் உபவாச ஜெபத்தில், நீ தேவனுடன் கற்றுக்கொண்ட இடைபடுதலின் அனுபவத்தை எழுதுக.

---

---

**செயல் திட்டம்  தேவன் உன் வாழ்க்கைக்காக திட்டங்களை வைத்துள்ளார்.**

**தேவனின் அழைப்பு 3 படிநிலைகலைக் கொண்டுள்ளது:**

**பொறுப்புடன் வாழ்க்கையை வாழ வேண்டும் → தேவனை முழு மனதோடு தேட வேண்டும் → பொறுமையுடனும், எதிர்பார்ப்புடனும் தேவனுக்குள் காத்திருக்க வேண்டும்.**

**இப்பொழுது நீ கடந்து வருகிற ஏதாகிலும் சூழ்நிலைகளில் (கல்வி, வேலை, குடும்பம், தனிப்பட்ட வாழ்க்கை) வளர்ச்சி இருப்பின் அதை பகிரு.**

**உன்னை உற்சாகப்படுத்திய தேவனின் பிரசன்னத்தின் மூலயமாக என்னென்ன மாற்றங்களை உன் வாழ்வில் சந்தித்துள்ளாய்?**

**தேவனை அறியாத ஒரு தோழரிடம் உனது மாற்றத்திற்கான சாட்சியைப் பகிர்ந்துக் கொள்.**

# நாள் 16

22 ஆகஸ்ட் 2017, செவ்வாய்

## எப்பொழுதும் இருக்கின்ற ஒரு நம்பிக்கை

பலர் இன்று நம் மத்தியில் "நம்பிக்கை உண்டா?" என்ற கேள்வியை எழுப்பிக் கொண்டிருக்கின்றனர். இயேசு கிறிஸ்துவை அறிந்து அவரை ஏற்றுக் கொண்ட "ஷ்ரியா" மற்றும் "ஈராக்"-ல் உள்ள தேவ பிள்ளைகளைக் குறித்து இந்நேரத்தில் நினைவு கூற விரும்புகிறேன். தேவனை பின்பற்றுகிற ஒரே காரணத்தால் சபைகள் அங்கு துன்புறுத்தப்படுகின்றன. அவர்கள் புரிந்துக்கொள்ள வேண்டிய விஷயம் ஒன்றே: எவ்வளவுதான் கஷ்டங்களையும் கண்ணீரையும் அவர்கள் கடந்து வந்தாலும் பிதாவாகிய தேவன் எக்காலமும் எந்நேரமும் அவர்களோடுக் கூட இருந்து பாதுகாப்பை அளிக்கிறார் என்பதையும், நிச்சயமான நம்பிக்கை ஒன்று உண்டு என்பதையும் அவர்கள் அறிந்துக் கொள்ள வேண்டும். இது "ஷ்ரியா" மற்றும் "ஈராக்"-ல் உள்ள தேவ பிள்ளைகளுக்கு மட்டுமல்ல, நமக்கும் தான். தேவனின் பாதுகாப்பு எப்பொழுதும் அவர் பிள்ளைகளின் மேல் இருப்பது மட்டுமல்லாமல், நமக்கு ஏற்புடைய நம்பிக்கை தயார் நிலையில் உள்ளது.

அந்த வகையில் அப்போஸ்தலனாகிய பேதுரு தேவனின் பிள்ளைகளுக்கான நம்பிக்கையை பற்றி கூறியுள்ளார். நம்பிக்கை என்பது நிச்சயமாக நடக்கும் என்கிற நோக்கை குறிப்பதாகும். இயேசு கிறிஸ்துவிடத்தில் நாம் வைத்துள்ள நம்பிக்கை நித்திய நம்பிக்கையாகும். அதற்கு முடிவுமில்லை அது உயிரற்றதுமாயிருப்பதில்லை. தற்காலிகமாக சாதகமான எண்ணங்களை அளித்து அதற்கு அப்பால் எந்தவொரு காரியத்தை செய்யாத நம்பிக்கையும் இதுவல்ல.

ஆனால் இயேசுவினடத்தில் உள்ள நம்பிக்கையோ எல்லாவற்றையும் சந்திக்க கூடிய பெலனை நமக்கு தரும். இன்று என் வாழ்க்கை பாவத்தினாலும், சோதனைகளாலும், நோய்களாலும், பாதுகாப்பற்ற தன்மைகளால் நிறைந்திருந்தாலூம் நிச்சயமாக ஒரு நாள் அவையாவும் என்னை தீண்டாது என்கிற நம்பிக்கையை நமக்குத் தரும்.

# நாள் 16

22 ஆகஸ்ட் 2017, செவ்வாய்

மலேசியாவின் கூட்டரசு பிரதேசங்களுக்காக ஜெபி - லாபுவான்

☐ லாபுவானில் இயேசு கிறிஸ்துவின் நாமம் தரிக்கப்படவும், அவரது இராஜ்யத்தின் நோக்கங்கள் நிறைவேறவும் ஜெபிக்கவும். (ஏசாயா 46:10) பல்வேறு கலாச்சாரங்களிலிருந்து வருகிற மக்களும், விசுவாசிகளாவதற்கு முன்னாள் இயேசு கிறிஸ்துவிடத்தில் சந்தோஷத்தையும், சமாதானத்தையும், நம்பிக்கையையும் பெற்றுக் கொள்ள ஜெபி.

☐ வெளிநாட்டு நீதி மையமாக திகழும் லாபுவான், உண்மையும் உத்தமுமாய் நேர்மையுடன் நல்ல ஆட்சிக்குள் வழிநடத்தப்பட ஜெபி. சுற்றுலாவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள 120 மில்லியன் ஒதுக்கீட்டை அதிகாரத்திலுள்ளவர்கள் சரியான முறையில் பயன்படுத்தப்பட ஜெபி.

☐ லாபுவான் இயேசு கிறிஸ்துவுக்குள் எழும்பவும், ஆவிக்குரிய எழுப்புதல், தேவனுடைய வார்த்தையில் ஆழமாக பெலப்படவும், ஜெபத்தில் தரித்திருக்கவும் ஜெபி. அயலாருக்காகவும் நண்பர்களுக்காகவும் மனதுருக்கத்தினால் அவர்கள் நிறம்ப ஜெபி.

# நாள் 17

23 ஆகஸ்ட் 2017, புதன்

## தேவனின் இரக்கத்தோடே கூட தொடங்கும் நித்திய நம்பிக்கை

1 பேதுரு 1:4 - அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்துக்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்.

நாம் சில சமயம் சந்திக்கும் நம்பிக்கையில்லாத சூழ்நிலைகளில், தேவன் நம்மைப் பார்த்து யோசிப்பது என்ன? பல நேரங்களில் நாம் "உனக்கு இது தேவைதான், நீ செய்ததுக்கான பலனை அனுபவி" என தேவன் யோசிக்கிறார் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் தேவனோ நம்மேல் இரக்கமுள்ளவராயிக்கிறார் என வேதத்தில் பார்க்கலாம். அப்படி நாம் சந்திக்கும் நம்பிக்கையில்லாத சூழ்நிலைகளில் தேவன் நமக்காக பரிதபித்து நமது சூழ்நிலைகளை சரிசெய்ய முற்படுகிறார்.

நமது நம்பிக்கையின் அஸ்திபாரம் நமது நீதியோ, நமது சொந்த பரிபூரணமோ அல்ல. நாம் பாவம் நிறைந்தவர்களாக இருக்கிறோம், தேவனோ பரிபூரணராயிருக்கிறார். தேவனின் இரக்கமே நமது நம்பிக்கையின் அஸ்திபாரமாயிருக்க வேண்டும். இரக்கம் என்பது தேவன் நமது சூழ்நிலைகளிலிருந்து நமக்கு விடுதலை கொடுக்க வழிகளை ஏற்படுத்துவதே ஆகும். நாம் தேவனின் பார்வையில் பாவிகளாயிருப்பதால் நாம் நமது சொந்த நீதியையும் சொந்த பரிபூரணத்தையும் சாராமல் இருப்பதை தடுக்கலாம் (ரோமர் 3:23). கிறிஸ்தவர்களாகிய நாம் கூட தேவனுக்கு முன்பாக பாவிகளாக நியாயந்தீர்க்கப்படுகிறோம் (1 யோவான் 1:8,10). ஆனால், தேவனின் இரக்கமானதோ நமது விசுவாசத்தையும், மனந்திரும்புதலையும், ஞானஸ்நானத்தையும் பொறுத்தே உள்ளது (அப்போஸ்தலர் 2:36-38).

மலேசியாவின் 8 ஆற்றல் ஜெபம்: பொருளாதாரம் மற்றும் வணிகம்

☐ பொருளாதார ரீதியிலான வெளிப்பாடும், மீட்பும் பெற, எல்லாத்துறைகளிலும் தேவனுடைய நோக்கத்திலால் ஆன உக்கிராணத்துவம் செயலாக்கம் பெற, அவை சரியாக கையாளப்பட்டு தேவனுடைய மகிமையை கொண்டுவரும் செல்வ பகிர்ந்தளிப்பாக இருக்க ஜெபி.

# நாள் 17

## 23 ஆகஸ்ட் 2017, புதன்

☐ குடிபெயர்ந்த தொழிலாளர்களையும் மற்றவர்களையும் ஏமாற்றும் வகையில் நடத்தப்படும் வணிகங்களும், சொந்த சுயநலத்திற்க்காக செய்யப்படும் வணிகங்களும், தீங்கு விளைவிக்கும் பொருட்களை தயாரிக்கும் வணிகங்களும் கண்டுபிடிக்கப் பட்டு முற்றிலுமாக தகர்க்கப்பட ஜெபி.

☐ தேவ பிள்ளைகள் தேவனுக்கு விரோதமான காரியங்களுக்கும் அமைப்புமுறைகளுக்கும் ஒத்து போகாதபடி தேவனுக்கு பயந்து கீழ்படிந்து வாழ ஜெபி. கிறிஸ்தவ தொழில் முனைவர்கள் வணிகத்தை வளர்ச்சியடைய செய்து வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி சமுதாயத்தை முன்னேற்ற தேவன் ஏற்புடைய ஞானத்தையும் அறிவையும் உத்வேகத்தையும் வழங்குமாறு ஜெபி. கிறிஸ்தவ முதலாளிகள் தங்கள் தொழிலாளர்களை நன்முறையில் வழிநடத்தவும் தேவனுடைய கட்டளைகளுக்கும், மதிப்புகளுக்கும், கொள்கைகளுக்கும் கீழ்படிந்து வணிகத்தை நடத்த ஜெபி.

# நாள் 18

24 ஆகஸ்ட் 2017, வியாழன்

## மறுபிறப்பின் மூலமாக உதிக்கும் இயேசுவுக்குள்ளான நித்திய நம்பிக்கை

1 பேதுரு 1:4 - "...தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்".

புதிய ஏற்பாட்டில் இரட்சிப்பின் அனுபவத்தை "மறுபிறப்பு" அல்லது "புதிய பிறப்பு" போன்ற சொற்களைக் கொண்டு விவரிப்பதைக் காணலாம்.

யோவான் 3-ஆம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து நித்திய வாழ்வைப் பற்றி கேள்வி எழுப்பிய நிக்கொதேமு என்கிற பரிசேயன் ஒருவனைக் காண்கிறார்.இயேசு அவனிடம், "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தைக் காண மாட்டான்" எனக் கூறியிருக்கிறார். ஒரு மனிதன் மாம்சத்தினால் அல்லாமல் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்தால் மட்டுமே தேவனுடைய குடும்பத்தில் ஒரு அங்கத்தினராக மாற முடியும்.

"தேவன் நம்மை மீண்டுமாகப் பிறப்பிக்கிறார்" என வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது மறுபிறப்பையும், மறுஜென்ம முழுக்கினாலும் குறிப்பதாகும். ஒருவன் தேவ ஆவியினால் புதுப்பிக்கப்பட்டு, மறுபிறப்பை கடந்துச் சென்று ஒரு புதிய மனிதனாக மாற்றப்பட்டான்ஒழிய அவன் நித்திய வாழ்வைக் காண மாட்டான் என்பதை குறிக்கிறது. நீங்கள் ஜெபித்து இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டபின்பு உங்கள் வாழ்வில் எந்தவொரு மாற்றமும் இல்லாவிடில் நிச்சயமாகவே நீங்கள் தேவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொண்டு மறுபிறப்புக்குள் கடந்து சென்றுள்ளீர்களா என்பது கேள்விக்குறியாகிறது.

மறுபிறப்புக்குள் கடந்து செல்லும் பொழுது, நமது பேச்சிலும், நடத்தையிலும் ஒரு வித்தியாசம் இருக்க வேண்டும். நித்திய நம்பிக்கை மறுபிறப்பின் மூலமாகவே உதிக்கும். இயேசு கிறிஸ்து நமக்கு ஒரு புதிய ஆரம்பத்தை வழங்குவதோடு ஒரு புதிய வாழ்க்கையை நமக்குத் தருகிறார்.

"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்துப்போயின, எல்லாம் புதிதாயின" (11 கொரிந்தியர் 5:17).

# நாள் 18

24 ஆகஸ்ட் 2017, வியாழன்

மலேசியாவின் 8 ஆற்றல் ஜெபம்: அரசாங்கம்

- தேவனுடைய நித்திய கரங்கள் அரசாங்கத்தின் ஆட்சி முறைகளின் மேல் இருக்குமாறு ஜெபி. முழு அதிகாரமும் கறைபடிந்த நிலையில் இருக்கையில் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் சரியான முறையில் செயல்படுத்தப்பட ஜெபி.

- மலேசியாவின் அமைச்சரவையில் நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் உண்மையாகவும், தேவனுக்கு கீழ்படிந்தும் நடக்க ஜெபி. தேசத்தின் நலனுக்காகவும் பாதுகாப்பான சூழ்நிலைக்காகவும் அவர்கள் நியாயத்தோடு செயல்பட ஜெபி. அமைச்சர்கள் ஊழல், அநீதி, மற்றும் பேராசை போன்றவற்றை எதிர்த்து தகர்த்தெறிய ஜெபி.

- அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படுகிற அனைத்து “பில்”, கொள்கைகள் மற்றும் சட்டங்கள் ஏழைகளுக்கும், விதவைகளுக்கும், தேவைப்படுவோருக்கும் கவனம் செலுத்தும் வகையில் சமர்ப்பிக்கப்பட ஜெபி.

# நாள் 19
25 ஆகஸ்ட் 2017, வெள்ளி

# இயேசு கிறிஸ்துவின் உயிர்தெழுதலின் மூலம் உதிக்கும் நித்திய நம்பிக்கை

1 பேதுரு 1:4 - "...அவர். இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி..."

இயேசு கிறிஸ்துவின் உயிர்தெழுதல் அவரே இவ்வுலகின் மெய்யான தேவன் என் நிருபித்தது (1 கொரிந்தியர் 15:3-4). இதுவே நித்திய நம்பிக்கையின் உண்மையான அஸ்திபாரம். இதனை பேதுரு தனது அறிவை வைத்தோ, தான் கற்றதை வைத்தோ எழுதவில்லை. தன் சொந்த அனுபவங்களை வைத்தே இதனை எழுதியுள்ளான். கடும் தோல்விகளைக் கண்ட பேதுருவின் வாழ்வில் தேவன் எண்ணி முடியாத காரியங்களைச் செய்துள்ளார். இயேசுவுக்கு அவன் அதிகபட்சம் தேவைப்படும் சமயத்தில் இயேசுவை மறுதலித்தான். அப்படி இருந்தும்கூட இயேசு கிறிஸ்துவின் உயிர்தெழுதலைக் கண்ட சாட்சியாக மாறினான். இயேசுகிறிஸ்துவின் உயிர்தெழுதலின் வல்லமை அவன் வாழ்வை முற்றிலுமாக மாற்றியது. பலவீனமும் கோழையுமாயிருந்த ஒருவன் கிறிஸ்துவுக்காக தைரியமான தலைவனாக மாறினதை பேதுருவின் வாழ்வில் காணலாம்.

இதைப்போலவே, பவுலின் எண்ணங்களையும் பிலிப்பியர் 3:10-ல் காணலாம்: "இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும்". இந்த வார்த்தையானது இயேசு கிறிஸ்துவின் உயிர்தெழுதலையும், 2000 ஆண்டுகளுக்கு பிறகு வாழும் நம்மை இணைக்கும் நற்செய்தியாயிருக்கிறது. இது ஆவியானவரின் பிரசன்னத்தோடு/தூண்டுதலோடு பிரசங்கிக்கப்பட்ட தேவனுடைய வார்த்தை: "நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து" (1 கொரிந்தியர் 15:3-4).

இயேசு கிறிஸ்துவின் உயிர்தெழுதலே நமது நித்திய நம்பிக்கை.

# நாள் 19

25 ஆகஸ்ட் 2017, வெள்ளி

மலேசியாவின் 8 ஆற்றல் ஜெபம்: ஊடக்கம்

☐ இயேசு கிறிஸ்துவே உண்மையின் தேவன் என்ற கூற்றும் தேவனே எல்லா வகையான தொடர்புக்கும் மூலம் என்ற கூற்றும் வெளிபடவும். தேவனின் நோக்கம் இதில் நிறைவேற ஜெபிக்கவும். (எ.கா: தேவனின் சத்தியம் வெளிபட)

☐ தேவனின் கிருபையோடே உண்மை மற்றும் பொய்யான செய்திகள் பகுத்தறியப்பட. பொய்யான தகவல்களையும் செய்திகளையும் பரப்புவதை தவிர்த்து விட்டு, உண்மையான தகவல்களை முறையாக பகுத்தறிந்து சரியான முறையில் பயன்படுத்தப்படவேண்டும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இணையத்தை சரியான முறையில் பயன்படுத்த சொல்லித்தர ஜெபி.

☐ செய்திகளை/தகவல்களைப் பதிவு செய்பவர்களும், திருத்தம் செய்பவர்களும், அதனை உலகிற்கு பரப்புபவர்களும் நேர்மையான முறையில் எந்தவித பயமுமின்றி சமநிலையாக தங்களின் வேலையைச் செய்ய ஜெபி.

# நாள் 20
26 ஆகஸ்ட் 2017, சனி

## ஜீவனுள்ள நம்பிக்கையானது நிச்சயித்த சுதந்தரம் என்பதாகும்
(1 பேதுரு 1:4)

நித்திய நம்பிக்கையை குறித்து வேதாகமத்தில் “inheritance” போன்ற கூற்றுகள் குறிக்கின்றன. “Inheritance” என்பது நமக்கு நித்திய வாழ்வுக்ககான நம்பிக்கையை அளிக்கிறதோடும் வருங்காலங்களில் நமக்கு தேவன் ஏற்படுத்தியுள்ள திட்டங்களின் நிச்சயத்தையும் நமக்கு அளிக்கிறது. ஆனால் அவையாவும் இந்த உலகபுறமான வாழ்வில் நமக்கு கிடைத்துவிடும் என்கிற நிச்சயம் இல்லை. இதனை நம் வாழ்வில் பெற்றுக் கொள்வதற்கு நாம் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். 1 பேதுரு 1:4 - “inheritance”-ஐ பற்றி எழுதப்பட்டிருப்பதாவது:

- ஒருபோது அழிவதில்லை

“அப்தர்டோஸ்” எனும் கிரேக்க பதத்திற்கு ஊழலுக்கோ அழிவிற்கோ உரியது அல்ல -அதாவது அழிவில்லாதது என்று பொருள் - (2 பேதுரு 3:10-13). காலமோ, நித்தியமோ அதனை அழிக்க முடியாது. அதற்கு வயதாவதுமில்லை, அழிவிற்கேதுவாவதுமில்லை, மரணமடைவதுமில்லை.

- ஒருபோதும் அதன் தூய்மை கெடுததுமில்லை

“அமியந்தோஸ் எனும் கிரேக்க பதத்திற்கு கெட்டுப்போகாத அல்லது அழுக்காக்கப்படாத என்று அர்த்தம்”. உலகத்தில் நாம் நோக்கும் பலவகையான நோய்கள், தொற்று வியாதிகள், விபத்துகள் மற்றும் தற்கொலைகள் இதற்குக் கிடையாது.

- ஒருபோதும் மறைவதில்லை

கிரோக்க பதத்தில் அமரண்டோஸ் என்பதற்கு மறையாத, நெடுங்காலமாயிருக்கிற என்று பொருள். “அமராந்த்” எனும் கிரேக்க பதத்திற்கு இது மாறுபட்டிருக்கிறது. அதாவது, புராணத்தில் வரும் என்றென்றும் நிலைத்திருந்து என்றென்றும் அன்பு மாறாத மலர்ந்த மலர். நமது “சுதந்தரிப்பு” பரலோகத்தில் நமக்காக பாதுகாக்கப்பட்டிருக்கிறது! அதை எவறாலும், (சாத்தான் உட்பட) நம்மிடமிருந்து திருடவே பறிக்கவோ முடியாது. நமது நம்பிக்கையின் அஸ்திபாரமான □சுதந்தரிப்பின் இந்த தன்மைகளே நமது நம்பிக்கையை நித்திய நம்பிக்கையாக பிரதிபலிக்கிறது.

# நாள் 20

26 ஆகஸ்ட் 2017, சனி

மலேசியாவின் 8 ஆற்றல் ஜெபம்: கலை மற்றும் பொழுதுபோக்கு

☐ மலேசியாவின் கலை மற்றும் பொழுதுபோக்குத் துறைக்கான மீட்புக்காக ஜெபி. தேவனின் அபிஷேகத்தினால் நிறைந்து தாலந்துகளைப் பெற்றுள்ள தேவ பிள்ளைகள் இத்துறையை தேவனுடைய நாமத்திற்கென்று ஆக்கிரமிக்க ஜெபி.

☐ தேவனின் அபிஷேகம் பெற்று இத்துறைக்காக அழைக்கப்பட்ட வாலிபர்கள் தைரியமாக எழும்பி சத்தியத்தை அவர்களின் எழுத்துகள் மூலமாகப் பரப்பி சமுதாயத்தை நன்முறையில் செதுக்கவும் ஜெபி.

☐ தேவ பிள்ளைகள் (குறிப்பாக பெற்றோர்கள்) வேதத்திற்கு எதிரான கலை மற்றும் பொழுதுபோக்குத் துறையின் ஆக்கிரமிப்புக்குள் விழாதபடி ஜெபி.

பொறுப்புடமைப் பகுதி 4 - நாள் 16-20
நித்திய நம்பிக்கை (1 பேதுரு 1:3)

நற்செய்தியை பரவச் செய்தல்

சொந்த மன எண்ணம்: என் வாழ்க்கை பாவங்கள், நோய்கள், துன்பங்கள் நிறைந்த வாழ்க்கையாய் இருக்கிறது.

பிரகடனம்: தேவனின் அளவற்ற இரக்கம் என் நம்பிக்கையாயிருக்கிறது




**உன்னிலிருந்து துவங்குகிறது**

**தேவனோடு கூட உன் வாழ்க்கையை ஆராய்ந்து பார்.**

**- உன் வாழ்வில் தேவனின் இரக்கம் தேவையான பகுதிகள்:**

☐ என் பாவமான வாழ்க்கை (கெட்ட பழக்கங்களுக்கு அடிமை மற்றும் பல).

☐ என் வாழ்க்கையை சோர்வாக்கும் நோய்கள்/வியாதிகள்

☐ சந்தோஷத்தைப் பறித்துக் கொண்ட துன்பங்கள்/பிரச்சனைகள்

☐ ஏதோ ஒரு அலட்சிய உணர்வு, தொலைந்துபோன வேலையால், நேசித்தவரால், குடும்ப உறுப்பினர், உறவினர், நண்பர்கள் பாதுகாபின்றி இருத்தல் எனும் உணர்வு.

அன்புள்ள இயேசுவே, நான் பலவீனவும், சோர்வும், நம்பிக்கையற்றதுமாயிருப்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். உம்முடைய அளவற்ற இரக்கத்தாலும் அன்பாலும் என்னை நிரப்பி எனக்கு புது பெலனையும் நம்பிக்கையைத் தாரும் ஐயா. இயேசுவின் நாமத்தினால் ஜெபிக்கிறேன். ஆமென்

## பொறுப்புள்ள கணக்கொப்புவிப்பு (உன் துணையாளருக்கு/சிறு குழுவிற்கு).

**சோதனைப் பட்டியல்**

**வேத வாசிப்பு நாள் 16-20 ☐ நாள்____ வாசிக்கவில்லை ☐____ முடிக்கவேண்டியது**

**ஆவிக்குரிய குறிப்பேடு - ஐந்து நாள்கள் உபவாச ஜெபத்தில், நீ தேவனுடன் கற்றுக்கொண்ட இடைபடுதலின் அனுபவத்தை எழுதுக.**

________________________________________

________________________________________

செயல் திட்டம்: ☐ தேவனின் இரக்கத்தைப் பிடித்துக் கொள்.

“உன்னிலிருந்து துவங்குகிறது” பகுதியை மீண்டுமாக யோசனை செய். தேவனின் இரக்கத்தினால் நீ என்னென்ன மாற்றங்களை உன் வாழ்வில் சந்தித்துள்ளாய்?

அவரின் உயிர்தெழுதலின் வல்லமையை பேதுருவைப்போல் அற்புதமாக ருசித்த நீ, தேவனை அறியாத ஒரு மனிதனோடுகூட நற்செய்தியை பகிர்ந்துக் கொள்.

அவரின் பெயர்: ______________________________

சந்திப்புத்திட்டம்: ______________________________

பலன்/பதில்(**Response**): ______________________________

# நாள் 21

27 ஆகஸ்ட் 2017, ஞாயிறு

## ஒரு யாத்திரீகனின் நம்பிக்கைப்பயணம்

(சங்கீதம் 42:11)

“என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு என் முகத்திற்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன்”

தாவீது பல தாலந்துகளைக் கொண்ட ஒரு இசைக் கலைஞர். “கிராம்” விருதுக்கு சென்றிருந்தால் மைக்கல் ஜாக்சனை விட பல விருதுகளை வென்றிருப்பார் போலும். சங்கீதம் 42:11-ல் தாவிது பாடியுள்ள சங்கீதத்தை மறுபடியுமாக சங்கீதம் 43:5-ல் காணலாம். தாவிதின் சங்கீதங்களுக்கு ஒரு கருவை பரிந்துரைக்க முற்படுகிறேன், “A human cry of hope for his soul.” “தனது ஆன்மாவிற்கான மானிட கதறல்”.

சில சமயங்களில், நான் உடனடியாக செய்ய வேண்டிய காரியங்களைக் குறித்து என் ஆத்துமா எனக்கு உணர்த்தும். அவ்வேளைகளில் நான் ஆவிக்குரிய ஜீவியத்தில் சிறியவயதுள்ளவனாயிருந்தபடியால் அவற்றைக் குறித்து எனக்கு உணர்வில்லாதிருந்தது. ஆனால் இப்பொழுதோ, ஆவிக்குறிய ஜீவியத்தில் வளர்ச்சியடைந்தப்பின் என் ஆத்துமாவையும் தேவனையும் புரிந்துக் கொள்ளவும், வகைப்படுத்தவும் முடிகிறது. அதுமட்டுமின்றி தேவனுக்காக என் ஆத்துமா வாஞ்சையாயிருப்பதையும் உணரமுடிகிறது. ஒரு யாத்திரீகனின் பயணத்தின்போது உள்ள மூன்று படிகளை ஒவ்வொரு தனிப்பட்டவரும் தொட்டு தெளிவு படுத்திக்கொள்ளட்டும்.

முதலாவதாக, தேவனிடத்தில் முழுமையாக நம்பிக்கையாயிருப்பது. அவர் இருக்கிறவராகவே இருக்கிறார் என்பதற்காக மாத்திரமே நாம் அவரை முழுமையாக நம்ப வேண்டும். இரண்டாவதாக, தேவனை நமது நம்பிக்கையாகவும் நமது வெளிச்சமாகவும் அனுபவிக்கும்பொழுது நம் வாழ்வில் இருளுக்கு இடமில்லாமல் போய்விடும். மூன்றாவதாக, தேவனிடத்தில் நாம் அன்பாயிருக்கும் பொழுது நம் நம்பிக்கையும் அவரிடத்தில் வளருவதோடு செங்கடலைக் எவ்வித பயமுமில்லாமல் கடப்பதுபோல அசைக்கமுடியாத ஒரு நம்பிக்கையையும் உருவாக்கும். நாம் நமது நம்பிக்கையை எப்படி இன்று அளவிட்டுக் கொண்டிருக்கிறோம்? தேவனோடுகூட அந்த நம்பிக்கையின் அனுபவத்தை தாவிதைப்போல நாமும் உணருகிறோமா?

# நாள் 21

27 ஆகஸ்ட் 2017, ஞாயிறு

மலேசியாவின் 8 ஆற்றல் ஜெபம்: சட்டமும் நீதித் துறையும்

☐ முறையான சட்ட அமைப்பின் மூலமும், ஆட்சியின் மூலமும் தனியுரிமையும், நீதியும் சரியான முறையில் காக்கப்பட ஜெபி.

☐ நீதித் துறையில் உள்ள நீதிபதிகள் சட்ட ஆட்சியை மேலோங்கச் செய்யவும், நீதிக்கு சரிகட்டவும், கருணையோடும், இரக்கத்தோடும் சமநிலையான தீர்ப்புகளை வழங்க ஜெபி. மலேசியாவின் சட்டத்துறை நீதிக்காக அவர்களது பணியை செவ்வனே செய்து முடிக்க ஜெபி.

☐ அரசாங்கத்தின் சட்ட ஆலோசகராக செயல்படும் சட்டத்துறையின் தலைவர் சீரான முறையில் அவர்களது ஆலோசனையை அரசாங்கத்திற்கு வழங்க ஜெபி. அவர் அவரது பணியை உண்மையுமாயும் உத்தமுமாயும் தேவனுக்கு பயந்துச் செயல்பட ஜெபி.

# நாள் 22

28 ஆகஸ்ட் 2017, திங்கள்

## தேவனிடத்தில் காத்திருக்கும் பொழுது உதிக்கும் நம்பிக்கை

(சங்கீதம் 42:11)

நம்பிக்கை என்றால் என்ன? “ஆக்ஸ்/போர்ட்” அகராதியில் நம்பிக்கையை “எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்கிற தைரியம்” அல்லது “எதிர்காலத்தில் ஒரு காரியம் கண்டிப்பாக நடக்கும் என்கிற நிச்சயம்” என குறிக்கப்பட்டுள்ளது. வேதாகமத்தில், தாவீது தன் ஆத்துமாவோடுக்கூட பேசிக் கொண்டிப்பதைக் காணலாம். நமக்கு பசிக்கும்பொழுது உணவுகடையைக் கண்டால் உடனடியாக நமக்குத் தேவையான உணவை ஆர்டர் செய்வோம். நாம் ஆர்டர் செய்த உணவு வர தாமதித்தாலும் பொறுமையுடன் நாம் உணவுக்காக காத்திருந்து உணவை உண்போம். அப்படி உண்ணும்பொழுது நமது பசி தீர்ந்து நாம் உற்சாகமாகிவிடுவோம். தேவனுக்குள்ளான நம்பிக்கையும் அப்படிதான். தேவனிடத்தில் நாம் நம்பிக்கை வைப்பது நாம் பசியோடு உணவுக்காக காத்திருப்பது போலதான். தேவன் நமது கிறிஸ்தவ ஜீவியத்தில் ஒரு சிறந்த எதிர்காலத்தை நமக்காக ஏற்ப்படுத்தி தருவார் என்பதே தேவனுக்குள்ளான நம்பிக்கை.

தாவீது தன் ஆத்துமாவுக்கு இவற்றையெல்லாம் உணர்த்த முயன்றது போல நாமும் தேவனுக்குள்ளான நம்பிக்கைக்காக வாஞ்சிப்போமா? “உம்மில் மாத்திரமே எனக்கு இளைப்பாறுதல் கிடைக்கிற வரைக்கும் என் ஆத்துமா இளைப்பாறுதலின்றி திரியும்” என பரிசுத்த அகஸ்டின் தன் நம்பிக்கையைக்குறித்து கூறுகிறார். தேவனுக்குள்ளான நம்பிக்கையில் நமது ஆத்துமாவின் தாகங்களுக்கு தேவன் மனநிறைவை அளிப்பார் என வாஞ்சையாயிருப்போம். வேதாகமத்தில் குறிக்கப்படும் நம்பிக்கை எக்காலமும் அசைக்கப்படமுடியாததும், அளவிடற்கறியதும், வரையறையில்லாததுமாயிருக்கிறது. தேவனுக்குள்ளான நம்பிக்கை பொறுமையும், விடாமுயற்சியுடையதாயிருக்கிறது. அந்நம்பிக்கை நமது கிறிஸ்தவ ஜீவியத்தை தைரியத்தோடும், உறுதியோடும் முடிக்க உதவி செய்கிறதோடு சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் நமக்குத் தரும்.

மலேசியாவின் 8 ஆற்றல் ஜெபம்: கல்வி

☐ தேவனின் கரங்கள் கல்வித் துறையில் இடைப்பட்டு மாணவர்களை செதுக்கி விடாமுயற்சியுடைய, ஒழுக்கமான மற்றும் அறிவார்ந்த மாணவர்களை உருவாக்க ஜெபி.

# நாள் 22

## 28 ஆகஸ்ட் 2017, திங்கள்

☐ எழும்பி வரும் சந்ததியினர் இராஜ்ஜியத்தின் மாறுதலுக்காக தங்கள் இருதயங்களிலும் சிந்தைகளிலும் போராடுகிற விசுவாசக்கூட்டத்தார் எழும்பி கடந்து செல்வதற்கு முன்வரும்படி ஜெபி. இந்த மாற்றம் வேதாகம மதிப்புகளுக்கும் சத்தியத்திற்கும் ஏற்றதாக இருக்க உறுதி செய். உற்சாகமும் விசேஷமுமான தேவனின் ஐக்கியம் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் இடைபட ஜெபி.

☐ கல்வித் திட்டங்களை திட்டமிடுபவர்களுக்கு மத்தியில் தேவனின் ஞானம் இருக்கவும், அத்திட்டங்கள் 21-ஆம் நூற்றாண்டுக்காக மாணவர்களை தயார் படுத்தும் வகையில் அமையவும் ஜெபி. கற்ப்பிப்பவர்கள் உண்மையுமாயும் முழுமனதோடும், புதுமையான வகைகளை கையாண்டு கல்வியை கற்றுத் தர ஜெபி.

## நாள் 23
### 29 ஆகஸ்ட் 2017, செவ்வாய்

# நம்பிக்கை எதிலும் குறைவாவதில்லை
(சங்கீதம் 42:11)

கொரிந்தியர்களுக்கு எழுதிய கடிதத்தில் பவுல், “இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது் இவைகளில் அன்பே பெரியது” என எழுதியுள்ளார். தேவனால் அளிக்கப்படுகிற எல்லாவிதமான ஆவிக்குரிய வரங்களைக் காட்டிலும் நம்பிக்கையை பவுல் இங்கு குறிப்பிட்டிருக்கிறார். நமக்கு தீர்க்கதரிசனங்களைக் கூறும் வரம் கொடுக்கப்பட்டிருந்தால் அவை நிழலைப்போல மறைமுகமாக நம் வாழ்வில் கிரியைச் செய்யும். சுகமாக்கும் வல்லமையில் நாம் ஈடுபடலாம் ஆனால் அதுவும் மறைந்து போகும். ஆனால் இவைகளுக்கெல்லாம் மத்தியில் நம்பிக்கை எப்பொழுதும் எக்காலமும் நிலைத்திருக்கிறதாயிருக்கிறது. ஏன் பவுல் நம்பிக்கையை அதிகமாக வலியுறுத்தியுள்ளார்? நமது கிறிஸ்தவ ஜீவியத்தில் நம்பிக்கை எவ்வளவு முக்கியமானது?

தேவன் நிச்சயமாக ஒரு நாள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைக் கொடுப்பார் என இஸ்ரவேலர் நம்பிக்கையுடன் காத்திருந்தனர். அவர்களின் முன்னோர்களும் அவர்களைப் போலவே வனாந்தரத்தில் நம்பிக்கையுடன் காத்திருந்தனர். யெகோவா தேவனின் வாக்குத்தத்தமே அவர்களை அத்தனைக் காலம் நம்பிக்கையுடன் காத்திருக்கச் செய்தது. அதைப்போலவே நாமும் நமது மேசியாவான இயேசுகிறிஸ்துவை முன்னிறுத்தி உண்மையான நம்பிக்கையை கைப்பற்றிக் கொள்ள வேண்டும். இந்த பகுதியை நான் எழுதி கொண்டிருந்த வேளை, எட்வர்ட் மோத் எழுதிய “என் நம்பிக்கை எதிலும் குறைவாவதில்லை” என்ற பாடலொன்று என் நினைவிற்கு வந்தது. 1834-ல் இங்கிலாந்தில் எட்வர்ட் மோத் போதகராக இருந்த வேளையில் தன் அங்கத்தினர் ஒருவரின் வியாதியாயிருந்த மனைவியைக் காணச் சென்றிருந்தார். அவ்வேளையில் இந்த பாடலைப் பாடின உடனே அற்புதமாக அந்தப் பெண் சுகமடைந்துள்ளார்.

“என் நம்பிக்கை எதிலும் குறைவாவதில்லை,

இயேசுவின் இரத்தம் நீதியானது,

அதின் சட்டத்தை தொடுவதற்கு தைரியமில்ல

ஆனால் இயேசுவின் “நாமத்தில்” சார்ந்திருக்க வாஞ்சிக்கிறேன்”.

# நாள் 23

29 ஆகஸ்ட் 2017, செவ்வாய்

மலேசியாவின் 8 ஆற்றல் ஜெபம்: குடும்பங்கள்

☐ தேவனின் நோக்கம் ஒவ்வொரு தனிப்பட்ட நபரின் வாழ்க்கையிலும் உணரப்பட ஜெபி. குடும்பங்களில் உடைந்துப் போன உறவுகள் மீண்டுமாக புதுப்பிக்கப்பட ஜெபி.

☐ திருமண பந்தங்களை முறிக்க சத்துருவால்/எதிரிகளால் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களும் முறியடிக்கப்பட ஜெபி. தேவனானவர் பெற்றோர்களுக்கு மேய்ப்பனாயிருந்து அவர்களை தம் கரங்களினாலும் கட்டளைகளினாலும் சூழ்ந்து கொள்ளவும் ஜெபி. இதனால் அவர்களின் குடும்ப வாழ்க்கை உலகத்திற்கு ஒளியாகவும் வரும் சந்ததியினருக்கு சாட்சியாகவும் மாற ஜெபி.

☐ கல்யாணமாகாத தேவ பிள்ளைகள் தங்களை முழுமையாக தேவனின் அன்புக்குள் ஒப்புக் கொடுத்து சரணடைய ஜெபி. ஒரு குறைவில்லாமல், வாழ்க்கையில் எல்லாவற்றையும் பெற்றுக் கொள்ள ஜெபி.

# நாள் 24

30 ஆகஸ்ட் 2017, புதன்

## கஷ்டங்களை ஆசீர்வாதமாக மாற்றும் நம்பிக்கை

(சங்கீதம் 42:11)

தாவீது தன் ஆத்துமாவின் நம்பிக்கைக்காக அழுததை வாஞ்சித்ததை நாம் இவ்வேளையில் நினைவில் கொள்ள வேண்டும். முதலில் ஏன் தாவீதின் ஆத்துமா தியங்கிற்று? ஒருவேளை அவன் முழுமனதோடு நம்பிய அவன் நண்பர்கள் அவனுக்கு துன்பத்தையோ அல்லது கஷ்டத்தையோ ஏற்படுத்தியிருக்கலாம்.

"க்வாய்ட்டிஸ்" இயக்கத்தை தோற்றுவித்த பிரஞ்சு சமயப் புத்தெழுச்சி இயக்க ஆதரவாளர் மேடம் க்யான் 17-ஆம் நூற்றாண்டுகளில் சபைகளின் ஒரு முக்கியச் சின்னமாக கருதப்பட்டார். பலர் அவரை "குவேக்கர் - ஏற்ற நேரத்தில் பிறவாதவர்" எனவும் அழைத்தனர். சமுதாயத்தில் அவரது பங்களிப்பை ஃபெலோன், ஜான் வெஸ்லி போன்ற ஆவிக்குரிய தலைவர்கள் பெரிதும் பாராட்டியுள்ளனர். தனது 17-ஆம் வயதில் நோய்வாய்ப்பட்டவரும், செல்வந்தருமான 22 வயது உடையவரை மணமுடித்தார் மேடம் க்யான். திருமண வாழ்க்கையில் பல கஷ்டங்களையும் தடைகளையும் தன் மாமியார் மற்றும் பணிப்பெண் மூலமாக கடந்து வந்தவர், 28 வயதில் தன் கணவனின் திடீர் மரணத்தால் விதவையாகினார். மிகவும் போராட்டத்திற்குரிய வாழ்க்கையை கடந்து வந்துள்ளார் மேடம் க்யான்.

இருப்பினும், தன் ஆவிக்குரிய அனுபவங்களாலும் தேவனிடத்தில் ஊன்றியிருந்த நம்பிக்கையாலும் மேடம் க்யானின் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக உருவெடுத்தது. தன் ஆத்துமாவை பெலப்படுத்தவும் தேவ சமூகத்தில் காத்திருக்கவும் மேடம் க்யான் தேவனோடே கூட தன் நேரத்தை அதிகமாகச் செலவிட்டார். தேவனைக் குறித்து ஆழமாக அறிந்துக் கொள்ள வேதத்தை விடாமுயற்சியுடன் தியானித்தார் மேடம் க்யான். தனது கஷ்டங்களை பலருக்கு ஆசீர்வாதமாக தேவனே மாற்றினார் என் முழுமனதுடன் நம்பினார். எவ்வளவுதான் கஷ்டங்களையும் தடைகளையும் போராட்டங்களையும் சந்தித்தாலும் தேவனிடத்தில் தன்னை ஒப்புக்கொடுத்து நம்பிக்கையோடு தன் வாழ்க்கையை நகர்த்திய மேடம் க்யானைப் போல நாமும் நம் வாழ்வை தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்து நம்பிக்கையோடு வாழ்வோம்.

# நாள் 24

30 ஆகஸ்ட் 2017, புதன்

மலேசியாவின் 8 ஆற்றல் ஜெபம்: மதம்

☐ மலேசிய சட்டத்தில் வரையறுக்கப்பட்டது போல மத சுதந்திரம் காக்கப்படவும், மதவெறி போன்றவை களையப்படவும் ஜெபி.

☐ சுயநலத்துக்காக மதத்தை அஸ்திபாரமாக அரசியல்வாதிகள் பயன்படுத்தாதபடி இருக்கஜெபி.மனித உரிமைக்காகவும் மத சுதந்தரத்திற்காகவும் குரல் கொடுக்கும் தேவ பிள்ளைகள்/தலைவர்கள் மீது தேவனின் பாதுகாப்பு இருக்க வேண்டுமென ஜெபி.

☐ சபைகள் எழும்பி தேவனின் முகவர்களாக மாறி அன்பையும், சந்தோஷத்தையும், சமாதானத்தையும் பரப்ப ஜெபி.

# நாள் 25
31 ஆகஸ்ட் 2017, வியாழன்

## தேவனின் நகரத்தை நோக்கிய நம்பிக்கை
(சங்கீதம் 42:11)

அண்மையில் நான் என் குடும்பத்தினருடன் மூன்று நாட்களுக்குச் சுற்றுலா சென்றிருந்தேன். அப்பொழுது விமான நிலையத்தில் “இது தேவனுடைய நகரம்” என்கிற விளம்பரம் ஒன்றைக் கண்டேன். அந்த விளம்பரப் பலகையைக் கண்டவுடன் 3-ஆம் நூற்றாண்டுகளில் அதிக பிரபலமும் செல்வாக்கும் பெற்ற ஹிப்போ செயின்ட் அகஸ்டின் அவர்கள் எழுதிய “தேவனின் நகரம்” என்கிற புத்தகம் ஒன்று நினைவிற்கு வந்தது. அப்புத்தகத்தில் அவர் தேவனின் நகரம் தேவ அன்பால் கட்டப்பட்டது எனவும் மனிதனின் நகரம் மனிதனின் அன்பால் கட்டப்பட்டது எனவும் குறிப்பிட்டிருப்பார்.

இவ்வாறாக இந்த இரண்டு நகரங்களைக் குறித்து ஹிப்போ செயின்ட் அகஸ்டின் எழுவதற்கு முன்னமே செயின்ட் ஜான் தி அப்போஸ்டில் பாட்மஸ் தீவில் இருக்கும் பொழுது இதந்த காரியத்தைக் குறித்து எழுதியுள்ளார். அவர் தேவனுடைய சிம்மாசனத்தைக் கண்டிருப்பவராயும், புது உலகம், புது நம்பிக்கை என இரண்டு காரியங்கள் இருக்கின்றன எனவும் கூறியிருப்பார். புது நம்பிக்கை தேவனுடைய வாசஸ்தலமும் அவரின் பிரசன்னம் வீற்றிருக்கும் இடமுமாயிருக்கிறது. மனிதனின் பட்டணம் நிலையற்றதும் அழிவுக்கேதுவானதுமாயிருக்கிறது ஆனால் தேவனின் நகரமோ நித்தியாமனது என் வலியுறுத்தியுள்ளார் செயின்ட் ஜான் தி அப்போஸ்டில். ஆகவே, நமது நம்பிக்கையும் நித்தியமுள்ளதாயிருக்க வேண்டும்.

செயின்ட் அகஸ்டின் தேவ நகரத்தை அமைதியும், கிருபையும் சமாதானத்திற்கேதுவான ஒரு காரியமாக விவரிக்கிறார். ஜான் தி அப்போஸ்டிலோ தேவ நகரத்தை தேவனால் உருவாக்கப்பட்ட புது உலகம், புது நம்பிக்கை என எதிர்காலத்திற்குரிய காரியங்களாக விவரிக்கிறார். ஆகவே, நாமும் நம் எதிர்காலத்திற்குரிய நம்பிக்கையை தேவனிடத்தில் வைப்போமா? இந்த நிலத்தில் நாம் பயணம் பண்ணிக் கொண்டிருக்கிறோம் நமது நோக்கமானது தேவனுடைய நகரமான புதிய எருசலேமையும் தேவனுடைய சிங்காசனத்தையும் நோக்கி இருக்க வேண்டும்.

# நாள் 25

31 ஆகஸ்ட் 2017, வியாழன்

புறக்கணிக்கப்பட்ட மற்றும் உதவியற்ற நிலையில் உள்ள மக்களுக்காக ஜெபி.

☐ அவர்களுக்காக மனமிரங்கி உதவிச் செய்கிற வாஞ்சையை தேவன் கொடுக்குமாறு ஜெபி.

☐ அவர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட அரசு சார்பற்ற இயக்கங்களை நினைவில் கொள். (மலேசியன் கேர், பாதுகாப்பு இல்லங்கள், மற்றும் "Befrienders" போன்ற ஆலோசனை மையங்கள்) தேவன் இவ்வியக்கங்களின் பொருளாதார தேவைகளை சந்திக்குமாறு ஜெபி.

☐ ஏழ்மையின் பிடியில் உள்ளவர்களையும், தனிமையில் வாடுபவர்களையும், மனச்சோர்வடைந்தவர்களையும் தேவனிடத்தில் ஒப்புகொடுத்து ஜெபி. பிள்ளைகளால் கைவிடப்பட்ட பெற்றோர்களுக்காகவும், வீடற்றோருக்காகவும், விபச்சாரத்துக்குள் தள்ளப்பட்டவர்களுக்காகவும் ஜெபி. தேவன் அவர்களுக்கு நம்பிக்கையையும் ஒரு சிறந்த எதிர்காலத்தைத் தருமாறு ஜெபி.

பொறுப்புடமைப் பகுதி 5 - நாள் 21-25
தேவனிடத்தில் நம்பிக்கை (சங்கீதம் 42:11)

**தேவனின் நகரத்தை நோக்கி பயணம்.**

**சொந்த மன எண்ணம்: ஒரு தேசத்தின் பாதுகாப்பற்ற தன்மை தனி நபரின் வாழ்வாதாரத்தையும் நம்பிக்கையையும் பாதிக்கும்.**

**பிரகடனம்: தேவனின் அசைக்கமுடியாத அன்பை சார்ந்துக் கொண்டு அவரையே என் முழு நம்பிக்கையாகக் கொண்டு அவர் பிரசன்னத்தின் அனுபவத்திற்குள்ளாக கடந்துச் செல்வேன்.**




**உன்னிலிருந்து துவங்குகிறது**

**- தேசத்தில் ஒரு யாத்திரீகனின் பிரயாணம் கடினமாகும்போது, எனது மறுமொழி எப்படியாயிருக்கும்? நமது நடை யாத்திரீகனின் பயணத்தில் எப்படி கணக்கில் கொள்ளப்படும்?**

**- தேவன் உன்னை ஒரு நோக்கத்திற்காக மலேசியாவில் வைத்துள்ளார்.**

**☑ ஏற்றவற்றில் குறியிடுக.**

| | | | |
|---|---|---|---|
| மனப்பான்மை | ☐ எதிர்மறை | ☐ நேர்மறை | ☐ நடுநிலை |
| நம்பிக்கை | ☐ இல்லை | ☐ ஆம் | ☐ ஆபத்து |
| **பேச்சு** | ☐ **எதிர்மறை** | ☐ **நேர்மறை** | ☐ **புரிந்து** |
| நடத்தை | ☐ எதிர்மறை | ☐ நேர்மறை | ☐ பொறுமை |
| செயல்கள் | ☐ செயலற்ற | ☐ செயல் கொண்ட | ☐ உயிர்ப்பான |

## பொறுப்புள்ள கணக்கொப்புவிப்பு (உன் துணையாளருக்கு/சிறு குழுவிற்கு).

**சோதனைப் பட்டியல் ☑**

வேத வாசிப்பு நாள் 21-25 ☐____நாள் வாசிக்கவில்லை ☐____ முடிக்கவேண்டியது
ஆவிக்குரிய குறிப்பேடு - ஐந்து நாள்கள் உபவாச ஜெபத்தில், நீ தேவனுடன் கற்றுக்கொண்ட இடைபடுதலின் அனுபவத்தை எழுதுக

______________________________

______________________________

**என் செயல் திட்டம்:** தேவனுடைய இராஜ்யத்திற்குள் கடந்துச் செல்ல உன் பங்கு.

| உன்னால் | இவ்வாரத்தின் குறிக்கோள் | வழங்கத்தக்க | முடிந்தது |
|---|---|---|---|
| நீ (சுயம்) | | | |
| குடும்பம/ துணை் | | | |
| சந்தை வெளி | | | |
| சமுகம் | | | |

## நாள் 26

01 செப்டம்பர் 2017, வெள்ளி

# மெய்யான/உண்மையான விசுவாசம்

உண்மையான விசுவாசமே நம்பிக்கையை மேலும் பெலப்படுத்தும். தேவனிடத்தில் அதிக விசுவாசமாயிருக்கிறவர்கள் எக்காலமும் தங்களின் நம்பிக்கையை இழப்பதே இல்லை.

ரோமர் 4:17-18ல், பவுல் ஆபிரகாமை ஒரு உதாரணமாக இங்கு குறிப்பிடுகிறார். ஆபிரகாம் தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான் என வசனத்தில் பார்க்கலாம். அவர் மனிதனை நம்பாமல் தேவனின் வாக்குத்தங்களையே முழுமையாக நம்பியிருந்தார். தேவனின் வசனத்தில் முழுமனதாயிருந்து அவர் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், உண்மையாக விசுவாசிக்கத்தக்கதான நம்பிக்கையே இதுவாகும். (ரோமர் 4:19-21) அவர் மரித்தோரை உயிருள்ளோராய் எழுப்பினார்.

(ஆதியாகமம் 22:1-19, எபிரெயர் 2:17-19) அதுமட்டுமின்றி, தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்பத்தகாததாயிருந்தும் ஆபிரகாம் தேவனுடைய வார்த்தையை நம்பிக்கையோடே விசுவாசித்தார். (ரோமர் 4:18).

இந்த தேசம் தேவனால் பிரசவிக்கப்பட்டது என்பதை நாம் நம் தேசத்திற்காக மன்றாடி ஜெபிக்கும் பொழுதெல்லாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆபிரகாமுக்கு எப்படி தேவன் அற்புதமான திட்டங்களை வைத்திருந்தாரோ அப்படியே நமது தேசத்துக்கும் தேவன் மகிமையான பச திட்டங்களை வைத்துள்ளார். ஆகவே தேவனின் அற்புதாமான திட்டங்கள் நம் தேசத்தில் நிறைவேற நாம் அவரின் மேல் முழு நம்பிக்கை வைக்க வேண்டும்.

நாம் முழுமையாக நம்பும் நம் தேவன் நம்மை எக்காலமும் கைவிடமாட்டார். முழுமனதோடு நாம் விசுவாசித்து தேவனை நம்பினோமேயானால் நிச்சயமாக தேவன் மலேசியாவை ஆசிர்வதிப்பார். தேவனே, உமது ஜீவனுள்ள வார்த்தையைக் கொண்டு எங்கள் ஜெபங்கள் பெலப்பட இயேசுவின் நாமத்தினால் ஜெபிக்கிறோம். ஆமென்!

# நாள் 26

01 செப்டம்பர் 2017, வெள்ளி

சுகாதாரத்தைக் காக்கும் அமைப்புகளுக்காக ஜெபி.

☐ ஏழைகளுக்கும், கிராமப்புறங்களில் உள்ள அனைவருக்கும் சுலபமான முறையில் மருத்துவ வசதிகள் கிடைக்கப்பெற ஜெபி. மனநலம் பாதிக்கப்பட்டவர்களையும், மனஅழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள இளைஞர்களையும் கண்டறிந்து அவர்களுக்கு சிகிச்சை அளிக்க அரசாங்கம் ஆக்கப்பூர்வமான சுகாதார அமைப்புகளை அமல்படுத்த ஜெபி.

☐ மருத்துவர்கள் மருத்துவ கோட்பாடுகளுக்கு இணங்கி செயல்பட ஜெபி.

☐ முறையான வழியில் மருத்துவ பொருட்களும், மருந்துகளும் உற்பத்தி செய்யப்படவும், தரம் காக்கப்படவும் மருத்துவ உற்பத்தியாளர்களோடு தேவன் இடைபடுமாறு ஜெபி. போலி மற்றும் தரக் குறைவான பொருட்கள் உற்பத்தியாவதை அதிகாரத்திலுள்ளவர்கள் கண்டறிந்து தடுக்கவும் ஜெபி.

# நாள் 27
## 02 செப்டம்பர் 2017, சனி

# விசுவாசம் என்பது தேவனிடத்தில் நம்பிக்கையாயிருப்பது

ஒரு தனிப்பட்ட நபர் மீதோ அல்லது சூழ்நிலைகளின் மீதோ நம்பிக்கை வைப்பது விசுவாசம் அல்ல. தேவனை முழுமையாக சார்ந்திருப்பதே மெய்யான விசுவாசமாகும். ஆபிரகாம் உலகப்புறமான கஷ்டங்களின் மேல் தன் கவனைத்தை வைக்கவில்லை. தங்கள் முதிர்வயதில் ஒருக்காலும் கர்ப்பந்தரிக்க முடியாது என இயற்கையும் வெளிப்படுத்துகிறது

மலேசியர்களுக்குள் நிலவி கொண்டிருக்கிற சந்தேகத்தின் எண்ணங்களுக்கு மத்தியிலும், தொடர்ச்சியாக நடந்துக் கொண்டிருக்கும் பிரச்சனைகளுக்கு மத்தியிலும் நமது ஜெபம் சந்தேகத்தோடே கூட கண்டிப்பாக இருக்ககூடாது. நமது சொந்த எதிர்பார்ப்புகளை முன்வைத்தும், தேவனை கட்டளையிடும் வகையிலும் நம் ஜெபம் இருக்க கூடாது. சில சமயங்களில் ஜெபம் கேட்டப்படாத சூழ்நிலைகளில் மனந்தளர்ந்து போகக் கூடாது. எசேக்கியல் தீர்க்கதரிசி செய்ததுப் போல எந்த வகையான கஷ்டங்கள்/பிரச்சனைகளை அரசியல், கல்வி, பொருளாதாரம், அல்லது குடும்பங்களில் எதிர்நோக்கினாலும் தேவனின் வாக்குறுதிகளை இறுக்கமாகப் பற்றிக் கொண்டு தேவனின் அற்புத கரங்களின் கிருபைக்காக ஜெபிக்கவும். உலர்ந்து போன எலும்புகளை கண்டிப்பாக தேவன் எழுப்புவார். நிச்சயமாக தேவன் மலேசியாவை ஓர் அற்புதமான ஒரு தேசமாக மாற்றுவார் என விசுவாசிப்போம்!

நாம் நம்பும் தேவன் புயலை அடக்குகிறவர். அவர் எல்லாவற்றின்மேலும் அதிகாரமுடையவர். அவர் குறித்து வைத்துள்ள காலத்தில் அவர் திட்டங்கள் நிச்சயமாக நிறைவேறும். ஆனால் அவரின் எதிர்பார்ப்பெல்லாம் ஒன்றே அவரின் பிள்ளைகளாகிய நாம் அவரைத் தேடி உண்மையான விசுவாசத்துடன் அவரை நாட வேண்டும் என்பதே அவரின் ஆசையாகும்.

தனிபட்ட வாழ்க்கையில் தேவனோடு கூட நடக்க ஜெபி

☐ இரட்சிப்பின் நிச்சயத்தை உனக்கு தேவன் கொடுத்த கிருபைக்காக ஜெபி. கிறிஸ்துவுக்குள் நம்பிக்கையும் எதிர்காலமும் உண்டு. நமது தேவை ஒன்றே இயேசுகிறிஸ்து. ஒவ்வொரு நாளும் தேவனுடைய அன்பிற்கு நம்மை ஒப்புக் கொடுக்க ஜெபி.

☐ பரிசுத்தமாயிருக்கவும் தேவன் நம்மை அழைத்த நோக்கம் அவர் நாமம் மகிமைப்பட நிறைவேற ஜெபி. எல்லா காரியங்களிலும் தேவனை முன்னிறுத்தி அவர் சித்தத்திற்கு இணங்க ஜெபி.

☐ நம்பிக்கையிலும் விசுவாசத்திலும் எழும்பவும் தேவன் நம்மைக் கொண்டு பெரிய காரியங்களைச் செய்யவும் ஜெபி.

# நாள் 28

03 செப்டம்பர் 2017, ஞாயிரு

## நம்பிக்கையின் நிமித்தம் விசுவாசத்தில் ஜீவிப்பது

நாம் ஆபிரகாமின் சந்ததியாயிருப்பதால் நாமும் அவரைப்போல விசுவாசத்தோடும் நம்பிக்கையோடும் வாழ வேண்டும் (எபிரெயர் 11:1). ஆபிரகாம் தேவனின் வாக்குறுதிகளை முழுமையாக நம்பினார். அவர் இருதயத்தில் சந்தேகத்திற்கு இடமில்லாதிருந்தது.

தன் சொந்த நாட்டையும், வீட்டையும், உடன்பிறப்புகளையும் விட்டு விசுவாசமாக ஆபிரகாம் வெளியேறினார். விசுவாசத்தினால் தன் சகோதரனான லோத்தை ஏற்றுக் கொண்டார். விசுவாசத்தினால் பொறுமையுடன் தேவன் கொடுப்பேன் என்ற குமாரனுக்காக காத்திருந்தார். இல்லாததிலிருந்து இருக்கிறது போல உருவாக்குகிறவரும், மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்பினவர் விசுவாசம் கொண்டபடியினால் தன் ஏகசுதனை கீழ்ப்படிந்தவராய் பலியிட ஒப்புக்கொடுத்தார்.

தன் வாழ்வின் நன்மையான காலங்களில் மாத்திரம் ஆபிரகாமின் விசுவாசம் நிலைத்திருக்கவில்லை. கடினமும், சவாலும், சுமைகளும் நிறைந்த நேரங்களில் கூட அவரின் விசுவாசம் நிலைத்திருந்தது.

இப்படிபட்ட விசுவாசமானது, எவ்வளவுதான் கஷ்டங்களைக் கடந்தாலும் நம்மை இன்னும் தீவிரமான நம்பிக்கைக்குள்ளாக நம்மை கொண்டுச் செல்வதோடு தேவனுக்குள்ளான ஜீவியத்திற்குள் நம்மை வழிநடத்துகிறது. தேவ பிள்ளைகளாகிய நாம், வாழ்க்கையை இழந்து, வழி தப்பி போன மக்களை தேவ ஜீவியத்திற்குள் ஜெபத்தோடும் வாழ்வியல் சாட்சிகள் மூலமாகவும் அவர்களை வழி நடத்த வேண்டும்.

குடும்ப வாழ்க்கைக்காக ஜெபி

☐ குடும்ப உறவுகள் வலுப்பட ஜெபி. பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக இருக்க ஜெபி. உடைந்து போன உறவுகள் மீண்டுமாக ஒருமனப்பட ஜெபி.

☐ குடும்பங்களுக்குள்ளான புரிந்துணர்வும் தொடர்பும் அன்பும் நிறைந்திருக்கவும், ஒருவருக்கொருவர் மன்னிக்கவும் ஜெபி. தேவனின் பாதுகாப்பு குடும்பங்களுக்குள் இடைபட்டு பிசாசானவன் கொண்டு வரும் எல்லா வகையான சச்சரவுகளும் விவாதங்களும் தகர்த்தெறியப்பட ஜெபி.

☐ பெற்றோர்கள் குடும்பத்தில் சீஷத்துவத்தை மேலோங்கச் செய்ய ஜெபி. ,யேசுவே குடும்பத்தின் தலைவர் என்பதைக் காட்ட குடும்பங்களில் ஜெப பீடம் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

# நாள் 29

04 செப்டம்பர் 2017, திங்கள்

## விசுவாசத்தின் கோட்பாடுகள்

மதிப்புகளும், பொருளாதார, அரசியல் முறைமைகள் குழப்பமான நம்பிக்கையற்ற சூழலில் சுழன்று கொண்டிருக்கும்போது நமக்கு சரியான விசுவாச நிலை அவசியப்படுகிறது. இந்த விசுவாசத்தின் கோட்பாடானது ஆபிரகாமின் "நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்" என்பதை சார்ந்திருக்கிறது. அவன் நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தது அவனின் முதிர் வயதும், செத்துப்போன அவன் சரீரமும், சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதுமே (ரோமர் 4:19). இருப்பினும் அவர் தேவனையே தன் முழு நம்பிக்கையென அறிக்கையிட்டார். (கொலோசெயர் 1:27).

தேவனுடைய வாக்குறுதிகளை எப்பொழுதும் சார்ந்திருக்க தேவனிடம் நாம் மன்றாடி நம் விசுவாசத்தை அவரின் வார்த்தையைக் கொண்டு பெலப்படுத்த வேண்டும்.

பல நேரங்களில் நாம் உலகப்புறமான காரியங்களை நம்பிக் கொண்டு விசுவாசத்தில் பெலவீனர்களாகி விடுகிறோம். நமது எண்ணங்களும் பார்வைகளும் நமக்கு அளிப்பது துக்கமும் மனகசப்புமே தவிர வேறொன்றுமில்லை. விசுவாசத்தின் கோட்பாடுகளை சரியான முறையில் தேர்ந்தெடுத்து, தேவனின் வார்த்தையை நம் வாழ்வில் கிரியை செய்ய அனுமதித்தால் மாத்திரமே எவ்வித கஷ்டங்களோ கண்ணீரோ நம்மை தேவனின் அன்பிலிருந்து பிரிக்காது. எவ்வித இடறல்கள் வந்தாலும் உற்சாகமும் உறுதியுமான ஜெபத்தோட கூட தேவனை பிடித்துக் கொள்ள நாம் கற்றுக் கொள்ள வேண்டும். தேவன பெரிய காரியங்களை செய்ய வல்லவராயிருக்கிறார் எனவும் யாராலும் அவர் சித்தத்தை தடுக்க முடியாது எனவும் விசுவாசத்தில் நாம் அறிக்கையிட வேண்டும்.

நம் தேசத்தில் உள்ள சபைகளுக்காக ஜெபி

☐ நம்பிக்கையும் அன்பின் சின்னமுமாக சபைகள் திகழ வேண்டும். ஆத்துமா ஆதாயம் செய்வதில் சபையார் உற்சாகமாக முன்வர ஜெபி.

☐ இயேசுகிறிஸ்துவின் அன்பை முதன்மைப்படுத்தாமல் இழந்துப் போன ஆத்துமாக்களின் உள்ளங்களில் எழுப்புதல் வர ஜெபி. ஒருமனமாக கூடி ஒருவருக்கொருவர் பெலப்படுத்தவும் அன்பில் மேலோங்கியிருக்கவும் ஜெபி.

☐ தேவனுடைய இராஜ்ஜியத்தின் சேவைக்கென பரிசுத்தவான்களை தேறினவர்களாக்க 5 வித ஊழியங்களை (அப்போஸ்தலர், தீர்க்கதரிசனம், சுவிசேஷர்கர்கள், மேய்ப்பர்கள், போதகர்கள்) சபைகளில் ஸ்தாபியுங்கள்.

# நாள் 30

05 செப்டம்பர் 2017, செவ்வாய்

## மனக்கசப்புகளுக்கு மத்தியில் நம்பிக்கை

நமது வாழ்க்கை பயணத்தில் தேவனால் வழிநடத்தப்பட்டு வருகிற காலங்களில், திடீரென நம் நம்பிக்கைக்கு அப்பால் சில காரியங்கள் நடப்பதுண்டு. அப்படி நடக்கையில் தேவனின் நோக்கம் அங்கு இருக்கிறதென நம் நினைவில் கொள்ள வேண்டும். மனக்கசப்புகளுக்கு மத்தியில் நாம் தேவனுக்குள் இன்னும் ஆழமாக ஜீவிப்பதே அவரின் நோக்கமாகும். ஆபிரகாமின் விசுவாசமானது தேவன் நம்பத்தகாத காரியங்களைச் செய்து முடிப்பார் என்பதை முழுவதுமாக நம்புவதே. இந்த விசுவாசம் தேவனோடு உடனான ஜீவியத்தை அவர் வாழ்வில் தொடர்ச்சியாக அனுபவிக்க வழிவகுத்துக் கொடுத்து ஆசிர்வாதமான வாழ்க்கையையும் ஆபிரகாமிற்கும் அவரின் சந்ததியாருக்கும் பெற்றுத் தந்தது.

மனக்கசப்புகளுக்கு மத்தியில் நம்பிக்கையுடனும் விசுவாசத்துடனும் தேவனைத் தேட வேண்டும் என்பதே தேவனின் எதிர்பார்ப்பாகும். மனிதனுடைய பராக்கிரமும் ஞானமும் ஒரு முடிவுக்கு வருகிற வேளையில், வேறு எங்கும் சார்ந்திருக்க முடியாத நிலையில் தான் மனிதனுக்கும் தேவனுக்கும் உள்ள உறவு நெருக்கமாகக் கட்டப்படுகிறது. தேவன் கனம் அதிகாரம், மகிமைக்கு எல்லாவற்றிலும் தகுதி படைத்தவர் என்பதனை அப்பொழுதுதான் புரிந்து கொள்கிறான்.

வாருங்கள், எல்லோரும் ஒருமனதாக தேவனை நோக்கி நம் தேசத்திற்காக ஜெபிப்போமாக. தேவனின் ஒளி நம் தேசத்தில் இடைப்படவும், இயேசுகிறிஸ்துவையல்லாமல் வேறே தேவனால் நம் தேசத்தை ஒளிக்குள்ளாக மாற்ற முடியாது என ஒவ்வொருவரும் அறிய ஜெபிப்போமாக.

நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கும் சமுதாயத்திற்காக ஜெபி

☐ நம் சமுதாயத்தின் இரட்சிப்பிற்காக ஜெபி. தனி நபராகவும் சபையாகவும் அவர்களோடு ஐக்கியமாகவும் அவர்களுக்கு ஆசிர்வாதமாக மாறவும் ஜெபி.

☐ அமைச்சர்கள் சமுதாயத்தின் மேம்பாட்டுக்காக உழைக்க ஜெபி.

☐ அனைவரும் இயேசுகிறிஸ்துவே ஆண்டவர் என அறிய ஜெபி. There will be an increase of creative ways for us to reach out to the lost and the needy. தொலைந்து போனவர்களையும் தேவையுள்ளவர்களையும் புதுமையான விதத்தில் தேடிக்கண்டு பிடிக்கும் யுக்திகள் ஆதிகரிக்கப்படும்.

பொறுப்புடமைப் பகுதி 6 - நாள் 26-30
நம்பிக்கையின் மேல் நம்பிக்கை (ரோமர் 4:18)

இடுக்கமான சூழ்நிலைகளில் நம்பிக்கையோடிருப்பது.

சொந்த மன எண்ணம்: நம்பத்தகாத/காண முடியாத காரியங்களின் மேல் நம்பிக்கை.

பிரகடனம்: நம்பத்தகாத சூழ்நிலைகளிலும் தேவன்மேல் நம்பிக்கையாயிருப்பேன் என அறிக்கையிடுகிறேன்.




**உன்னிலிருந்து துவங்குகிறது**

- மற்றவர்களின் நம்பிக்கையை பெலப்படுத்த எப்படி உன்னை செம்மையாக்குவாய்/மேம்படுத்துவாய்?
- ஆவிக்குரிய தகப்பனுடமை.

☑ ஏற்றவற்றில் குறியிடுக.

| | |
|---|---|
| 1. உன் ஜெப பீடம் எந்த அளவிற்கு முறையாக உள்ளது? | ☐ இல்லை<br>☐ வழக்கமாக இல்லை<br>☐ அன்றாடம் |
| 2. உன் வேத வாசிப்பின் முறைமை | ☐ இல்லை<br>☐ வழக்கமாக இல்லை<br>☐ அன்றாடம் |
| 3. குடும்ப ஜெப பீடம் எந்த அளவிற்கு முறையாக உள்ளது? | ☐ இல்லை<br>☐ வழக்கமாக இல்லை<br>☐ அன்றாடம் |
| 4. எந்த அளவிற்கு உன் சிறு குழுவோடு ஜெபிக்க கூடுகிறாய்? | ☐ இல்லை<br>☐ வழக்கமாக இல்லை<br>☐ அன்றாடம் |
| 5. உன் தேசத்திற்காக அடிக்கடி ஜெபிக்கிறாயா? | ☐ இல்லை<br>☐ வழக்கமாக இல்லை<br>☐ அன்றாடம் |

## பொறுப்புள்ள கணக்கொப்புவிப்பு (உன் துணையாளருக்கு/சிறு குழுவிற்கு).

**சோதனைப் பட்டியல் ☑**

வேத வாசிப்பு நாள் 26-30 ☐ நாள் ____ வாசிக்கவில்லை ☐ ____ முடிக்கவேண்டியது

ஆவிக்குரிய குறிப்பேடு - ஐந்து நாள்கள் உபவாச ஜெபத்தில், நீ தேவனுடன் கற்றுக்கொண்ட இடைபடுதலின் அனுபவத்தை எழுதுக.

---

---

☐ செயல் திட்டம் - ஆவிக்குரிய கேடகத்தை உருவாக்க தேவனின் மேல் நம்பிக்கை வைத்தல்.

1. தற்போது நீ எதிர்கொள்ள சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் சூழ்நிலைகளை கண்டறி.

   ☐ உறவுகள் ☐ வேலை/வணிகம் ☐ கல்வி ☐ நோய்கள்

2. இந்த சூழ்நிலைகளைக் குறித்து தேவன் உன்னுடன் என்ன பேசுகிறார்?

---

---

---

1. ஜெப நடை/பயணம்:

   ☐ 30-60 நிமிடங்களை ஒதுக்கு ☐ தீர்மானித்துள்ள திகதி: ____

   ☐ திகதி ____

ஜெப பயணம் அல்லது ஜெப நடை. இப்பகுதியில் ஜெபியுங்கள். Drive or Walk to pray over the area.

---

☐ ஆசிர்வாதத்தையும் நம்பிக்கையையும் அறிக்கையிடுதல்

☐ ஒப்புரவாகுதல் அல்லது மனந்திரும்புதல்

☐ சுகமாக்குதல்

# நாள் 31

06 செப்டம்பர் 2017, புதன்

## நம்பிக்கையில் அமர்ந்துள்ள விசுவாசம

நம் தேவன் பேரில் உள்ள நம்பிக்கையில் அமைந்துள்ளது நமது விசுவாசம். நமது நம்பிக்கை நிச்சயமுள்ளதாயிருப்பதினால் நமது விசுவாசம் உயிரோட்டமுள்ளதாய் இருக்க வேண்டும். அது வெறுமனே அறிவுக்கேற்ற ஒப்புதலாயிராமல் அனுதினம் செயலில் உள்ளதாய் இருக்க வேண்டும்.

எபேசியர் 2:10ல் பவுல் விசுவாசத்தை இவ்விதமாய் விவரிக்கிறார். ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம் அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். கிறிஸ்துவுக்குள் இருக்கும் விசுவாசிகளை நடைமுறையில் வாழ்ந்து காட்டச்சொல்கிறார். நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின்மேல் செலுத்தினபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான்? விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே (யாக்கோபு 2:21-22).

அவருக்காக வாழும் நம் ஜீவனத்தை அவர் மேல் கொண்ட நமது நம்பிக்கை எப்படி தாக்கம் ஏற்படுத்த வேண்டும்? நாம் வாழும் வாழ்க்கை நம் தேவனில் நாம் கொண்ட நம்பிக்கையை பிரதிபலிக்கின்றதா?

தேசத்தின் ஆவிக்குரிய தலைவர்களுக்காக ஜெபி

☐ தேவனுடைய இராஜ்ஜியத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான பெலனை ஆவிக்குரிய தலைவர்கள் ஆவிக்குரிய மற்றும் சரீரப்பிரகாரமாய் பெற்று தங்கள் பணிகளைத்தொடர ஜெபி. தங்கள் உறுப்பினர்களிடமிருந்து ஆதரவும் ஊக்கமும் அவர்கள் கிடைக்கப்பெற ஜெபி.

☐ தேவனுடைய பாதுகாப்பும் அரவணைப்பும் தலைவர்களின் துணைகளுக்கும் பிள்ளைகளுக்கும், அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் கிடைக்கப்பெற ஜெபி. முழுமையாய் தத்தம் செய்து ஆண்டவருடைய பணிகளைச்செய்ய அவர்களுக்கு தேவன்தாமே அருள்புரிவாராக.

☐ அவர்களது வேலைப்பளுவினால் தேவனுக்கு ஒதுக்கும் தனி நேரம் தடைபடாமலும் தொந்தரவில்லாமலுமிருந்து மற்றவர்களை பயிற்றுவித்து அடுத்த தலைமுறை தலைமைத்துவத்தை உருவாக்கவும் அவர்களிடம் சரியாய் பொறுப்புகளை ஒப்படைக்கவும் ஜெபி.

# நாள் 32

07 செப்டம்பர் 2017, வியாழன்

## ஆதி அன்பை நிலை நிறுத்துவது

எபேசுவின் சபை பாராட்டைப்பெற்றது. (1) அவர்களின் செயல்கள் - நற்கிரியைகளில் சிறந்து விளங்கினர் (2) மார்க்கபோதனையின் புனிதம் - அவர்கள் பகுத்தறிந்து கள்ளப்போதனையை மேற்கொண்டனர் (3) விடாமுயற்சி - பாடுகளை சகித்தனர். ஆனாலும் ஆதி அன்பை விட்டு விட்டனர். "உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், உன் பொறுமையையும், நீ பொல்லாதவர்களைச் சகிக்கக்கூடாமலிருக்கிறதையும், அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும் நீ சகித்துக்கொண்டிருக்கிறதையும், பொறுமையாயிருக்கிறதையும், என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன்.ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு. ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக் இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாதபட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன்" (வெளி 2:2-5).

தேவனில் நம்பிக்கை கொண்டிருப்பதானது கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசைத்தைப் பிறப்பித்து, பரிசுத்தவான்களை நேசிக்கச்செய்கிறது. (கொலோ 1:4-5). "ஆதி அன்பானது" முதன் முதலாக நாம் கிறிஸ்துவை விசுவாசித்தபோது கொளுந்துவிட்டு எரிந்தது. மிகுந்த சந்தோஷத்துடன் தேவனை சேவித்து, அவருக்கு சாட்சியாக இருந்தோம். ஆனால் நமது ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேறியபோது அது வழக்கமாகிப்போனது. ஆராதனையில் நாம் வெடிப்பதும் இல்லை, அல்லது மற்றவர்களைப்போல நாம் அவரைத்தேடி சேவிப்பதும் கிடையாது.

அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து அவரை நேசிக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம் (யோவான் 14:21). மேலும் நமது கிரியைகள் அவருடைய அன்பினால் உந்தப்படவேண்டும் (1 கொரி 13:3). நம்முடைய சுயநலத்தின் ஏவுதலினால் பணத்தையும், புகழையும், சுய பெருமையினால் திருப்தியையும் தேடக்கூடாது. நமது இருதயத்தை ஆராய்ந்து பார்த்து அவருக்கான முதல் அன்பை நிலைநிறுத்த வேண்டும்.தேவ அன்பினால் நாம் நம் தேசத்தையும் ஜனங்களையும் நேசிக்கும்பொழுது மனதுருக்கத்தோடு மன்றாட முடியும்.

# நாள் 32

07 செப்டம்பர் 2017, வியாழன்

நமது தேசத்தின் வாலிபர்களுக்காக ஜெபி.

☐ ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் பற்றுதலாயிருந்து தங்கள் வயதுக்கொத்த இளைஞர்கள் மத்தியில் சாட்சியாக இருக்க வேண்டி ஆண்களும் பெண்களுமாகிய வாலிபர்கள் மத்தியில் தேவன் தாமே அக்கினிப்பொறியை பற்றவைக்க வேண்டுமென ஜெபி.தேவனுடனான அவர்களது ஆவிக்குரிய நடைக்கு எதிரான எல்லாவித தடைகளையும் நீங்கிப்போக ஜெபி.

☐ இளம் போதகர்கள், தலைவர்கள், ஊழியர்கள் மீது அபிஷேகமும் வல்லமையும் தங்கும்படி ஜெபி. அப்பொழுது அவர்கள் புதிய தரிசனத்துடன் ஊக்கம் பெற்று, புதிய காரியங்களை செய்யவும், தங்கள் ஆவிக்குரிய பயிற்சி தரும் தகப்பன் தாய்மார்கள் அவர்களின் துன்ப துக்க வேளையில் அவர்களோடு துணை நிற்கவும் ஜெபி.

☐ பள்ளிகளில், கல்லூரிகளில், பல்கலைக்கழகங்களில் கிறிஸ்தவ ஐக்கியங்கள் ஸ்தாபிக்கப்படவும், மிகப்பரந்த இந்த மிஷன் பண்ணையில் அபரிதமான அறுவடை காணவும் ஜெபி.

## நாள் 33

08 செப்டம்பர் 2017, வெள்ளி

## சுத்திகரிப்பின் தாக்கத்தை உண்டுபண்ணும் நம்பிக்கை

"பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்" (1 யோவான் 3:2-3)

கிறிஸ்து திரும்ப வரும்பொழுது, நாம் அவருடைய சாயலுக்கு ஒப்பாவோம். இந்த பாக்கியமுள்ள நம்பிக்கையில் நாம் தியானித்திருக்கும்போது - நாமும் கிறிஸ்துவைப்போல் ஒருநாள் ஆகுவோம்- பயத்தோடும் நடுக்கத்தோடும் நமது இரட்சிப்பு நிறைவேற நாம் உந்தப்படுவோம் (பிலி. 2:12) மற்றும் நமது தீமையான பற்றுதலை நாம் மேற்கொள்ளுவோம் (லூக்கா 9:23).

உலகம் நேசிப்பதை விட்டு திரும்புவதுதான் தூய்மை (1 யோவான் 2:15-17). திராட்சை செடியில் நிலைத்திருக்கும் கிளைபோல நாமும் கிறிஸ்துவிடம் கிட்டிச்சேர வேண்டும் (யோவான் 15:4). தேவனிடம் நாம் சரணடைந்து, வசனங்களின் மூலமாக நம் சிந்தையை புதுப்பிக்க வேண்டும் (ரோமர் 12:1-2). நமது அழைப்பை உறுதிப்படுத்த நமது விசுவாசத்தை நிறைவுடையதாக்க நன்மை, அறிவுடமை, கட்டுப்பாடு, சகிப்பு, தெய்வீகம், பரஸ்பர அன்பு ஆகியவற்றை செயல்படுத்த மிகுந்த பிரயாசம் எடுக்க வேண்டும் (2 பேதுரு 1:5-10). அவர் திரும்ப வரும்போது நாம் அவரைப்போல இருப்போம் என்று உணர்கிறதினால், நாம் தூய்மையுடனும், நீதியுடனும் நடக்க உற்சாகப்படுத்தப்படுகிறோம்.

எனினும், அடை நாம் சுய பெலத்தில் செய்வோம் என எண்ணக்கூடாது. நாம் அவருடைய பிரசன்னத்தில் நேரம் செலவு செய்யும்போது, பரிசுத்த ஆவியானவர் மூலமாக நாம் அவருடைய சாயலாக மறுரூபமாகுவோம் (2 கொரி 3:18). நமது ஜெபங்கள் சூழ்நிலைகளினால் கசப்பான மறுமொழியாக இராமல் தேவனுடைய திட்டத்தையும் நோக்கத்தையும் நிறைவேற்றுகிறதற்கு ஏதுவாக தேவன்தாமே நமது சிந்தைகளை அவருக்கேற்றவாறு செம்மையாக்க அவரிடம் வேண்டுவோம்.

# நாள் 33

08 செப்டம்பர் 2017, வெள்ளி

நமது தேசத்தின் பிள்ளைகளுக்காக ஜெபிப்போம்

- பிள்ளைகளின் நலனும் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட, பெற்றோர்களும் பராமரிப்பாளர்களும் இன்னும் அதிகமான விழிப்புணர்வு பெற ஜெபியுங்கள்.பிள்ளைகள் தாமே தங்களுக்கு எதிராக வருகிற சரீர வன்முறைகள் மற்றும் பாலுணர்வு தாக்கங்களிலிருந்து தற்காத்துக்கொள்ளும் கல்வியறிவு கூறுவோம்.

- தங்கள் வாழ்நாள் முழுவதும், சத்தியத்தின் பாதையை விட்டு தவறாமல் தேவன் வழியில் நடக்க, கிறிஸ்தவ குடும்பங்களில் வளருகிற பிள்ளைகள் நன்கு பயிற்சி பெறவும், தேவ வழியில் வேரூன்றி நிற்கவும் ஜெபி. காலங்களை அறிந்து கொண்டு ஞானத்தோடு தங்கள் கர்ப்பத்தின் பிள்ளைகளை வளர்த்து வர பெற்றோர்கள் புரிந்துணர்வு பெற ஜெபி.

- சுற்றுப்புற தாக்கங்களினாலும் ஊடகங்களின் தாக்கத்தாலும் பிள்ளைகளுடைய இருதயமும் சிந்தையும் அவபக்தியில் செல்லாதபடி ஜெபி. மாறாக, தேவனுடைய சத்தியத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற தேவ பிள்ளைகளுக்கு சக வயது பிள்ளைகளுக்கு தேவ கோட்பாடுகளையும் நெறிகளையும் இளம் வயதிலே கற்றுத்தர ஜெபி.

# நாள் 34

09 செப்டம்பர் 2017, சனி

## எல்லா சூழ்நிலைகளுக்கும் மேலான மகிழ்ச்சி

சமுத்திர அலைகளைப்போல நமது மன நிலை ஏறி இறங்குகிறது. இந்த கணம் நாம் சந்தோஷமாயிருப்போம், அடுத்த கணமே நாம் அழுத்தத்திற்குள் கடந்து செல்வோம். சந்தோஷம் என்பது கணிக்க முடியாத ஒன்று. அது சாதகமான சூழலுக்கேற்றவாறு அமைகிறது. மகிழ்ச்சி என்பது எல்லா சூழலிலும் ஒரே நிலையிலும், ஆண்டவரிடம் உண்மையுள்ளதும், மாறாததுமாயிருக்கும். அறுவடை இல்லாமல் போனாலும், மந்தையில் முதலற்றுப்போனாலும் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன் என ஆபகூக் சொல்கிறார்.

அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒலிவமரத்தின்பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும்,நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன். (ஆபகூக் 3:17-18).

ஏன்? ஏனெனில் தேவன் நம்பிக்கைக்குரியவராகவும், தேசத்தின் நெருக்கடிகள் மத்தியில் தம்முடைய உண்மைத்துவத்தை காண்பிப்பார் எனவும் அவன் அறிந்திருந்தான். தேவனுடைய சத்தியத்தை அனுபவிக்கும்போது, மகிழ்ச்சி ஒருவனை குதூகலிக்கச்செய்யும்.

அடைக்கப்பட்ட சிறையிலிருந்து எழுதும்போதும், பவுல் தன் விசுவாசிகளை உற்சாகப்படுத்தி வெற்றிகரமான செய்தியை அனுப்புகிறார். “கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்” பிலி 4:4).

எப்பொழுது எதிர்மறையான சூழல்களை சந்திக்கும்போதும், சாதகமற்ற சொற்களை நாம் அனுதினமும் கேட்டுக்கொண்டிருந்தாலும், காலைச் சூரியனை உதிக்கச்செய்யும் தேவனில் நாம் நம்பிக்கைக் கொள்ள நாம் கற்றுக்கொள்வோம். எனவே நம்பிக்கையில் சந்தோஷமடைவதையும், உபத்திரவத்தில் பொறுமையாயிருப்பதையும் ஜெபத்தில் எப்பொழுதும் தரித்திருப்பதையும் நாம் தெரிந்து கொள்வோம் (ரோமர் 12:12).

# நாள் 34

09 செப்டம்பர் 2017, சனி

விசுவாசக்கூட்டத்தார் மத்தியில் உறுதியான சீஷத்துவத்திற்காக ஜெபி

☐ நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் எனும் பிதான கட்டளையை நமது சந்ததியில் நிறைவேற்றத்தக்கதாக நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிய வேண்டுமென ஜெபி.

☐ ஜனங்களை நாம் நேசிக்கிறதை ஜெபத்தில் காண்பிப்போம். அவர்களது வளர்ச்சியில் பராமரிப்பும் போஷிப்பும் நடைமுறைப்படுத்துவோம். புதிய விசுவாசிகளைப்பேண அவர்களது வாழ்க்கையில் நமது நேரத்தையும் சாதனங்களையும் முதலீடு செய்வோம். நமது குடும்பத்தில், சபையில், இல்லத்திலும் கூட அவர்களை அரவணைத்துக்கொள்வோம்.

☐ மற்றவர்கள் நமது வாழ்க்கையின் மூலம் கிறிஸ்துவின் முன்மாதிரியைப்பின்பற்றும்படி வசனத்திலும் ஜீவியத்திலும் அவர்கள் உண்மையாயிருப்பதற்கு தேவனுடைய முழு ஆலோசனையையும் கற்றுக்கொடுப்போம்.

# நாள் 35
10 செப்டம்பர் 2017, ஞாயிரு

## நம்பிக்கையின் உறுதிப்பாட்டை வளரச்செய்தல்

தெசலோனிக்கேய விசுவாசிகளை சோதனைகளும் உபத்திரவங்களும் தாக்கியபோது, ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் காணப்பட்ட அவர்களது உறுதிப்பாட்டை பவுல் பாராட்டுகிறார் (1 தெச 1:3). அவர்மூலமாகத்தான் நாம் தேவனுடைய வல்லமையையும் உத்வேகத்தையும் பெற்றுக்கொள்ளுகிறோம். விசுவாசத்தைத் துவக்குகிறவரும் அதை முடிக்கிறவருமாகிய இயேசுவையே நோக்கிப்பார்க்கும்படி எபிரெய புத்தகத்தை எழுதியவர் கூறுகிறார். ஏனெனில் “அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார் (எபி 12:2)”.

உறுதிப்பாட்டை வளரச்செய்ய 8 வழிகள்:

1. சோதனைகள் பொறுமையை உண்டுபண்ணும் என்றறிந்து சந்தோஷமாக எண்ணுங்கள் (யாக் 1:2-3).
2. தேவன் நம்மோடு இருப்பதினால் பதட்டமோ கலக்கமோ கொள்ள வேண்டாம் (ரோமர் 8:38-39)
3. ஞானமும் வல்லமையும் அருளுகிற தேவனிடத்தில் விசுவாசம் வைப்போம் (யாக் 1:5, 2 கொரி 12:9).
4. யுத்தம் நம்முடையது அல்ல - கர்த்தருடையது என உறுதிப்படுத்துவோம் (2 நாளா 20:12).
5. வெற்றி நமக்கு உறுதிப்படுத்தப்பட்டது என தேவனை ஆராதிப்போம் (2 நாளா 20:21)
6. ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினால் நமது கவலைகளையெல்லாம் தேவனிடம் ஒப்புக்கொடுப்போம்.(பிலி 4:6).
7. நாம் வேண்டிக்கொள்வதற்கும் நினைக்கிறதற்கும் அதிகமாய் தேவ வல்லமை நமக்குள் கிரியை செய்யும் என நம்புவோம் (எபேசி 3:20).
8. கர்த்தருடைய கடந்த கால உண்மைத்துவத்தையும் இரக்கங்களையும் நினைவு கூறுவேன் (சங் 77:11)

# நாள் 35

10 செப்டம்பர் 2017, ஞாயிரு

தேவனுடன் மனிதன் ஒப்புரவாகுதலை பூரணப்படுகிறதைக் கண்ட இயேசு பாடுகளைச் சந்தோஷத்தோடு சகித்தார். அவருடைய ஆத்துமாவின் வியாகுலத்தினூடே அநேகர் நீதிமானாக்கப்படுவார்கள் (ஏசா 53:11). ஆகவே தேவனுடைய இருதயத்துடிப்பை நாம் பகிர்ந்துகொண்டு தேசத்தின் இரட்சிப்பிற்காக ஜெபிக்கவேண்டும். அவருடைய இராஜ்ஜியத்தில் ஆத்துமாக்கள் சேரும்படி கிறிஸ்துவைப் பகிர்ந்துகொள்வோம்.

சுவிசேஷத்தில் ஓர் ஊடுருவலைக்காண ஜெபி

☐ தொலைந்து போன ஆத்துமாக்களுக்கான ஒரு பாரம் விசுவாசிகளுக்குள் காணப்பட ஜெபி, குறிப்பாக நமது குடும்பத்திற்கு நெருங்கினவர்கள், நண்பர்கள் சகாக்கள் போன்றவர்கள். சுவிசேஷ செய்தியும் அதின் வல்லமையின் அவசியமும் எப்பொழுதும் நம் இருதயத்தில் எதிரொலிக்கவும் அதின்படி வாழ்ந்து காண்பிக்கவும் ஜெபி.

☐ நமது எல்லைகளுக்கும் சொகுசுக்கும் அப்பாற்பட்ட நிலையில் நம் தரிசனம் விரிவாக்கப்பட ஜெபி. சுவிசேஷ ஊழியத்தில் மறுப்புத் தெரிவிக்கும் சமயம் ஏற்படும் பயம் நம்மை ஆட்கொள்ளாதபடி தொலைந்து போனவர்களைக்குறித்த ஆத்தும தரிசனம் நம்மை ஏவும்படிச்செய்ய ஜெபி.

☐ நமது தேசத்தில் இன்னும் சந்திக்கப்படாதவர்களைச்சந்திக்கும்படி அநேக ஊழியர்கள் எழும்ப ஜெபி. ஞானமும் வழிமுறைகளும் கண்டு சந்திக்கப்படாதவர்களைச்சந்திக்க ஜெபி.

## பொறுப்புடமைப் பகுதி 7 - நாள் 31-35
## நம்பிக்கையின் கனி (கொலோ 3:14)

தற்போதைய நிலவரம்: கடினமான காலங்களின் மத்தியில் தாக்கங்களை ஏற்படுத்துதல்.

பிரகடனம்: நற்கிரியைகளைச்செய்ய நான் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டேன்.




**உன்னிலிருந்து துவங்குகிறது**

**- ஆவியின் கனி பழைய சுபாவத்தை மாற்றுகிறது அல்லது விஞ்சி நிற்கிறது. கனியிலே நடக்க நாம் நினைவுறுத்தப் படுகிறோம்**

**உன் நடத்தையின் பரிசோதனை.**

☑ **ஏற்றவற்றில் குறியிடுக.**

1 >குறைவு, 5 >சுமார், 10 >சிறப்பு

**கடந்த 5 நாள்கள் உன் அடிமைத்தனத்தை கணிக்கும் அளவு**

| | |
|---|---|
| 1. அவரைப்பிரியப்படுத்த அற்புதமான வேலை செய்கிறாயா? | ☐ 1<br>☐ 5<br>☐ 10 |
| 2. கருத்து வேறுபாட்டை நீயாகவே நலமாய் தீர்த்தாயா? | ☐ 1<br>☐ 5<br>☐ 10 |
| 3. மனநிலை மகிழ்ச்சியிலிருந்து துக்கத்திற்கு மாறியதா? | ☐ 1<br>☐ 5<br>☐ 10 |
| 4. இவ்வாரத்தில் ஏற்பட்ட சோதனை. எப்படி அணுகினாய்? | ☐ 1<br>☐ 5<br>☐ 10 |

## பொறுப்புள்ள கணக்கொப்புவிப்பு (உன் துணையாளருக்கு/சிறு குழுவிற்கு).

**சோதனைப் பட்டியல் ☑**

**வேத வாசிப்பு நாள் 31-35 ☐ நாள்____ வாசிக்கவில்லை ☐ ____ முடிக்கவேண்டியது**

**ஆவிக்குரிய குறிப்பேடு - ஐந்து நாள்கள் உபவாச ஜெபத்தில், நீ தேவனுடன் கற்றுக்கொண்ட இடைபடுதலின் அனுபவத்தை எழுதுக.**

________________________________________

________________________________________

________________________________________

செயல் திட்டம் - உன் சாட்சி உப்பாகவும் ஒளியாகவும் இருக்க வேண்டும்

| ஓர் நபருடன் விருந்து ஏற்பாடு செய் | ஓர் இலக்கை ஏற்படுத்து. அந்த நபருடன் என்ன பகிரப்போகிறாய்? | சந்திக்கும் திகதி | முடித்த திகதி |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

# நாள் 36

11 செப்டம்பர் 2017, திங்கள்

## நம்பிக்கை மறைந்து போகும்போது

நம்பிக்கை மறைகிறது. நாம் உதவியற்றவர்களாய் இருப்பதினால் அல்ல. எதிர்மாறாக, நாம் உதவியற்றவர்களாக இராததினால் நம் நம்பிக்கைக் குறைகிறது. நாம் உதவியற்றவர்களாய், சூழ்நிலைகள் எல்லையை மீறிப்போகும்போதுதான் நம்பிக்கை மிக அவசியமாக இருக்கும். ஆனால் நாம் வசதியாக எல்லாம் நம் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும்போது, நம்பிக்கைக்கு இடமேதும் வேண்டியதில்லை. உதாரணமாக, டிஸ்னிலேண்டில் உள்ள பிள்ளை வீடு திரும்ப வேண்டி எதிர்பார்த்துக் காத்திருக்காது ஆனால் அகதியாய் திரிகிற பிள்ளை வீடு திரும்ப எதிர்பார்த்திருக்கும்.

ஆதித்திருச்சபை மிகுந்த உபத்திரவத்தை எதிர்நோக்கின. அவர்களது துயரத்தில் பாக்கிய நம்பிக்கையின் வரவிற்காக □ இயேசுவின் இரண்டாம் வருகைக்கு எதிர்பார்த்திருந்தனர். புதிய வானம், புதிய பூமி, இனி கண்ணீரில்லை, தேவனுடைய பூரண பிரசன்னத்தில் இருப்பர். ஒப்பிட்டுப்பார்க்கும்பொழுது, நாம் சொகுசாய் இப்போது காணப்படுகிறோம். அடுத்த கட்டத்தை நாம் அதிகமாய் எதிர்பார்த்திருக்கவில்லை.

மத்தேயு 24:36 - 25:13 வாசிக்கும்பொழுது, எது நம்பிக்கைக்குரிய சிலாக்கியமாக இருந்திருக்க வேண்டுமோ அது அந்த ஊழியருக்கோ அல்லது ஐந்து கன்னிகைக்கோ எதிர்மாறாக நடந்தது ஏனெனில் அவர்கள் எதிர்பார்த்து ஆயத்தத்துடன் காத்திருக்கவில்லை. அவர்களது நம்பிக்கை கால தாமதத்தினால் மறைந்து போயிற்று. அந்த ஊழியனது பயங்கர வாழ்க்கை பாணியும் அந்த ஐந்து கன்னிகைகளின் நடவடிக்கைகளும், நம்பிக்கையாய் இல்லை என்பதை வெளிப்படுத்தியது. உன்னுடைய வாழ்க்கை முறைமையும் நடவடிக்கைகளும் பாக்கிய நம்பிக்கையை உடையதாயிருக்கிறதா? அல்லது அந்த டிஸ்னிலேண்டில் உள்ள குழந்தைப்போல மிகவும் குதூகல சொகுசுடன் இருப்பது போன்று இரண்டாம் வருகைக்கும் நித்தியத்திற்கும் உன் நம்பிக்கை பின்னணியில் மறைந்து போய்விட்டதா?

# நாள் 36

## 11 செப்டம்பர் 2017, திங்கள்

சரீரமாகிய கிறிஸ்துவுக்குள் ஒற்றுமைக்காக ஜெபி.

☐ நெருக்கடியான இந்த சூழலில், அரசாங்கத்துடனும் அதிகாரிகளுடனும் இணைந்து மத சம்பந்தப்பட்ட விவகாரங்களைத் தீர்ப்பதற்கு கிறிஸ்தவத் தலைவர்கள் தேவ ஞானத்துடனும் ஊக்கத்துடனும் பலத்துடனும் செயல்பட ஜெபி. தேவ அனுக்கிரகம் அவர்கள் மீது காணப்பட ஜெபி.

☐ தேவ ஆசீர்வாதம் இத்தேசத்தின் மீது ஊற்றப்பட போதகர்களும், தலைவர்களும் சபைகளும் சுவிசேஷத்தின் ஒரே நம்பிக்கைக்காக இணைந்து வேலை செய்ய ஜெபி.

☐ குற்றம் காணாதபடி மன்னிப்பின் மாட்சிமையிலும் முதிர்ச்சியிலே வளரவும் கிறிஸ்துவின் சரீரம் சரியான தெரிவை தேர்ந்தெடுக்கும்படி ஜெபி. அப்பொழுது விசுவாச சபைக்கு வெளியே இருக்கும் சமூகத்தினர் அவற்றைக்கண்டு தேவனுடைய மகிமையை காண்பர்.

# நாள் 37

12 செப்டம்பர் 2017, செவ்வாய்

## சரியான பந்தயத்தை ஓடுதல்

பாக்கிய நம்பிக்கைக்கு ஆவலாய் எதிர்பார்த்து காத்திருக்கும் ஒருவரது வாழ்க்கை பாணி எப்படி இருக்கும்? எபி 12:1-3 தெளிவாகக் கூறுகிறது:

1. பாரமான யாவற்றையும் தள்ளிவிட்டு (குறிப்பாக பாவம்)
2. நமக்கு நியமிக்கப்பட்ட ஓட்டத்தில் பொறுமையாய் ஓட
3. இயேசுவை நோக்கி

பாக்கிய நேசத்தின் வெளிச்சத்தில் இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது (எபி 11:13-16 39-40). ஒன்றும் மூன்றும் எளிதில் விளங்கிக்கொள்ள முடியும் ஆனால் நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஓட்டம் என்பது என்ன? ஓட்டத்தைக்குறித்து நாம் புரிந்துகொள்ளவேண்டும் இல்லையெனில் ஓடி முடித்த பின் தவறான ஓட்டத்தை முடித்திருப்போம்.

நன்றியுடன் ஓட்டத்தின் முடிவை நாம் காண்போம்: வெளி 7:9-17. பாக்கிய நம்பிக்கை எப்படியாய்க்காணப்படும் என்பதின் ஒரு விளிம்பை இங்கே நாம் காணலாம் - தூதர்களும், 24 மூப்பர்களும், 4 ஜீவன்களும், சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும், ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து திரளான ஜனக்கூட்டத்தாரும்.

பரலோகத்தில் தேவனைதொழுகிறார்கள். திரளான ஜனங்கள் என்பது, இயேசுவின் மகத்தான கட்டளையின் நிறைவேற்றத்தின் மக்கள் (மத் 28:18-20). எனவே நியமிக்கப்பட்ட ஓட்டம் என்பது பிரதான கட்டளையே. பவுலும் இதனை அப் 20:24ல் உறுதிப்படுத்துகிறார். “ஆகிலும் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன் என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன் என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன”.

மகத்தான கட்டளையையொட்டியே விடாமுயற்சியுடன் கீழ்ப்படிதலோடு நீ செய்கிற அனைத்தும், வாழ்க்கைப்பணியும், செயல்களும் காணப்படவேண்டும். அப்படித்தானே? நீ சரியான ஓட்டத்தை ஓடுகிறாயா?

# நாள் 37

## 12 செப்டம்பர் 2017, செவ்வாய்

சவால் மிக்க நேரங்களில், கிறிஸ்தவர்கள் வலுவாக இருக்க ஜெபி.

☐ நமது தேசத்தின் நெருக்கடியான வேளைகளின் மத்தியில், மலேசியக்கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் பொறுமையாக நிற்கக்கூடிய இருதயம் கொண்டவர்களாக இருக்க ஜெபி. எவ்வித சவால்களையும் விடாமுயற்சியுடன் சந்தோஷமான மனப்பாங்குடன் எதிர்கொள்ள ஜெபி.

☐ சில வேளைகளில் பெரிதாக நமக்கு இழப்பு ஏற்பட்டாலும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, நாம் நமது சிலுவையை எடுத்துக்கொண்டு அவரை பின் பற்றி வரச்சொல்லும் போது அந்த அழைப்பைப் புரிந்து கொள்ள ஜெபி.

☐ நமது மண்ணில் அவருடைய நோக்கமும் அவருடைய இராஜ்ஜியத்தின் பணிகளும் நாம் காணும்பொழுது, நாம் நம்முடைய தனிப்பட்ட பாதுகாப்புப்படலத்துக்கு அப்பாற்பட்டு அவற்றை நோக்க ஜெபி. நமது சொந்த தேவைகள், வசதிகள் மற்றும் பாதுகாப்பிற்கு மேலாக அவர் பணிகளைச் செய்ய ஜெபி.

# நாள் 38

13 செப்டம்பர் 2017, புதன்

## காணாமற்போனவர்களுக்கான விலையேறப்பட்ட நம்பிக்கை

அகதிகள் மத்தியில் நான் ஊழியம் செய்திருக்கிறேன். தாங்கள் அடைக்கலம் தேடி வந்த தேசத்தில் அங்கேயே நிரந்தரமாகத் தங்க வைக்கவேண்டுமென ஒவ்வொரு அகதிக்கும் ஒரு நம்பிக்கை உண்டு. அந்த நம்பிக்கை அவர்களிடத்தில் கொழுந்து விட்டு எரிவதினால், தங்கள் சொந்த தேசத்தை விட்டு, நேர்மையற்ற ஏஜண்டுகளிடம் பணத்தைக்கட்டி கள்ளத்தனமாய் எப்படியாவது இடம் கிடைக்கவேண்டி பாடுகளை பட்டு, வருடக்கணக்கில் பொறுத்திருக்கிறார்கள். இந்த நம்பிக்கையின் ஆழத்தை நம் அநேகரில் புரிந்துகொள்ள முடியாது.

அதுபோல நீ கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருப்பாயானால் காணாமல் போனவர்களுக்கு பாக்கிய நம்பிக்கை எவ்வளவு விலையேறப்பட்டது என்பதை அறியாமல் இருக்கக்கூடும். மரணத்திற்குப்பின் ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டி, எவ்வளவோ பணத்தை செலவிட பிரயாசம் எடுக்கிறார்கள். மற்ற மதத்தையொட்டிய அநேகர், தங்கள் கெட்ட செயல்களுக்கு நிவர்த்தி செய்யும்பொருட்டு நல்ல செயல்களைச்செய்து பரலோகம் செல்ல பிரயத்தனம் பண்ணுகிறார்கள். நமக்கு உறுதிப்படுத்தப்பட்டது போல அவர்களுக்கு இரட்சிப்பின் உறுதியும் நித்திய ஜீவனும் கிடைக்கப்போவதில்லை. அகதிகளைப் பார்ப்பது போல காணாமல் போன ஆத்துமாக்களை நாம் பார்க்கிறோமா? அலட்சியமாக? அல்லது பரிதாப கண்ணோட்டத்துடன் பார்க்கிறோம் ஆனால் செயலில் இல்லாமல்? காணாமற்போனவர்களின் பாக்கிய நம்பிக்கை எவ்வளவு விலையேறப்பட்டது என்பது, சுவிசேஷத்திலும், அருட்பணியிலும் ஆர்வமில்லாதவர்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

ஏசாயா 61:1-2ஐ இயேசு பயன்படுத்துகிறார். கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார் சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார் இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தையும், நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும் தொலைந்து போனவர்கள், சிறைப்பட்டவர்களைப்போலவும், குருடர் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களைப்போலவும் இருக்கிறார்கள். பாக்கிய நம்பிக்கையை அவர்களுக்கு பறைசாற்றுவோம்.

# நாள் 38

13 செப்டம்பர் 2017, புதன்

இருதயத்திலும் நடத்தையிலும் மாற்றம் வர ஜெபிப்போம்

☐ கிறிஸ்துவைப்போல நமது வாஞ்சை காணப்படட்டும். கிறிஸ்துவின் குணாதிசயங்கள் நமது பற்றுதலும் இலக்காகவும் இருக்கட்டும். அப்பொழுது தாழ்மையில் நடந்து நம்மைக்காட்டிலும் மற்றவர்களை நாம் உயர்வாக எண்ணுவோம். அவருக்கு நம்மை அர்ப்பணம் செய்து அனுதினமும் சிலுவையை எடுத்துக்கொண்டு நமது சொந்த உரிமைகளை விட்டுக்கொடுத்து எங்கே நம்மை வழிநடத்துகிறாரோ அங்கே செல்லமுடியும்.

☐ தேவன் நமக்கு ஒரு புதிய இருதயத்தையும் சிந்தையையும் கொடுத்து நமக்குள் ஒரு சரியான ஆவியைத் தந்து, அவருடைய சித்தத்திலும், நோக்கத்திலும் நாம் விடாமுயற்சியோடு நடப்பதற்கும் கடைசிபரியந்தம் உண்மையாய் அவருக்கு ஊழியம் செய்வதற்கு ஏதுவாகும்.

☐ நமக்கு தீங்கிழைத்திருந்தாலும் கூட கசப்பின் வேர் நம்முடைய இருதயத்தில் இல்லாதபடிக்கு மற்றவர்களிடம் நாம் ஒப்புரவாகும்படிக்கு முதல் படியை எடுத்து வைக்க முன்வருவோமாக.

# நாள் 39
14 செப்டம்பர் 2017, வியாழன்

## பரலோகத்தில் மாத்திரம்

40 நாள்கள் உபவாச ஜெபத்தை முடிக்கும் தருவாயில் உன் ஆவியில், சிந்தையில் சரீரத்தில் ஏற்பட்ட மாற்றங்களை பிரதிபலிக்கும்படியாய் ஆராய்ந்துபார். உன் சரீரத்தில் எடை குறைந்திருக்க நியாயம் உண்டு. ஆனால் தேவனோடு செலவு செய்த நேரம், நிச்சயம் பரம குயவனால் நமது ஆவியும் சிந்தையும் வனைந்திருக்கப்பட வேண்டும்.

நீ என்னைப்போல இருந்தால், எவ்வளவுதான் வனைந்தாலும் மனப்பாங்கும், எண்ணங்களும் சூழல்களும், நிச்சயம் தெய்வீகத்திற்கு சமீபமாகவும் ஏற்றதாகவும் இருக்க வாய்ப்பிராது. ஒரு வேளை குரோத அடிப்படையில் மற்றவருடன் ஏற்படும் மனக்கிலேசத்தினால், பரிசுத்தமற்ற எண்ணங்களின் வாதையினால், குடும்பத்தில் யாராவது ஒருவர் ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால் உன் இருதயத்தை ஏதோ ஒன்று நெருடும். உன் ஊக்கமான ஜெபத்தால் தேசிய அளவிலான நெருக்கடிகள்கூட தீராத நிலையில் காணப்படலாம். பாக்கிய நம்பிக்கை என்பது இப்புவியில் அது பூரணப்படாது என்றும், அது பரத்தில்தான் நிறைவேறும் நமக்கு நினைப்பூட்டுகிறது. எனவே பவுல் ரோமர் 8:18ல் இதனை வலியுறுத்துகிறார் - "ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்." (ரோமர் 8:18).

அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார் இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை் முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது. (ரோமர் 8:39). சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும், அவர்: இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையானவைகள், இவைகளை எழுது என்றார். (வெளி 21:4-5).

2 நாளா 7:14

"என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பேன்".

# நாள் 39

## 14 செப்டம்பர் 2017, வியாழன்

யோவேல் 1:13-14

“ஆசாரியர்களே, இரட்டுடுத்திப் புலம்புங்கள் பலிபீடத்தின் பணிவிடைக்காரரே, அலறுங்கள் என் தேவனுடைய தொண்டரே, நீங்கள் உள்ளே பிரவேசித்து இரட்டுடுத்தவர்களாய் இராத்தங்குங்கள். உங்கள் தேவனுடைய ஆலயத்தில் போஜனபலியும் பானபலியும் செலுத்தப்படாமல் நிறுத்தப்பட்டது.பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள் விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள் மூப்பரையும் தேசத்தின் எல்லாக்குடிகளையும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்திலே கூடிவரச்செய்து கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள”.

- பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள். பரிசுத்த கூடுதலுக்கு அழையுங்கள்.

- மூப்பர்களையும் தேவனுடைய வீட்டிலே தங்கியிருப்பவர்களையும் கூப்பிட்டு தேவனிடம் கதறுங்கள்

☐ சபையை பிரதிநிதித்து அதின் பாவங்களுக்காகவும் குறைவுகளுக்காகவும் மனந்திரும்பு.

☐ குடும்பங்களை பிரதிநித்தித்து வீட்டில் செய்த அனைத்து பாவங்களுக்காக மனந்திரும்பு.

☐ தேசத்தைப்பிரதிநிதித்து அதின் அனைத்துப் பாவங்களுக்காக மனந்திரும்பி அவருடைய இரக்கமும் பாவமன்னிப்பும் பொழியப்பட மனந்திரும்பு.

# நாள் 40

15 செப்டம்பர் 2017, வெள்ளி

## இதோ, சீக்கிரமாய் வருகிறேன்!

உங்களுக்கு பிடித்த உணவுக்கடையில் உணவு அருமையாக இருக்கும் என்பதால் உட்காரும் இடத்திற்காக ஒரு மணி நேரம் காத்திருந்ததுண்டா? ஒரு மணி நேரம் இருக்கைக்காக காத்திருந்த பிறகு நீங்கள் ஆர்டர் செய்த அந்த ருசியான உணவுக்காக மேலும் 45 நிமிடங்கள் காத்திருந்ததுண்டா? அந்த ஒரு மணி நேரம் 45 நிமிடங்களுக்கு பிறகு உங்கள் உணவு உங்களை வந்தடையும் பொழுது உங்கள் நிலை என்னவாக இருக்கும்? சிலர் காத்திருந்ததால் கோபமடைந்திருக்கலாம் சிலர் முறுமுறுத்துக் கொண்டிருக்கலாம் மேலும் சிலர் நொறுக்குத் தீனிகளைத் தின்று, பானங்களைப் பறுகி தங்களின் பசியையே தீர்த்திருக்கலாம். மொத்தத்தில், ஒரு சூழ்நிலையை எப்படி எதிர்நோக்குவது உன் கைகளிலேயே உள்ளது என்பதை இந்த எடுத்துக்காட்டின் மூலம் காணலாம். அதேபோல எப்படி இயேசுகிறிஸ்துவிற்குள் நம்பிக்கையாய் முழுமனதோடு காத்திருக்கப் போகிறோம் என்பதை நாமே முடிவுச் செய்ய வேண்டியதாக உள்ளது.

நாம் விரும்பி ஆர்டர் செய்த உணவு நம்மை அதிருப்தியாக்கலாம். ஆனால் தேவனால் ஆசிர்வதிக்கப்பட்ட நம்பிக்கை ஒருகாலும் நம்மை அதிருப்தியாக்காது. காரணம் நமது ஆசிர்வதிக்கப்பட்ட நம்பிக்கையே இயேசுவானவர்தான் (தீத்து 2:13). பரிசையல்ல, அந்த பரிசை நமக்கு அளிப்பவரையே நாம் நாட வேண்டும். “இதோ, சீக்கிரமாய் வருகிறேன்!” என இயேசுகிறிஸ்து கூறியுள்ளார் (வெளி 22:7, 12). இந்த 40 நாட்கள் உபவாச ஜெபம் முடிவடையும் இவ்வேளையில் எனது எதிர்பார்ப்பானது நீங்கள் எப்பொழுதும் எக்காலமும் தேவனுடைய ஆசிர்வாதத்தின் நம்பிக்கைக்காக வாஞ்சிப்பீர்கள் என்பதே.

“நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், நம்மிடத்தில் அன்புகூர்ந்து நித்திய ஆறுதலையும் நல்நம்பிக்கையையும் கிருபையாய் நமக்குக் கொடுத்திருக்கிற நம்முடைய பிதாவாகிய தேவனும், உங்கள் இருதயங்களைத் தேற்றி, எல்லா நல்வசனத்திலும் நற்கிரியையிலும் உங்களை ஸ்திரப்படுத்துவாராக” (2 தெசலோனிக்கேயர் 2:16-17).

ஆமென். வாரும், இயேசுகிறிஸ்துவே.

தேசத்தின்மீது இயேசு கிறிஸ்துவினுடைய கர்த்தர்த்துவத்தை பிரகடனப்படுத்துவோம்.

தேவனே, உமது ஆட்சியும் இராஜ்யமும் மலேசிய தேசத்தையும், உலகிலுள்ள எல்லா தேசங்களை ஆட்கொள்வதாக!

# நாள் 40

15 செப்டம்பர் 2017, வெள்ளி

தேவனுக்கு பயந்து தேசத்தை ஆட்சி செய்ய புதிய தலைமுறை தலைவர்கள் நியமிக்கப்பட அறிக்கையிடுகிறோம்.
அரசியல், பொருளாதாரம், சமூகம், சட்டம், இராணுவம், கல்வி, ஊடகம், கலை என சமுதாயத்தின் எல்லா படிநிலைகளிலும் தேவனுடைய இராஜ்யம் வருவதாக. தேவ பிள்ளைகள் பெரிய பதவிகளில் அமர்த்தப்பட்டு உம்முடைய நோக்கமும் சித்தமும் இத்தேசத்தில் நிறைவேற உம்முடைய நாமத்தினால் ஆணையிடுகிறோம்.
ஒவ்வொரு நாவும், ஒவ்வொரு கோத்திரமும் உம் நாமம் பாடி துதிக்க வேண்டும்!

அப்பொழுது பூமி தன் அருவடையைத்தாரும். நமது ஆண்டவரும் நம்மை ஆசீர்வதிப்பார. Then the land will yield its harvest and God our God will bless us.

உம்மால் கூடாதது எதுவுமில்லை! அதிசயங்களையும், அற்புதங்களையும், அறிகுறிகளையும் காணும் காலங்களுக்குள்ளாக நாங்கள் கடந்து வர வேண்டும்! மலேசியா தேசத்தில் இயேசுகிறிஸ்துவின் சபை ஆசிர்வதிக்கப்பட வேண்டும் கிறிஸ்தவர்களாகிய நாங்கள் எங்கள் தேசத்திற்கு ஆசிர்வாதமாக அமைய வேண்டும்!

பிதாவாகிய தேவனே, எங்கள் மேல் மனமிரங்கி, எங்களை ஆசிர்வதித்து, உமது ஒளியை எங்கள் மேல் பிரகாசிக்கப்பண்ணும்! உமது வழிகள் இத்தேசமெங்கும் பரவ வேண்டும், உமது இரட்சிப்பை அனைவரும் பெற்றுக் கொள்ள வேண்டும்!

பொறுப்புடமைப் பகுதி 8 - நாள் 36-40

ஆசிர்வாதத்தின் நம்பிக்கை (தீத்து 2:13)

சொந்த மன எண்ணம்: துன்பங்களை எதிர்நோக்க தயாராகி, ஆசிர்வாதத்தின் நம்பிக்கையை பெற்றுக் கொள்ளுதல்.

பிரகடனம்: தேவன் மேல் என் முழு கவனத்தையும் வைத்து, இந்த பந்தயத்தை வெற்றிகரமாக ஓடி முடிப்பேன்.




**உன்னிலிருந்து துவங்குகிறது**

- நம் தேசம் போராட்டத்தின் காலகட்டத்திற்குள்ளாக கடந்து வந்துக் கொண்டிருக்கிறது. இந்த சோதனைகளை மேற்கொள்ள எவ்வகையான யுக்திகளை நாம் கையாள வேண்டும்?

☑ ஏற்றவற்றில் குறியிடுக.

1 >குறைவு, 5 >சுமார், 10 >சிறப்பு

கடந்த 5 நாள்கள் உன் அடிமைத்தனத்தை கணிக்கும் அளவு

| | |
|---|---|
| 1. மத கட்டுப்பாடுகளால் மிரட்டப்படுதல் | ☐ 1<br>☐ 5<br>☐ 10 |
| 2. சூழ்நிலைகள் மோசமாகினால் வேறு இடத்திற்கு இடம்பெயரும் எண்ணம் | ☐ 1<br>☐ 5<br>☐ 10 |
| 3. சுவிஷேஷத்தை பகிர்ந்துக் கொள்ள தயார் | ☐ 1<br>☐ 5<br>☐ 10 |
| 4. ஒரு சிறு குழுவிற்குள் ஒப்புக் கொடுத்தல். | ☐ 1<br>☐ 5<br>☐ 10 |

ஆராய்ந்து பார்த்தால், இயேசுவுக்காக நீ இந்த பந்தயத்தை ஓட எந்த அளவுக்கு தயாராக உள்ளாய் என்பதை பார்க்கலாம். உன் தயார் நிலை எந்த நிலையில் உள்ளது?

மதிப்பீடு:

## பொறுப்புள்ள கணக்கொப்புவிப்பு (உன் துணையாளருக்கு/சிறு குழுவிற்கு).

**சோதனைப் பட்டியல் ☑**

**வேத வாசிப்பு நாள் 36-40 ☐ நாள் ____ வாசிக்கவில்லை ☐ ____ முடிக்கவேண்டியது**

**ஆவிக்குரிய குறிப்பேடு - ஐந்து நாள்கள் உபவாச ஜெபத்தில், நீ தேவனுடன் கற்றுக்கொண்ட இடைபடுதலின் அனுபவத்தை எழுதுக.**

______________________________

______________________________

**செயல் திட்டம் - புறப்பட்டுப்போய் மலேசிய தேசத்துக்காக சீஷர்களை உருவாக்கவேண்டும்.**




**உன் சிறு குழு பின்வறும் காரியங்களை செய்ய வேண்டும்:-**

1. **3 வாலிபர்களை தேர்ந்தெடுக.**
2. **ஒவ்வொருவரையும் தனித்தனியாக சந்தித்து, அவர்களை சீஷராக்குங்கள்.**
3. **அந்த அனுபவத்தை உங்கள் சிறு குழுவோடு பகிர்ந்துக் கொண்டு அவர்களையும் அவ்வாறு செய்யுமாறு உற்சாகப் படுத்துங்கள்.**

# ஒப்புரை/நன்றி

இந்த கையேட்டை அச்சிடுவதற்கு பெரும் பங்காற்றிய கீழ்காணும் அனைவருக்கும் எங்களின் நன்றியை ஏறெடுக்கிறோம்.

[ நம்பிக்கையற்றோருக்கான நம்பிக்கை ]
*அருட்திரு. டாக்டர். இயூ ஹங் செங்*

[ வேதாகமத்தை ஒரு வருடத்திற்குள் வாசித்து முடிப்பது ]
*டாக்டர். கூ கேய் ஹப்*

[ உபவாசித்து ஜெபிக்க வேண்டிய அவசியம் என்ன?
& தேவனிடம் கவனித்துக்கேட்பது ]
*தான் போஹ் கியான்*

[ பொறுப்புடைமைப் பகுதி ]
*அருட்திரு. லூயி கோக் கிம்*

## தினசரி தியானம்

நாள் 1-5 அருட்திரு. ஆண்ட்ரூ லிம்
நாள் 6-10 போதகர் டெனிஸ் லூ
நாள் 11-15 தான் போஹ் கியான்
நாள் 16-20 அருட்திரு. சாலமன் புலான்
நாள் 21-25 அருட்திரு. ளு. அருளான்டு
நாள் 26-30 போதகர் கிரேஸ் லீ
நாள் 31-35 டாக்டர் லிம் பொஹ் ஆன்
நாள் 36-40 போதகர் யோங் சீ வெங்

## தினசரி ஜெப குறிப்புகள்

*போதகர் லீ யூ மெங்*
*லூக்ரிஸ் லூ*
*போதகர் ஜோசபின் லூ*

## ஆலோசகர்

*அருட்திரு. ஏன்டி சி*

## பதிப்பாசிரியர்கள் & திருத்தம் செய்தவர்கள்

*லீ சூங் சான்*

## மெழி பெயர்த்தல் செய்தவர்

*போதகர் ஜெயசீலன் யோவான்*

## அட்டை வடிவமைப்பாளர்

*டேவிட் நாவா*

## “லேயாவ்ட்” வடிவமைப்பாளர்

*ரெபெக்கா சொங்*

# 40 நாள் உபவாசம் & ஜெபம்

NECF MALAYSIA

NATIONAL EVANGELICAL CHRISTIAN FELLOWSHIP (NECF) MALAYSIA
No. 32, Jalan SS2/103, 47300 Petaling Jaya, Selangor, Darul Ehsan.
Tel: +603-7727 8227 / Fax: +603-7729 1139

7 ஆகஸ்ட் -15 செப்டம்பர் 2017